Oriental Manuscripts Library
MAY 1916
MADRAS

உ

குமரன் துணை

# குமண சரித்திரம்.

மூலமும் அரும்பதவுரையும்

இவை

மதுரை "வித்தியாபாநு" பத்திராதிபரும்

சேற்றூர் சமஸ்தான வித்துவானுமாகிய

## மு. ரா. கந்தசாமிக் கவிராயரால்

இயற்றப்பெற்று

முறையூர்

ஸ்ரீமாந். பழ. சி.

## சண்முகஞ்செட்டியாரவர்கட்கு

அவர்களது வள்ளன்மைக்கு அறிகுறியாக
சமர்ப்பிக்கப்பெற்றன.

இரண்டாம் பதிப்பு.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலை.

விலை அணா 8.

*Copy Right Registered.*

1913

உ

குமரன் றுணை.

# பதிப்புரை.

சந்தனப் பொதியத் தடவரை முனிக்குச்
செந்தமிழ் தெருட்டிய செவ்வேட் பணிவாம்.

குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனு நான்கெல்லையினிருந் தமிழகத்தில் சேரசோழபாண்டிய ரென்னும் முடியுடைவேந்தர்களைப் போலவே செந்தமிழ் வளர்த்துச் சிறப்புற்றோங்கிய சிற்றரசரும் பலரிருந்தன ரென்பது பண்டைநூலாராய்வார் பலருமறிவர். இச்சிற்றரசர் புலருள்ளும் தலைக்கொடையாளியென்ப் புலவர் பாடும் புகழுடையோனாகிய குமணன் என்பவனது அற்புத சரிதத்தை யானறிந்தவுடன் என்னுள்ளத் தெழுந்த அவாமிகுதியால் என்சிறுமையையு மவன் பெருமையையுஞ் சீர்தூக்காது நாடக செய்யுளாகச் செய்தேன்.

இங்ஙனஞ் செய்யுமாறு என்னைத் தூண்டியது சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் மகாமகோபாத்தியாயர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்த "புறநானூறு" என்னும் நூலேயாகும். என்னை? அந்நூலை யான் ஆராய்ந்து வருங்கால் இக்குமணனைப் பற்றிய பாடல்களைப் படித்தவுடன் இவனது அரும்பெருங் குணஞ்செயல்கள் யாவும் என்னுள்ளத்திற் றங்கி வியப்பும் மகிழ்ச்சியும் விளைத்தமையாலென்க.

இங்ஙனம் இயற்கை நலம்வாய்ந்த இக்குமணசரித்திர நூல் பாண்டிநாட்டு முறையூரதிபரும், அருங்கலைவிநோதரும், பெருங்கொடையாளியும், என்மாட்டுப் பேரன்புடையாரும் ஆகிய ஸ்ரீமான் பழ. சி. சண்முகஞ்செட்டியா ரவர்கட்கு உரிமையாக்கப் பெறுதலால் செயற்கை நலமுங் கொண்டிலங்குவதாயிற்று.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஐந்தாம் வருஷோத்ஸவக் கொண்டாட்ட காலத்தில் விஜயஞ்செய்திருந்த வித்வஜ்ஜன சேகரரும், தமிழ்க்கடலுட் குளித்து நூன்மணிகள் பலவற்றை யெடுத்துக் கூறிய

மதிச்சாணைபாற் கடைந்து மாசுபோக்கி உண்மைப்பொருட் சுடரோங்கப் புரிந்து பாரதிதேவிக்குப் பலபல அணிகளாக்கி யணிவித்து மகிழ்ந்துவாழும் பேறுபெற்றவர்களும், ஆகிய ஸ்ரீமத் மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்கள் சில கவிகளைக் கேட்டு மழலைமென் மொழிக்கு மகிழ்தந்தை போன்று மலர்முகங்காட்டி மதுரைத் தமிழ்ச்சங்கப் பெருஞ்சபையில் ஸ்ரீமத் பாண்டித்துரை ஸாமியவர்கள் அக்கிராசனத்தில் அரங்கேறப் புரிந்தார்கள். இவர்கள் செய்த இப்பெருநன்றிக்கு எழுமையுங் கடப்பாடுடையேன்.

பின்னர் இதனை யொரு புத்தகமாக அச்சிடுவித்து அரும்பதவுரையுடன் வெளியிட்டேன். அப்புத்தகம் முற்றும் செலவாயின. தமிழபிமானிகள் பலர் இப்புத்தகம் வேண்டி யெழுதினார்கள். முற்பதிப்பில் நூலிறுதியில் அரும்பதவுரை பதிப்பிடப் பெற்றிருத்தலினும் அவ்வப்பக்கங்களினிறுதியில் அமைக்கப் பெறுதல் நலமெனவும், ஆங்காங்கு விஷயக்குறிப்புகளும் சேர்க்கவேண்டு மெனவும் சில நண்பர்கள் கூறியவாறே செய்விக்கப் பெற்று இந்த இரண்டாம் பதிப்பு வெளிவருவதாயிற்று.

இதனை அச்சிடும் வகையிலுளதாய பொருட்செலவு முழுதும் இதன் உரிமையாளராகிய ஸ்ரீமாந். பழ. சி. சண்முகஞ்செட்டியாரவர்களே யுதவினார்கள். இவர்கள் நீடு வாழ்க.

எனது அறிவின்மையானும் அச்சிடுவோரானும் நேர்ந்துள குற்றங்கள்போக்கிக்குணங்கொண்டுவாழ்தலே கற்றறிந்த மேலோர் கடன்.

குமரக்கடவுள் திருவடிகளே சரணம்.

---

விவேகபாநுப்பிரஸ்<br>மதுரை<br>24-6-13.

இங்ஙனம்<br>மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.<br>வித்தியாபாநுப் பத்திராதிபர்.

உ

குமரன் துணை.

# உள்ளுறை.


க. சாற்றுக்கவிகள்.

உ. பதிப்புரை.

ங. தமிழ் முகவுரை.

ச. குமண வள்ளலைப் பற்றிய பாடல்கள்.

ரு. ஆங்கில முகவுரை.

சு. பொருளடக்கம்.

எ. உரிமையுரை.

அ. குமண சரித்திரம் மூலமும் அரும்பதவுரையும்.

உ

குமரன் துணை.

# சாற்றுக் கவிகள்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ப்ரும்மஸ்ரீ
மஹாமகோபாத்தியாயர்

## வே. சாமிநாதையரவர்களியற்றியது.

நறையூரும் புகழ்க்குமரன் சரிதையைச்செந் தமிழ்யாப்பா
னவிற்றி யிந்தத்
தறையூரும் புகழ்ப்பாண்டித் துரைமதுரைத் தமிழ்ச்சங்கஞ்
சார்ந்து சாற்றி
முறையூர்ச்சண் முகவணிகர் திலகனுக்கம் முறையுரித்தா
முறைசெய் தானற்
றுறையூர்செந் தமிழ்க்கவிஞன் கந்தசா மிப்பெயரோ
டோன்றன் மன்னே.

---

திருநெல்வேலி ஜில்லா வெள்ளகால் ஸ்ரீமத்

## வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்களியற்றியவை.

வண்மை யாளருட் டலைக்கொடை யாளிமண் ணதனி
லுண்மை யாவிவ னேயெனத் தலைமையே யுதவு
மொண்மை யார்கும ணன்சரித் திரத்தைநன் றுரைத்தான்
தண்மை யார்முக மதிக்கந்த சாமிமே தகவே.

கந்த சாமிமா லாதரங் கனிந்தளித் திட்ட
சந்த மேவிய குமணவான் சரித்திரப் பாவை
யுந்து பேரன்பி னொடுதனக் குரிமையாக் கொண்டான்
ஆந்து ஞாலம்புகழ் முறைசையூர் முதல்வன்சண் முகவேள்.

உ

சிவமயம்.

# குமண சரித்திரம்.

## முகவுரை.

முற்காலத்தே நம் தமிழ்நாட்டில் விளங்கிய தமிழ் வள்ளல்களிலே, பேரரசர்களாகிய சேர சோழ பாண்டியரே யன்றி, சிற்றரசரும் பிரபுக்களும் எண்ணிறந்தவர்கள் இருந்தனரென்பது பலரும் அறிவர். இவ்விஷயம், புறநானூறு பத்துப்பாட்டு முதலிய சங்கவிலக்கியங்களிற் பழக்கமுடையோர்க்கு எளிதில் விளங்கத்தக்கது. கடைச்சங்கநாளில், வள்ளல்களாய் விளங்கிய பெருமக்களிலே, தலைசிறந்தவராகக் கூறப்படுவோர்:—பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் இவ்வெழுவருமேயாவர். இனி இவ்வெழுவரையடுத்து, இவரைப்போலவே சீருஞ் சிறப்பு முடையாகப் புகழப்படுவோர்:—குமணன் நல்லியக்கோடன் என்னும் பெருமக்களென்று தெரிகிறது. இதனை,

> "எழுவர் மாய்ந்த பின்றை யழிவர்ப்
> பாடி வருநரும் பிறருங் கூடி
> இரந்தோர் அற்றந் தீர்க்கென விரைந்திவண்
> உள்ளி வந்தனென் யானே" (புறம்—158)

எனக் குமணனை நோக்கியும்;

> "எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
> விரிகடல் வேலி வியலகம் விளங்க
> ஒருதான் றாங்கிய உரனுடை நோன்றாள்
> ஓவியர் பெருமகன்" (சிறுபாண்).

என நல்லியனை நோக்கியும்—பழைய புலவர்கள் கூறுவதனால் உணரலாம். இவருள், குமணன் என்னும் கோமானது குணவமுதங்களை யாராய்ந்துகளித்தலே இக்குமணசரித்திர நூலுக்கு ஏற்பு

டைத்தாதலால், பழைய நூல்களிற் கண்ட இவனது அருமை பெருமைகளைமட்டும் சிறிது ஆராய்வோம். ஒப்புயர்வற்ற திப்பிய மக்களின் குணஞ்செயலாதி வைபவங்களை யாராய்தல், உலகம் நல்வழியிற் செல்லற்கு முக்கிய ஏதுவன்றோ?

பழைய நூல்களைத் திறந்துபார்ப்போரொவ்வொருவரும், அக்காலத்திருந்த வள்ளற்றலைவர்களின் மனநிலையையும், புலவர்பெருமக்களின் அருமைபெருமைகளையும்கண்டு பெரிதும் அதிசயமுறுகிறார். "உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" என்னும் திருவாக்குக்கு இலக்கியங்கள் அங்கேதான் மிகுதியாகக் காணப்படும். அத்தகைய நூல்களிலே, தலைசிறந்ததாய புறநானூற்றில், பண்டைப்பெருமக்களின் வரிசைகளிலே, குமணவள்ளலும்புகழப்பட்டுள்ளான். அந்நூலில்இவ்வள்ளலைப்பற்றி வரும் பாடல்கள் எட்டாகும்.* இவற்றில், இவ்வள்ளல் "முதிரம்" என்னும் மலைக்குரியவனாகக் கூறப்படுகின்றான். முதிரம் என்னும் பெயருடன் ஒருமலையிருப்பதாகத் தெரிந்திலதாயினும், கோயம்புத்தூர்ஜில்லா உடுமலைப்பேட்டைத் தாலூகாவில் "குதிரைமலை" என்பதொன்று உண்டென்றும், இம்மலைப் பக்கத்தூர் "கொழுமம்" என்பதென்றும், இக்கொழுமமே குமணபுரி என்றும் பெருவழக்குள்ளன. இவற்றைநோக்கும்போது, குமணனுண்டவிடம்மேற்காட்டியகுதிரைமலையும் அதைச்சார்ந்த ஊருமாகவே கொள்ளலாம். ஏனெனில், முதிரமலை என்பது குதிரைமலை எனவும், குமணம் என்பது கொழுமம் எனவும் பிற்காலத்தே திரிதல் கூடுமன்றோ? இவற்றோடு அப்பக்கத்தே-குமணனாட்சியைப்பற்றிய பெருவழக்கும் உண்மையால், இவ்வூகம் தவறாகாது. அதிகமானஞ்சியினுடையதாகக் குதிரைமலையென்ப தொன்றிருந்தது என்பது புறப்பாட்டால் தெரியவரினும், அவனாடு மைசூர்ப்பிரதேசத்ததாகலின் †அம்மலை வேறேயாம். இக்குதிரைமலையில் பழைய கோட்டை அகழிகள் உண்டென்று தெரிகிறது. இம்மலைப்பக்கத்து ஆறும் "குதிரையாறு" எனப்பெயர் கொண்டுளது.

---

* இப்பாட்ல்கள் எட்டும், தனியே இந்நூலிற் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

† ஸ்ரீ வெங்கய்யரவர்களது (புறநானூற்றுப் பதிப்பிறுதிக்)குறிப்பு.

இனி, இவ்வள்ளல் விஷயமாவமைந்த பாடல்களால் இவனது சரிதம் விசேடமாகத் தெரியவில்லையாயினும், அவை, இவனது உயர்ந்த உதாரகுணத்தை விளக்கற்குப் போதியவை என்னும்படி உள்ளன. இவனைப்பாடிய புலவர்கள் பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் என்போர். இவருள் பெருஞ்சித்திரனார், கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதிகமான் நெடுமானஞ்சியையும், பெருந்தலைச் சாத்தனார், அக்கடை வள்ளலார் காலத்து இளவிச்சிக்கோ இளங்கண்டீரக்கோ என்பவரையுந் தனித்தனியே பாடியிருக்கின்றனர். இதனால், அவ்விரு புலவராலும் பாடப்பட்ட குமணன், கடைவள்ளலார் காலத்தும் அவர்க்குப் பின்பும் இருந்தவனென்பதும், மிகுதியும் பிற்காலத்தவ னல்லனென்பதும் நன்கு விளங்கும். இவனைப்பற்றிய பாடல்கள், இவ்வள்ளல் இரவலர்க்கும் புலவர்க்கும் வேண்டிய வேண்டியாங்களித்து அவர் வறுமைகளைந்து வாழ்வித்த மாட்சியை நன்கு விளக்கி நிற்கின்றன. பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் வெளிமான் என்பவனிடம் பரிசிற்குச் சென்றபோது, அவ்வெளிமான் தன் தம்பிமூலம் சிறிது கொடுத்தனுப்ப; அதைப் புலவர் பெற்றுக்கொள்ளாமல் கோபித்துப் புறப்பட்டுக் குமணனிடம் பரிசிற்கு வந்தனரெனவும், குமணன் அவருக்கு யானைகளும், வேண்டிய செல்வங்களும் கொடுத்து மரியாதைசெய்து விடுத்தனனெனவும், அம்மரியாதையுடன் புலவர் தம்மை அவமதித்த வெளிமானிடஞ்சென்று,

"இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்;
இரவலர் உண்மையுங் காண்; இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங்காண்; இனி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை எம்பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே."

என்னும் பாட்டைக்கூறி, அவன்முன் குமணன்வரிசையைப் புகழ்ந்து கூறினரெனவும் 162-ம் புறப்பாட்டால் விளக்கமாம். இதனால், அக்காலத்தே "புலவர்பாடும் புகழுடையோனாய்" விளங்கிய

வன் குமணனையாதல்காண்க. இக்குமணவள்ளல் வழங்கியபெரும் பரிசிலோடு, பெருஞ்சித்திரனார், (தாம் கூறியவாறு)

"பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்து தினவாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீருலை யாக ஏற்றி மோரின்று
அவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள்"

என்றபடி யிருந்த தன் மனைவிபாற்சென்று, அவள்முன், குமணனால் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தைக்காட்டி,

"நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லார்க்குங் கொடுமதி மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே"

என்று, எல்லார்க்கும் வேண்டிய வேண்டியபடி அளித்து நல்வாழ்க்கை செலுத்தும்படி கூறினரெனவும் புறப்பாடல்களால் தெரியவருகின்றன. இவற்றால், "இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல், குலனுடையான் கண்ணே யுள" என்னும் தெய்வப்புலவர்வாக்குக்கு இலக்கியமானவன் குமணவள்ளல் என்பது மலையிலக்காம்.

இனி, குமண வள்ளலைப்பற்றி மற்றொரு புலவராகிய பெருந்தலைச்சாத்தனார் பாடிய பாடல் இரண்டேயாம். இவ்விரண்டு பாடலையும், இக்குமண சரிதம் புனைந்ததற்கு "அடிப்படை" என்

ணலாம். நம் குமணவள்ளலுக்குத் தம்பியொருவன் "இளங்குமணன்" என்றிருந்தான். இவன், தன் தமையன் தனியே சீருஞ்சிறப்புங்கொண்டு தமிழகம்புகழ வாழ்ந்துவருதலிற் பொறாமையுடையனாய், அதுகாரணமாகப் பலசூழ்ச்சிகளுஞ் செய்து, முடிவில் தன் தமையனை நாட்டைவிட்டோட்டிக் காட்டிற்றுரத்திவிட்டான். அதுமட்டோ! குமணன் ஓடியொளித்துள்ள காட்டிற் சென்று, அவன் தலையைக் கொணர்வோர்க்குப் பெரும்பரிசு தருவதாகவும் பறையறைவித்தான். அந்தோ! முற்காலத்தே அருங்குணமும்பெருங்கருணையும் வாய்ந்து விளங்கிய தமிழ்வள்ளலார் பெரும்பாலாரின் நிலையும் இவ்வாறே முடிவில் அமைந்தன. பாரியனைய வரையாவீகைப் பாரிமுதலிய பெருமக்களின் அந்திய நிலையைப் பாருங்கள். ஆனால் அவர்கள் அப்போதுபட்ட பெருந்துன்பங்களெல்லாம் இப்போதோ அழியாப்புகழாகப் பரிணமித்துள்ளன. இனி, இங்ஙனம் காடுபற்றியிருந்த குமணனிலையறியாது, அவன்பாற் பரிசு பெறும்பொருட்டுப் பெருந்தலைச்சாத்தனார், அவனிருந்த காட்டிற் சென்று அவனைத் தேடிக்கண்டு பாடிப் புகழ்ந்தார். அப்பாடல் "ஆடுநனிமறந்த" எனவரும் புறப்பாட்டு 164-வதாம்*. இப்பாடற்கவன் இரங்கினனாயினும், அவர்க்கவன் என்செய்யக் கூடும்? அங்ஙனமன்று. குமணவள்ளல் உடனே தன் கையிலிருந்த வாளைக்காட்டி, "தன்றலை கொணர்வோர்க்குப் பெரும்பரிசு தருவதாகத் தம்பி வெளியிட்டிருத்தலின், இதனால் தன் தலையை வெட்டிக்கொண்டு தம்பிபாற் சென்று வேண்டியன பெறுதிர்" என்று வாளைப் புலவர் கையிற் கொடுத்தனன். இந்நிலையில் என் செய்வர் புலவர்! "உயிர் நீப்பர் மானம் வரின்" என்றபடி, புலவரைக்காக்கலாகாத் தன் எளிமைநிலையை நோக்கி உயிரையுமளிக்கத் துணிந்த நம் குமணவள்ளலின் அரும்பெருங் கருணையை நினைக்குந்தோறும் உள்ளம் நெக்கு நெக்குருகி, பெற்ற வாளைவாங்கிக் குமணனிடம் விடைபெற்றுக் கொண்டு, அவன் றம்பி இளங்குமணன்பால் வந்து,

"கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றென னாகக் கொன்னே

---

* இப்பாடல், இக்காலத்துச் சிதைந்து வழங்குகிறது.

பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே, தலையெனக் கீய
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
நாடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே"

என நிகழ்ந்த விஷயத்தை யெல்லாம் கூறி நின்றனர். என இவ்வளவு வரையே புறநானூற்றி லுள்ளது. இதற்குமேலுள்ள கதைத்தொடர்ச்சி அந்நூலிற் காணப்பட்டிலது. ஆயினும், அத்தொடர்பு, கர்ணபரம்பரையில் ஒரு படியாக வழங்கிவருகின்றது. அஃதாவது:—குமணன்பாற் புலவர் * பரிசிற்குச் சென்றபோது, அவ்வள்ளல், தன் எளிமை நிலைக்குப் பெரிதும் இரங்கி, 'வந்த புலவர்க்கு என் செய்வது' என்பதறியாது திகைத்து நின்றான். அப்போது, புலவர் குமணவள்ளலை நோக்கி,

"ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத்—தேறின்
வறியையே யானாலும் என்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு"

என அவனைப் புகழ்ந்து கூறினர். அப்போது அவ்வள்ளல், "தன் தலை கொணர்வோர்க்குப் பெரும் பரிசு தருவதாகத் தன்தம்பி கூறியிருத்தலின், புலவர்க்குத் தன்றலையையே கொடுத்து அவர் மிடிமையைக் கெடுப்போம்" எனத் துணிந்து, தன் கையிலிருந்தவாளை நீட்டிப் புலவரை நோக்கி,

"அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிக்கைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே"

---

* இப்புலவர், பெருந்தலைச்சாத்தனாராயினும், "ஒப்பிலாமணிப்புலவர்" என்னும் பெயருடன், தனிப்பாடற்றிரட்டிற் காணப்படுகிறார்.

"வெம்புங் காலே வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர் நாடு முலகினுந் தேடினும்
எம்பி போலெனக் கியாவ ருரியரே"

என்று கூறி, தன் தலையைக் கொய்துகொண்டு தம்பிபாற் செல்லு மாறு பணிக்க, புலவர் குமணனது அரும் பெருங் கருணைச் செயலைக்கண்டு வியப்பு முவப்புமுடையராய் அவனைப்புகழ்ந்து, கொடுத்த வாளை மட்டும் பெற்றுக்கொண்டு விடைபெற்றுச் சென்றனர். சென்று மாந்தை என்னும் ஊரிலிருந்த, வினைத் திட்ப மிக்க சிற்பி யொருவனைக் கண்டு, அவனை,

"மாந்தையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்"

என்று புகழ்ந்து, அவனை, குமணவள்ளல் தலைபோன்றதொரு பொய்த்தலை பண்ணித்தரும்படி வேண்ட, அவ்வாறே, கண்டோர் அதிசயிக்கும்படி பொய்த்தலை செய்து தந்தனன். அதனைப் பெற்றுக்கொண்டு, இளங்குமணன்பாற் சென்று அவற்கு அத்தலையைக் காட்டி விஷயங்களை அறிவித்து நின்றார். அப்பொய்த் தலையை அவன் கண்டதும், அவனறியாதே, "சகோதர வாஞ்சை" என்னும் தன்னேரில்லாப்பாசம் கொடியோனை அவனையும் பிணிக்க, "என் செய்தேன் பாவி! அந்தோ" என்று அரற்றி வீழ்ந்தான். இவ்வாறு, இளங்குமணன் தன் தமையன்பாற் பேரபிமானமுற்று அழுதரற்றுவதுகண்ட புலவர், உண்மகிழ்ந்து, அவ்விளையோனைச் சிறிது தேற்றி, பற்பல சூழ்ச்சிகளால், அவன் தமையனுயிர் பெற்றெழச் செய்விப்பது போல நடித்து, இளங்குமணற்குக் குமணவள்ளலை உயிருடன் காட்டிக் கொடுத்ததோடு, அவ்வள்ளலே முன்போல அரசுவீற்றிருந்து உலகத்தை வாழ்விக்கும்படியும் செய்தனர்—என்பதே அக்கதைத் தொடர்ச்சி.

இக்கர்ண பரம்பரைகளில் சிற்சில மாறுபாடுகள் உண்டேனும், பொதுவில், அவை குமணவள்ளலது உயர்ந்த பெருங்குணங்களையே விளக்கி நிற்பனவாம். இத்தகைய கருணை வள்ளல் விளங்கிக் கீர்த்தி பெற்றது நம் தமிழகம் எனின், அதற்கு வேறொரு பெருமையும் அதிகமாக வேண்டுமோ! அவ்வள்ளலது மனநிலையின் மாட்சியாலன்றோ, அவன் புகழ் எல்லாவுள்ளத்தையும் கொள்ளைகொண்டு நிற்கின்றது? ஏனைய வள்ளலாரின் வரலாற்றினும் இக்குமண வள்ளல் வரலாற்றை நம்மவர் நன்கு தெரிந்திருப்பதற்குக் காரணம், அவனது உண்மைப் புகழேயன்றோ? இனி உலகமுள்ளவரையும் அவன்புகழ் நிலைத்து நிற்கவும் ஐயம் இல்லை.

இத்தகைய உத்தமமக்களது சரித்திரங்களை நன்கு பரிசீலனை செய்து வெளியிடுவது, ஜனசமூகவாழ்வை ஒழுங்கும் உயர்வும் பெறச்செய்தற்கு முக்கிய ஏதுவாம். இதுவிஷயத்தில் மேனாட்டாரது அருஞ்செயல்கள் கவனிக்கத்தக்கன. உயர்ந்தவழிகாட்டிகளாகிய பழைய பெரியோர்களது குணநுபவஞ் செய்வதால் உண்டாகும் நற்பயன்களை, நம்மினும், மேனாட்டார் மிகுதியும் அறிந்தவரென்பதில் ஐயமில்லை. பழைய நூல்களிற் காணும் தமிழ்ப்பெரியோர் சரிதங்கள் எத்தனையோ அருமை பெருமை வாய்ந்துள்ளன! அவற்றையெல்லாருமறிய வெளியிடத் தொடங்கின், உத்தம புருஷர்க்காக, பிறநாட்டு இலக்கியங்களினின்று மேற்கோள்காட்டவும் நேருமா? ஆதலால், ஆண்மைக்கும் வாய்மைக்கும் ஒழுக்கத்திற்கும் கொடைக்கும் பிற உயர்குணங்கட்கும் ஆன்மத்தியாகமும் செய்த புருஷ சிம்மங்களது திவ்ய சரித்திரங்களில், பழைய நூல்களில் உள்ளனவற்றை ஆராய்ந்து வெளியிடுவது இன்றியமையாததாகும்.

மதுரை "விவேகபாநுப்" பத்திராதிபரும் சேற்றூர் சமஸ்தான பரம்பரைக் கல்வியாளர் வழித்தோன்றலும், நாவன்மையும் பாவன்மையு நன்கு படைத்தவரும், தேசாபிமானியும், என் ஆப்தருமாகிய *ஸ்ரீமத். மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள், தாம் சில்லாண்டுகட்கு முன்பு இயற்றி வைத்திருந்த, அருமைக்குமணவள்ளலது சரித்திரத்தை, இப்போது வெளியிட்டிருப்பது எம்போலி

* தற்போது மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபராக வுள்ளார்.

யார்க்குப் பெரிதும் மகிழ்ச்சிதருவதோடு, இஃது, பலரும் பின்பற்றுதற்குச் சிறந்த வழிகாட்டியாகவும் இருக்கின்றது. கவிராயரவர்கள் சொற்செறிவு பொருட்பொலிவுபெற ஆசுகவி பாடும் வன்மையுடையார்களென்பதும், அவர்களது கல்வித்திறனும் கூரிய அறிவும் தமிழ்நாடு நன்கறிந்ததாகலின், அவற்றை இங்கே விரித்தல் மிகையாம். அவர்கள் தம் பா வலிமையைக் காட்டுதற்கு இலக்காக, குமணவள்ளல் சரிதத்தைக் கொண்டமையால், அவ்விரண்டும்சேர்ந்து, சர்க்கரைப்பந்தரிற் றேன்மழை பெய்ததுபோல் விளங்குகிறது. இவர்கள், குமண சரித்திரத்தை 351 இனிய பாக்களால் முடித்துள்ளார்கள். இக்காப்பியப் போக்கில், குமணவள்ளல் சரிதம், புறநானூற்றுப் பாடல்களையும் வழக்கிலுள்ள கர்ணபரம்பரைச் செய்திகளையும் ஆதாரமாகக்கொண்டுளதாயினும், சரிதம் ஒருகோவையாக இனிதுசெல்லற்கு, இடையிடையே பற்றுசான கதைக்கூறுகளும் பெய்யப்பெற்றுப் படிப்போர்க்குப் பேரானந்தம் உண்டாம்படி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இவை, இந்நூலைப் படித்துவருவோர்க்கு, ஆங்காங்கே புலப்படுமாதலால் விரித்திலேன். இக்காவியத்தில் ஆளப்பட்டுள்ள செய்யுணடையின் பொலிவும், இக்காலத் தறிஞர் மகிழ்தற்கேற்ற கற்பனைகளும் கருத்துக்களும்—உண்மையாகவே நம்மவரது புகழ்ச்சிக்குரிய நிலைக்களங்களாகு மென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இந்நூலுள் மேனாட்டுக் கல்வி வல்லார்க்கேற்காத சொற்களேனும் பொருள்களேனும் காணவும் கிடையா. இத்தகைய நூல்களே, இலக்கிய வுணர்ச்சிக்குப் பெரிதும் ஏற்றனவாதலால், சிறுவர்முதற் பலரும் இதுபோன்ற நூல்களிலே பழகுதல், நாகரிகக் கல்விநிலை பெறுதற்கு முக்கிய ஏதுவாம் என்பது திண்ணம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் வருஷோற்சவ காலத்தே செந்தமிழ் வளர்க்குஞ் சீரிய வள்ளலும், அருங்கலை விநோதருமாகிய ஸ்ரீமான்-பாண்டித்துரைஸாமித் தேவரவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ், மஹாமஹோபாத்தியாயர் பிரமஸ்ரீ உ.வே.சாமிநாதஐயரவர்கள் முதலிய வித்துவசிகாமணிகள் கூடிய பேரவையிலே இந்நூல் கவிராயரவர்களால் அரங்கேற்றப்பெற்று, அப்போது எல்லாராலும் பெரிதும் புகழ்ந்து கொண்டாடப்பெற்றது.

இந்நூல் முறையூர் நகராதிபரும், வைசியகுல மணியும், செந்தமிழ்ச்செல்வரும், உலகறிந்த பெருங்கொடைவள்ளலும், தமிழ்ப் புலவர்களையும் தமிழ்நூல்களையும் பெரிதும் அருமை பாராட்டி ஆதரிப்பவருமாகிய **ஸ்ரீமாந். பழ. சி. சண்முகஞ் செட்டியார் அவர்கட்கு,** அவர்களது வள்ளன்மையின் அறிகுறியாக, சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிறது. இவ்வரிய நூலை, செட்டியாரவர்கட்கு இவ்வாறு சமர்ப்பணம் செய்தது மிகவும் பொருத்தமுடையதொன்று எனத் தமிழகம் கொண்டாடத் தடையில்லை.

இங்ஙனம், செந்தமிழ்நாட்டு உத்தம சிகாமணி சரிதத்தை உலகுவப்பப் பாடி வெளியிட்ட கவிராயரவர்களும், இந்நூல் அரங்கேறப் பெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கமும், இந்நூற் குரிமைபெற்ற செட்டியாரவர்களும் நீண்டஆயுளுடன் உலகம்புகழ வாழுமாறு எம்பிரான் திருவடித்தாமரைகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

இ ங் ங ன ம்,

**மே. சொ. சுப்பிரமணியக் கவிராயர்,**
**ஹிந்துகாலேஜ் தமிழ்ப்பண்டிதர்,**
**திருநெல்வேலி.**

---

அ

## குமணவள்ளலைப்பற்றிப் புறநானூற்றிலுந் தனிப்பாடற்றிரட்டிலுமுள்ள

# பாடல்கள்.

---

[புறநானூறு- கருஅ—கசுரு.]

**குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.**

(I) முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வி லோரியுங்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனு
மூரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியு
மீர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப்
பெருங்க னாடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவ
ணுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாசினிக் கவினிய பலவி னார்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்

அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே.

**அவனை அவர் பாடியது.**

(2) வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
தீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின் வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்
என்றாங், கிருவர் நெஞ்சமு முவப்பக் கானவர்
கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை
யைவனம் வித்தி மையுறக் கவினி
யீனல் செல்லா வேனற் குழுமெனக்
கருவி வானந் தலைஇ யாங்கு
ஈத்த நின்புக ழேத்தித் தொக்கவென்
பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப
வுயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினுந்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலே னுவந்துநீ
யின்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
வதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்

வசையில் விழுத்திணைப் பிறந்த
விசைமேந் தோன்றனிற் பாடிய யானே.

அவனை அவர்பாடியது.

(3) உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த
முளிபுற் கானங் குழைப்பக் கல்லென
வதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
யவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் ஒளிப்பத் தண்ணெனக்
குய்க்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசின்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்
கேடின் றாக பாடுநர் கடும்பென
வரிதுபெறு பொலன்கல மெளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயி னல்குவன் பெரிதெனப்
பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்
துள்ளந் தூப்ப வந்தனெ னெள்ளுற்
றில்லுணாத் துறத்தலி னில்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழி
னுள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியு
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவ லானா ளாகி நனவி
னல்ல லுழப்போண் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
விடுத்தல் வேண்டுவ லத்தை படுதிரை

நீர்சூழ் நிலவரை யுயரநின்
சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே.

**அவனை அவர்பாடிப் பகடு பெற்றது.**

(4) நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்
புருமுரறு கவியொடு பெயல்கட னிறுத்து
வளமழை மாறிய வென்றூழ்க் காலை
மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்
கெமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலி
னன்பிலா டவர்கொன் றாறு கவரச்
சென்றுதலை வருந வல்ல வன்பின்று
வன்கலை தெவிட்டு மருஞ்சுர மிறந்தோர்க்
கிற்றைநா ளொடும் யாண்டுதலைப் பெயரெனக்
கண்பொறி போகிய கசிவொ டுரனழிந்
தருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவிநின்
றாள்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
வுயர்மருப் பேந்திய வரைமரு ணோன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குரிசி
லின்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தவென் னயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லே னாயினும் வல்லே
யென்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும வென்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் சாந்தருந்து
பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகலம்

மாணிழை மகளிர் புல்லுதொறும் புகல
நான்முர சிரங்கு மிடனுடை வரைப்பினி
னுணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப
வாளம ருழந்தநின் றானையுஞ்
சீர்மிகு செல்வமு மேத்துகம் பலவே.

**அவர் வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான்துஞ்சுவான் தம்பியைப் பரிசில்கொடுவென அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாதுபோய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடுகொடுப்பக் கொணர்ந்து நின்று வெளிமானூர்க் கடிமரத்துயாத்துச் சென்று அவர் சொல்லியது:**

(5) இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்ல
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

**பெருஞ்சித்திரனார் குமணனைப்பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.**

(6) நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயு
மெல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
றிருந்துவேற் குமண னல்கிய வளனே.

**தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.**

(7) ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்

பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

**தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைக் கண்டு அவன் தன்வாள் கொடுப்பக் கொண்டுவந்து இளங்குமணற்குக் காட்டிப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது.**

(8) மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றெனன் னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

## [தனிப்பாடற்றிரட்டு.]

1. ஆடெரி படர்ந்த கோடிய சடுப்பில்
ஆம்பி பூப்பத் தீம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ் சுவைதொறும பால்காணாமல்
குழவி தாய்முக நோக்க
மனைவி யென்முக நோக்க யாமும்
நின்முக நோக்கி வந்தனங் குமண.

2. அந்தநாள் வந்திலை யருந்தமிழ்ப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

3. மாந்தையிலே வாழு மகுடத் தியாகியுனக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

4. வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர் நாடு முலகினுந் தேடினும்
எம்பி போலெமக் கியாவ ருரியரே.

5. ஆறு பெருக்கற் றருங்கிடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியையே யானு மென்கவிளை மற்றச்
சிறியையோ சீர்க்குமண செப்பு.

—:o:—

# PREFACE.

The publication of Tamil manuscripts of great antiquity has brought to light the names of many noble personages of the Tamil land and the name of Kumana is one of them. He may be aptly styled the Karna of the Tamil classics. This great man was the liberal and wise ruler of a small principality in the southern part of the Tamil country and was a great patron of learning. Poets from all the corners of the Tamil land resorted to him for patronage. Soon, his fame spread far and wide. His brother, Ilan Kumanan grew so jealous of his increasing wealth and power that he coveted his throne. By his vile stratagems, he succeeded in gaining his object and drove him out of his kingdom. The unfortunate Kumana had to flee to the jungles for his life and there he had to wander for a long time. Ilan Kumanan would not stop there. He even went to the length of issuing a proclamation, setting a liberal prize over his brother's head It was at this crisis that Kumana was visited by Perunthalaichchattanar (பெருந்தலைச்சாத்தனார்), a poet of great name and fame. He highly appreciated the poet's abilities, but regretted very much his inability to make him suitable presents. However, his liberal mind readily found a solution. The only thing that he had about him was his trusty sword. That, he resolutely drew from his belt and, cheerfully handing it over to the poet, said "It is quite unfortunate you did not turn up during my palmy days. However, there is only one chance left for you. My brother has set a large prize on my head and so please apply this sword to my head and take it to him and you cannot fail to get ample reward." So saying, he bowed low his head before him. The poet was stunned and his admiration knew no bounds. He was so much moved with

this magnanimous quality of Kumana that he ran to his brother at once couching the incident in a beautiful verse, which forms the 165th stanza of the famous collection of (புறநானூறு). The story stops there and does not proceed further in that classical work. But we have legendary accounts carrying the story a little further, giving it a nice touch of comedy. The poet before quitting Kumana's presence is said to have addressed him thus. "Well, my friend." "Take back the head you have so liberally presented to me and carefully preserve it as my own property, until I demand that of you."

Thereupon, he went to a clever artizan in the village of Mandai (மாந்தை), through whose skilful art he managed to have a false head of Kumana made of wax and took it to Ilan Kumanan who, at the sight of it, became so much moved with fraternal love that he burst into loud tears and fell down crying, "Oh! call my brother back to me. I cannot live alone." The clever poet comforted him and pretended that he could, through the grace of Saraswati, restore his brother to life. This political sagacity and timely wit of the Tamil poet is a matter for great admiration. When Kumana was once more brought before his repentent brother, he ran towards him with tears of joy and, falling on his knees, implored him to forgive him for his shameful acts and to resume the royalty so unjustly coveted by him. From that day, they were moving like Rama and Bharata and the country once more enjoyed the peaceful and prosperous reign. The supplemental story has some old stanzas for its support in தனிப்பாடற்றிரட்டு.

It is a pity that this important and interesting incident which has few parallels in the history of other nations,

has not hitherto been made the subjects of an elaborate poem by any Tamil poet. This want has been supplied by Mr. M. R. Kandasamy Kavirayar, a talented young gentleman belonging to a heriditary family of Tamil Poets of Settur Samastanam in the Tinnevelly District. It is a happy thing to note that in the whole history of Tamil literature we have rarely come across such a gifted Tamil family wherein the father and all the three sons are good Tamil poets, except in the solitary instance of Sivaprakasar's. Mr. Kandasamy Kavirayar has sung the praises of Kumana in 351 beautiful stanzas of the Viruttam metre. The style adopted is simple and flowing and the diction pure and sublime. The author's production is not a mere attempt at versification, but genuine poetry that will not fail to excite the admiration of eniment Tamil scholars. He has considerably risen above the ordinary level of Tamil Pandits by the use of his elegant expressions and natural similes and has carefully avoided all sorts of grotesque exaggerations that are common with them.

In short, the whole poem forms a very pleasant and instructive reading and since it has had the approval of the eminent Pandits of the Tamil Sangam at the time of its Fifth Anniversary under the Presidentship of Mahamahopadhyaya V. Swaminatha Aiyar Avergal, the veteran Tamil Scholar of the day, it can be safely prescribed as a Text Book for the First-in-Arts Examination by the University authorities who can find in the work a very good specimen of fine modern poetry.

S. SWAMINATHA AIYAR,
*Secretary, Madura Tamil Sangam &*
*Editor "Viveka Bhanu."*

# பொருளடக்கம்.

## லக்தங்களி பாடலைக் குறிப்பிடும்.


அரிச்சந்திரன் ... ... ... ... கOஉ

அவைக்களத்தார் புலம்பல் ... ... ... உகூக

அறமும் புகழும் ... ... ... ... கOசு

இளங்குமணனரசியல் ... ... ... ... கஅக

இளங்குமணன் அவைக்களம் ... ... ... உஅO

இளங்குமணனியல்பும் பொருளாசையும் ... ... சள

இளங்குமணன் கவலையாற் புலம்பல் ... ... உஅஉ

இளங்குமணன் குமணனைப் பற்றித் தீயன் நினைத்தல் ... கஅள

இளங்குமணன் றன்னுயிர் துறப்பக்கருதல் ... ... உகூள

இளங்குமணன் தன் பிழையைப் பொறுத்து அரசு செய்ய
வரும்படி குமணனை வணங்கிக் கூறல்... ... ஙஉO

இளங்குமணன் மகிழ்ந்து செல்லுதல் ... ... ஙOகூ

இளங்குமணனின் மிகக் கொடிய சிந்தனை ... ... உOO

உரிமையாளர்வாழ்த்து ... ... ... ... ஙருக

கன்னன் ... ... ... ... ... கOங

காப்பு ... ... ... ... ... க

குமணன் உருவச் சிறப்பு ... ... ... கக

குமணன் குணச் சிறப்பு ... ... ... ஙO

குமணவள்ளலிடம்இளங்குமணன்கூறும்உலோபப்பிரசங்கம் ருரு

குமணன் சிந்தனை ... ... ... ... எரு

குமணன் தம்பிக்குக் கூறும் நற்போதனை செல்வ
நிலையாமையும் கொடையின் பெருமையும் ... எள

குமணன் றம்பிக்குக் கூறும் உறுதிமொழி ... ... கசங

குமணன் அரசுரிமை தம்பிக்குக் கொடுத்து மகிழ்தல் ... ககரு

குமணனறிந்துகொண்ட பேருவகை ... ... உஙO

குமணன் தவஞ்செயச் செல்லுதல் ... ... ... கஙஅ

கு[illegible] நாட்டை[illegible]தல் ... ... ... ... [illegible]

## பொருளடக்கம்.


குமணன் காட்டுக்குச் செல்வதையறிந்த நகரவாசிகளின் கூற்று ௧௧௯

குமணனைக் காண்டல் ... ... ... ௨௪௦

குமணனை வாழ்த்தல் ... ... ... ௨௪௨

குமணனும் புலவரும் அளவளாவல் ... ... ௨௪௩

குமணன் தன் தலையைத் தம்பியிடங் கொடுத்துப் பொருள் பெறும்படி புலவர்க் குரைத்தல் ... ௨௫௨

குமணன் வனத்திற்குச் சென்றபின் நகர்நிலைமை ... ௧௫௧

குமணன் கொடையை வியந்து புலவர் கூறுதல் ... ௨௫௮

குமணன்றலைபோலொன்று செய்துதரும்படிபுலவர்வேண்டல் ௨௭௩

குமணன் நகர்ப்புறஞ் செல்லுதல் ... ... ... ௧௫௫

குமணனைக் காண இளங்குமணனை யழைத்தல் ... ௩௦௮

குமண னிருக்கையை யாவரு மடைதல் ... ... ௩௧௭

குமணன் அரசாட்சி விரும்பாமை ... ... ௩௨௩

குமணன் தவம் ... ... ... ... ௧௮௦

குமணன் நகரத்துக்கு வருதல் ... ... ... ௩௨௯

குமண நகரத்தார் நகரலங்கரித்தல் ... ... ௩௩௪

குமணன் குமணபுரியை யடைதல் ... ... ... ௩௩௯

குமணன் முடிபுனைதல் ... ... ... ... ௩௪௫

குமணன் றலைக்குக் கோடி பொன்னென்றுபறையறைவித்தல் ௨௦௩

குமணன் புலவர்க்குப் பரிசளித்தல் ... ... ௩௪௯

குமணனும் இளங்குமணனும் ஒன்றி வாழ்தல். ... ௩௪௮

கொடையினாற் றீமையுண்டென்று இளங் குமணன் குமணனிடங் கூறுவது ... ௯௫

சிற்பிசெய்தபோலித் தலைத்தோற்றம் ... ... ௨௭௫

செல்வர் கடமை ... ... ... ... ௯௩

ததீசிமுனிவர் ... ... ... ... ௧௦௫

நகரம் ... ... ... ... ... ௧௫

நகரவாசிகட்குக் குமணன் தேறுதல் கூறுதல். ... ௧௪௨

நகரினர் ஏழைமை ... ... ... ... ௩௧௪

நதி ... ... ... ... ... ௧௧

நற்சகுனக் காட்சி ... ... ... ... ௨௩௭

நாடு ... ... ... ... ... ௩

| | |
|---|---|
| நூல் ... ... ... ... ... | ௨ |
| பறையொலிகேட்டுப் பாரினர் பதைத்தல் ... ... | ௨௦௬ |
| பறையறைவித்தமை குமணற்குரைத்தல் ... ... | ௨௦௯ |
| புலவர் குமணனைப்பாடல் ... ... ... | ௨௪௯ |
| புலவர் கவிகேட்ட குமணன் கூறுதல் ... ... | ௨௫௦ |
| புலவர் குமணனிடங் கூறுதல் ... | ௨௫௬ |
| புலவர் இளங்குமணனிடம் செல்லக் கருதல் ... ... | ௨௬௬ |
| புலவர் பொன் விருப்பம் ... ... ... | ௨௨௩ |
| புலவர் மாந்தைநகர் சேர்தல் ... ... ... | ௨௬௭ |
| புலவர் ஒரு சிற்பியை அடுத்து அளவளாவல் ... | ௨௬௮ |
| புலவர்க்கு யாது வேண்டுமென்று சிற்பி கேட்டல் ... | ௨௭௨ |
| புலவர் தமது பெருமைகூறித் தேற்றல் ... ... | ௨௯௮ |
| புலவராதியோர் மீட்டுங் குமணனிடங் கூறல் ... | ௩௨௬ |
| பெருந்தலைச் சாத்தனென்னும் புலவரியல்பு ... | ௨௧௩ |
| பெருந்தலைச் சாத்தனார் குமணனைக் காணச் செல்லுதல் | ௨௩௯ |
| பெருஞ்சித்திரனார் வருகை ... ... ... | ௨௨௯ |
| பெருஞ்சித்திரனார் குமணன் வண்மை கூறல் ... | ௨௩௨ |
| போலித் தலையை வாங்கிப் புலவர் கூறுதல் ... | ௨௭௮ |
| போலித் தலைகொண்டு புலவர் இளங்குமணனிடம் சேர்தல் | ௨௮௭ |
| போலித் தலையைக் கண்டு இளங்குமணன் புலம்புதல் | ௨௮௮ |
| மாவலி ... ... ... ... ... | ௧௦௧ |
| வராகமலை வருணனை ... ... ... | ௧௬௫ |
| வாழ்த்து ... ... ... ... ... | ௩௫௦ |

உ

குமரன் றுணை

# உரிமையுரை.

திருவளரும் வளமுறைசை நகருள்ளோரும்
புலவருள்ளுந் தினமும் வாழுந்
தருவளருங் கொண்டமருவுஞ் சண்முகமா
லேநினது தகுதிக் கேற்ப
மருவளருந் தொடைக்குமண சரிதவியற்
றமிழ்மகளை மணஞ்செய் வித்தேன்
உருவளரு முரிமையொடு மருவியிசை
மகப்பேறுற் றுவக்க வென்றே.

இங்ஙனம்,

மு. ரா. கி.

உ

குமரன் றுணை.

# குமண சரித்திரம்.

காப்பு.

பொருத்தமுடன் புயங்கமுனி புலிக்காலன் போற்றிசெய
நிருத்தமிடும் பொழுதருளா னிகழைந்து தொழினடத்துங்
கருத்தனிடைத் தோன்றியவற் கண்டொருகால் வணக்கங்கொள்
ஒருத்தன்மல ரடிபேணி யொருவன்மல ரடிபணிவாம். (௧)

நூல்.

மிக்ககொடை யாளியென மெய்யறிவு சாலுந்
தக்கவர் மதித்துவகை சாரவொரு வாணன்
துக்கமற நற்றலை துமித்திட றுணிந்த
அக்குமண னற்சரித மற்பினொடு சொல்வாம். (௨)

நாடு.

உலகெலாம் போற்றும் பரமனார் முன்ன ரொருபக லாலவாய்ப் பதியில்
நிலவுமா மரபு வேந்தனுள் ளயிர்ப்பு நீங்குமா றருடிருக் கவியில்
இலகிய முன்னைப் பதமெனப் பொலிய வியற்றுநற் றவத்ததா மென்று
குலவிய வான்றோர் பலபல புகழக் கொண்டது நாட்டினுட் கொங்கு.

---

௧. புயங்கமுனி - பதஞ்சலிமுனிவர். புலிக்காலன் - வியாக்கிரபாதர். ஐந்தொழில் - சிருட்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம். ஒருத்தல் - யானை, இது யானை முகத்தையுடைய விநாயகரை யுணர்த்தும். ஒருவன் - ஆட்டு வாகனமுடைய முருகபிரான், ஒரு - ஆடு. கருத்தனிடைத் தோன்றலும், அவற்கண்டு ஒருகால் வணக்கங் கொள்ளலும் இருவர்க்கும் பொது.

௨. துமித்திடல் - துண்டித்திடுதல்.

௩. வேந்தன் - சண்பகமாறன். அயிர்ப்பு - சந்தேகம், கூந்தல் மணம் இயற்கையோ செயற்கையோ என்பது. திருக்கவி - "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ்செப் பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின், மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே" என்பது.

ஆதியா மரிமுக் குலத்தினு மனலே யமைபெருஞ் சிறப்பதென் றறைவான், மோதுநீர்ச் சடையெம் முழுமுத னடுவண் முளரிநேத் திரமுது முறையால், ஓதுமக் குலத்தி னுதித்துநல் லொழுக்க முற்ற தோர் கொங்கனென் றுரைக்கும், கோதைதன் காவல் பெறுதலாற் சிறப்புக் கொண்டது நாட்டினுட் கொங்கு. (ச)

வேறு.

சேர்ந்த தோழனுய் நிதியனு கியுநமைத் தேடான்
ஓர்ந்து பாணற்கு நிதிதர வுதியனுக் குயர்பா
ஆர்ந்த சோதிய னருளின னெனவட திசையோன்
கூர்ந்த சிந்தையி னுனுறு மாசது கொங்கு. (ரு)

கடுக்கு லாவிய மிடற்றினர் சடைப்பொலி கங்கை
மடுக்கு மூமொடு மாநதிப் பெருக்கினுன் மதியோ
டுடுக்கு ழாம்வரை யோங்கிய காக்கவெண் டிசையுங்
கொடுக்கு மாமண மலிதலிற் பேர்பெறுங் கொங்கு. (சா)

சீல மாயமுந் நாட்டினுட் பாண்டியுஞ் சென்னி
தால நாடுமே கீழ்மரு வித்தனைச் சார
மேல தாகியே விளங்கிவீற் றுறலினவ் விரண்டு
கோல நாடரும் புகழ்தரத் திகழ்தருங் கொங்கு. (எ)

---

ச. அரி - சோமசூரியாக்கினி மூன்றையு முணர்த்தும். முளரி - அக்கினி. கோதை - சேரன்.

ரு. பாணன் - பாணபத்திரன். உதியன் - சேரன். உயர்பா - "மதிமலி புரிசை மாடக்கூடற், பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற, கன்னம் பயில்பொழிலால வாயின், மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க், குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ், குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க, பண்பா லியாழ்பயில் பாண பத்திரன், றன்போ லென்பா லன்பன் றன்பாற் காண்பது கருதிப் போந்தனன், மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே." என்னுந் திருமுகப்பாசுரம். வடதிசையோன் - குபேரன்.

சா. கடு - விடம். உடு - நக்ஷத்திரம்.

எ. தாலம் - பூமி. கீழ் - கிழக்கு. மேல் - மேற்கு.

ஆறு மாகட லங்கிவல் லிடங்கரு மறிய
மாறி லாவருட் டமிழ்மறை வாய்மலர்ந் தருளு
நீறு சேர்தரு நெற்றியர் மூவரு நெடிதூ
கூறு மேழ்பெருந் தலங்களைக் கொண்டது கொங்கு. (அ)

நன்கி யம்புமிக் கொங்குநன் னாட்டிடை நலஞ்சேர்
தென்கி ழக்கினூற் றியோசனைச் சதுரமத் தியமு
முன்க வின்பெறு குமணமா ராசனின் முறையாற்
பொன்கி ளர்ந்துறை குமணநன் னாடெனப் பொலியும். (கூ)

நிலமெ லாமதி தொறும்பல மழைபொழி நீராற்
பலமெ லாமிகப் பெருகிமுப் போகமும் பரவக்
குலமெ லாம்பயி லொழுக்கமுஞ் செல்வமுங் குலவ
நலமெ லாங்குழீஇ யிருப்பது குமணநன் னாடு. (க0)

நதி.

நாம்பி றப்பதற் கிடந்தரு பெரும்புகழ் நண்ணும்
ஆம்பி ரத்தினுக் கிணைகொலோ விவையென வடுத்த
காம்பி ருக்குமா மலர்த்தருக் களையெலாங் கடிந்து
வாம்பெ ருக்கொடு மலிதரு மாம்பிரா வதியே. (கக)

வேறு.

மாதங்கம் புடைபெருக்கி வாங்குதிரை முற்செலுத்தி
மீதங்கு மிரதமுநீஇ மிக்ககா லாள்கையுற்று
நாதங்கொள் சங்கடுப்ப நானிலமும் தனவாக்கி
நீதங்கொ ளரசெய்தி நிலவுமிந்த மாநதியே. (கஉ)

உண்ணூரிய பலபொருளு முளவாக்கி யளித்தெவருங்
காணும்வகை தானுமுண வாயிருந்து களிப்பித்து
நீணிலத்தில் வாழ்பவரை நித்தமொரு தாய்போலப்
பேணுதலா னிதியினிலும் பெருமையதிப் பெரியாறே. (கங)

---

அ. இடங்கர் - முதலை.

கஉ. மாதங்கம் - யானை, அழகிய பொன். வாங்குதிரை - தாவுங்குதிரை, வளைந்த அலை. இரதம் - தேர், சுவை. காலாள்கையுற்று - பதாதியைக் கொண்டு, கால்வாய்களை ஆட்சியுற்று. சங்கடுப்ப - சங்கவாத்திய மடுக்க, சங்குகளடுக்க, எனச்சிலேடைப் பொருள்கொள்க.

இன்னநதிக் கரையின்மயி லிறையவற்கு மவற்கன்பு
மன்னுமிரு மாதுலர்க்கும் வருணனுக்கு மகிழ்வெய்தத்
துன்னியநா னிலவள முஞ் சொல்லவொவ ரிவுளிநதி
தன்னையுறும் பெரியாற்றுத் தக்கணபாற் பலநகருள். (கச)

நகரம்.

குமரன் முன்னவன் முதலினர்க் கொளுமதஞ் சைவ
சமய மென்றல்போற் கொழுமமே வரதரா சபுரம்
அமையும் ருத்திரா பாளைய மெனப்பல வடுத்துக்
குமண நன்னக ரெனுமொரு பெரியனுற் குலவும். (கரு)

வேறு.

இரண்டுசகத் திரவருடத் தினுக்குமுன மரசியற்றுந்
திரண்டபுகழ்க் குமணனூறு சிறப்பின்று நினைப்பெய்த
அரண்பொலியும் பழங்கோட்டை யகழென்னு மறிகுறிகண்
முரண்குலைந்தும் பேரழகு முற்றுமுற்று விளங்குவன. (கசு)

மேயபுக ழிந்நகர மெல்லியலாட் கருகாகப்
பாயவிரு நதியுமொளி பரப்புமணி வடமானும்
நாயகமா மணிபோலு நளிர்மதிய மொளிர் பரிதி
தேயுவிழி கொளும்பரம தேவனுறை திருக்கோயில். (கஎ)

வேறு.

வழுத்து மித்தகைக் குமணநன் னாடெனு மங்கை
கழுத்து மன்னுமா மங்கல மெனச்சொலக் கனிதேன்
பழுத்த சூழலார் தருகும ணபுரிப் பதியில்
விழுத்த கும்படி யரசியற் றினனொரு வேந்தன். (கஅ)

குமணன் உருவச் சிறப்பு.

சரளக் கோவுறை தாரகை நாப்பணிற் றவளந்
திரளக்கோ தொழிக் கெழுமொரு முழுநிலாச் சீர்போல்
தரளக் கோவையின் மணிவடஞ் சலவின தயங்கிப்
புரளக்கோமுறைக் குரியவெண் குடைநிழற் பொலிவோன். ()

---

கச. இருமாதுலர் - விட்டுணு, இந்திரன். இவுளிநதி - குதிரையாறு

கசு. அரண் - காவல். முரண் - வலிமை.

கஎ. பரிதி - சூரியன். தேயு - அக்கினி.

கக. சரளம் - ஒழுங்கு. கோ - ஆகாயம். தாரகை - நக்ஷத்திரம். நாப்பண் - நடு. தவளம் - வெண்மை. கோது - குற்றம். (களங்கம்) தரளம் - முத்து. சலவின - சுற்றினவாகி. தயங்கி - விளங்கி.

முடியெ னும்பெயர் காரண மேனைய முடிகட்
கொடிவில் காரண விடுகுறி யிதற்கென வுரைக்கும்
படிவி ளங்குபல் கோள்களும் வேற்றுருப் பரித்திங்
குடனு றைந்தென மிளிர்நவ மணிமுடி யுடையோன். (உ0)

பொங்கு மாதவற் குடைதரா தரன்றற் பொன்று
தெங்கும் வாளொடு தேய்வுறு தழகினுக் கிடமாத்
துங்க மேவிய புகழ்ப்பெரும் புணரியிற் றோன்றுந்
திங்க ளாமெனப் பொலிதரு திருமுகச் செம்மல். (உக)

மிஞ்சி மேவிய வன்பெனும் வெள்ளமு மிகுத்துச்
செஞ்சே வேமலி கருணைபா கியபெருந் திரையுங்
கொஞ்சி யன்பொடு குலவின வாகிமீக் கொண்டு
விஞ்சி வீற்றிருந் திடுமிரு தடங்கர் விழியான். (உஉ)

தரும மேமலி நீதியுஞ் சகலநற் கலையும்
பொருவி லாததன் னுயிர்க்கிடர் பொருந்திய போதும்
பெருகு வாய்மையு மமுதுதே னூறு பேச்சும்
மருவும் வாயென விலங்கிய நலங்கொள்செவ் வாயான். (உங)

நெருப்புக் கண்ணினன் கரங்களால் வளைந்தன நீண்ட
மருப்புத் தும்பிகண் முதலிய துணைகொடிம் மண்ணை
விருப்பிற் றாங்கின மிளிர்புக ழென்னென மேருப்
பொருப்புக் காணிய நாணுறும் பூணுறும் புயத்தான். (உச)

வேறு.

தேவதரு வஞ்சுதரு வெனச்செலவா வாவென்னச் சுரபி செல்லப், பூவுலகிற் கடனண்ணிப் பயங்கொண்டு கருகிமுகில் போகச் செவ்வி, பாவுமலர் பற்பமுறச் சங்கமுமித் தவத்தினையாம் பணில மென்ன, ஆவலுட னிதிவாரி யளித்தளித்துச் சிவப்பேறு மணிசேர் கையான். (உரு)

---

உ0. காரணம் - முடிக்கப் படுதலையுடைமை. காரண இடுகுறி - காரணங் கருதும் பொதுத்தன்மை நீக்கித் தனக்கே யுரிமையாக்கிக் கொள்ளல். கோள்கள் - நவக்கிரகங்கள். பரித்து - தாங்கி.

உக. ஆதவன் - சூரியன்.

உச. தும்பிகள் - திக்கஜங்கள். பொருப்பு - மலை.

உரு. அஞ்சு - ஐந்து, அஞ்சுகின்ற. ஆஆ - பசு, ஆச்சரியம். கடனண்ணிப் பயங்கொள்ளல் - கடலையடுத்துப் புனல்கொள்ளல், கடன்வாங்கிப் பயப்படல். மலர் - பதும நிதி. பற்பம் - தாமரை, சாம்பல். சங்கம் - சங்க நிதி. பணிலம் - சங்கம், (பண்ணிலம்) செய்தோமில்லை.

பொன்னவிர்த்தா மரையுமொரு தாளூன்றிப் புனலினிடைப் பொருந்தி யாண்டு; மின்னிவரு மிரவிதனை நோக்கியருந் தவமியற்றி மேவர நிற்ப, ஒன்னலராப் பலசேனை யுடன்சுலவி யமருடற்றி யோயும் வேற்று, மன்னர்முடி மாலைமணங் கமகமெனப் பரிமளிக்கு மலர்ப்பூந் தாளான். (உசு)

வேறு.

எனைத்து மாநிதி யாயினு மீபவ னெனினுந்
தனைக்க ணோக்கிய மயிலனைக் கன்னியர் தங்கண்
மனத்தை யும்புனை துகிலையு மணியையு மற்றும்
அனைத்தை யுங்கவர் வதுமென வுறுவடி வழகன். (உஎ)

பின்ன லார்குழற் பேதையர் படையிடைப் பிறங்கிக்
கன்ன லார்கரம் பிடித்துறு காமவேள் காணின்
மின்ன லாரெழிற் றன்னுரு வுளத்திடை வெறுத்தே
அன்ன லாருரு வேட்புறச் செயுமிவ னழகு. (உஅ)

பேய்க்கி னிப்புறு மருவலர் குடலிடும் பெரியான்
தாய்க்கு மீப்புக ழிலையெனப் புகழ்தரத் தரணிச்
சேய்க்கி னித்தன பலசெய்வான் றமிழ்வலார் சிறந்த
வாய்க்கி னித்திடும் பெயரினன் குமணனும் வள்ளல். (உகூ)

குமணன் குணச் சிறப்பு.

சீல மல்லன கனவினுஞ் சிந்தனை செய்யான்
சால நண்ணினர் தமையவர் குலத்தொடு தாக்கும்
ஆல மன்னவே யாமழுக் காறுமுன் னான
நீல நீங்கிய நல்லற மோங்கிய நடையான். (௩௦)

---

உசு. இரவி - சூரியன். ஒன்னலர் - பகைவர்.

உஅ. பிறங்கி - விளங்கி. கன்னல் - கரும்பு. நல்லார் - பெண்கள். வேட்புற - விரும்ப.

உகூ. மருவலர் - பகைவர். தரணி - பூமி. இது ஆகுபெயராய் மக்களை யுணர்த்தும். சேய் - பிள்ளை.

௩௦. அழுக்காறுமுன்னான - அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் என்பன.

வைய மெய்தினும் வானக மெய்தினும் வழுவார்
பொய்யி னின்னர் நீதிநூற் புணரிக்குப் பொதியச்
சைய மாதவன் கரமென மனத்தினர் தழுவுஞ்
செய்ய மந்திரக் கிழவர்சொன் முறை முறை செய்வோன். (௩௧)

கள்ள மேவிய மருவலர் தமைப்புறங் காணும்
வெள்ள மாகிய மிடற்புறப் படையுடன் விளங்கும்
பள்ள வார்கலி யுலகிடை நீதியாப் பகருந்
தெள்ளு சீரகப் படையையு முடையவன் றிறலோன். (௩௨)

உரிய *நல்லற மதன்வழி யுறுபொரு ளுரிமை
மருவு பேரின்ப மிம்மையில் வருபயன் மறுமை
பெரிய தோர்புக மூலமெலா மதித்தவிப் பெற்றி
அரிய வாகிய வெழுவகை நிலையையு மடைந்தோன். (௩௩)

கூறு மோதலு மோதலுங் காத்தலுங் குறிப்பால்
வீறு பல்பொரு ளீதலும் வேட்டலும் வேற்றோர்க்
கோற லார்படை பயிறலு மெனமுன்னோர் கூறும்
ஆறு செய்கையுந் தனவெனக் கொண்டுவா ழதிபன். (௩௪)

அலக்க ணற்றுறு தன்னினு லேவலுற் றவரால்
விலக்கு மாற்றலர் குழுவினுற் கள்வரால் விலங்காற்
சொலக்க ணிப்பிலாக் குடிகடம் மனத்திடைத் தோயுங்
கலக்க மைந்தையு நீக்கிய பாக்கிய கனவான். (௩௫)

---

௩௧. வையம் - பூவுலகம். புணரி - சமுத்திரம். சையம் - மலை. மாதவன் - அகத்தியமுனி. இம்முனிவர் கையில் சமுத்திர முழுதுமடங்கல்போல் மந்திரக்கிழவர் மனத்தில் நீதிநூல்கள் முற்றுமடங்குதல் குறிப்பித்தமை காண்க.

௩௨. ஆர்கலி - சமுத்திரம். நால்வகைச் சேனைகளும் புறப்படையாகவும், நீதி அகப்படையாகவும் கொள்ளலால் வன்றிறலோன் என்பது காண்க.

௩௪. மோதல் - போர்செய்தல். ஓதல் - கற்றல். வேட்டல் - விவாகஞ் செய்தல். கோறல் - கொல்லுதல்.

௩௫. அலக்கண் - துன்பம். இக்கவிக்குப் பொருள் கொள்ளுங்கால் 'மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத், தானதனுக் கிடையூறு, தன்னாற்றன் பரிசனத்தா, லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா, லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ'' என்னும் பெரிய புராணப் பாடலைக் குறிப்பித்தவாறும்.

எந்த வேலையு நொந்தவர் துயரறிந் தின்னல்
தந்த போர்தன மைந்தனே யாயினுந் தக்க
பந்த மாகிய விதிப்படி தண்டனை பணிக்குஞ்
சிந்தை யாகிப னிந்தையி னீங்கிய செம்மல். (௩௬)

வழுக்கி லாதமா மறையவ ரரசரில் வந்தோர்
அழுக்கு றாதநல் வணிகர்சூத் திரமர பாளர்
இழுக்கு மேவிய தாழ்குலத் தினரெனு மிவருள்
ஒழுக்க மேவின ருயர்ந்தவ ரெனக்கொளு முரவோன். (௩௭)

புவிய னைத்துமோ ரொழுங்கொடு வயங்கின பொலியப்
பவம கற்றிய மனுவெனும் பார்த்திவன் பகுத்த
தவம றைக்குலத் தவரொடு நாற்குலத் தவரை
அவர.வர்க்குரூஉந் தொழிற்றலை நிறுத்திய வண்ணல். (௩௮)

பூமி வாழ்பவர் தேவர்கள் நாகர்கிம் புருடர்
தோமி லாமுனி வரரிவர் மதன்கணை தோய்ந்து
நாம நீங்கினர் பலரெனக் கண்டன னலியுங்
காம மாகிய மறுவிலா மதிநிகர் கருத்தன். (௩௯)

முதிர மாகிய கோலமால் வரையினு முடுகிக்
கதுமெ னுவரு மாம்பிரா வதியொடு கமழுங்
குதிரை யாறுசேர் குமணமா நகரியிற் குலவிப்
பொதுவி லாதுநீர் சூழ்பெரும் புவிநனி புரப்போன். (௪௦)

தன்னை மேவிய வாணர்க ளிச்சையாற் றமே
என்ன வாம்பொரு ளாயினுங் கொள்கென வினிதாப்
பன்னி நாடொறு மீதலாற் பாண்பசிப் பகைஞன்
என்னு மோருயர் காரண நாமமு மிசைந்தோன். (௪௧)

கோணல் கண்டிடாக் கோன்முறை குயிற்றிய குறிப்பால்
வாணி லாப்பெருங் கவிகையி னிழற்கிடை வயங்கும்
நீணி லத்தினர் நேயனே யாயினு நிகழ்த்தும்
பாணர் தம்பசி யொன்றினுக் கென்றுமே பகைஞன். (௪௨)

௩௬. இன்னல் - துன்பம். பந்தம் - கட்டு. பணிக்கும் - கட்டளையிடும். செம்மல் - அரசன். ௪௦. கோலமால்வரை - வராககிரி. முதிரமென்பது இதற்கொரு பெயர்.

பார்த்து வாழ்த்தவ் வெழுத்தவும் பணிக்குலப் பதியுங்
கூர்த்த வீரிய வேந்தனுஞ் சலிப்புறக் கவினிப்
போர்த்த போர்வைபோற் புவியெலாம் பொதிதரப் பொலியுஞ்
சீர்த்தி மேவிய பூபதி குமணனுஞ் செல்வன். (௪௩)

மருவி நோக்கினர் வதனமாம் பங்கய மலர்க்கும்
பரவி யேபுவி நடுக்குறும் பாவமாம் பனிக்குஞ்
சரள மாகிய கவிவலோர் கலியிரு டனக்கும்
இரவி யாமென விளங்கிய வளங்கொளு மேந்தல். (௪௪)

ஏற்ற நற்குணம் பலவும்பல் லுறுப்புக ளிணையச்
சாற்று மீகையே யவற்றின்மேற் சிரமெனத் தயங்கப்
போற்று மெம்பிரா னருளணி மகுடமாப் பொலியத்
தோற்று மோருருக் கொண்டெனத் துலங்கிய தூயோன். (௪௫)

இனைய தன்மைய னாகியகுமணனு மிறைவன்
தனைநி கர்த்தசீர்ப் பரம்பரன் றிருவடிச் சலசம்
நினைவி னுட்பெறீஇ நீணிலம் புயத்திடை நிறுவி
வனையும் வேந்தரிற் றிலகமா வயங்கினன் மாதோ. (௪௬)

இளங்குமணனியல்பும் பொருளாசையும்.

இரவலர்க் கீயுங் கொடையெனும் புணரி யிடைமறுத் தேய்வி லா துதித்து, மருவியெந் நாளும் வளர்பெரு மதிபோல் வயங்கிய பெரும்புகழ் வள்ளல், புரவலர் மதிக்கும் புகழ்மணம் புவியைப் போர்த்திலாற் குமணனும் பூமான், தரையெலாந் தனது குடைநிழற் பொலியத் தனியர சியற்றுமந் நாளில். (௪௭)

மாமரக் கிளையார் மணிச்சிறைக் கிளையாம் வல்லிரைந் தெழூந் துலகனைத்துந், தாமொரு கிளையான் முரசெனுங் கிளையான் றடநெடும் படைவிழிப் பசுந்தோள், வாமமார் கிளையார் மருவுகைக் கிளையான் வாடிடப் புரியெழிற் குமண, பூமனுக் கிளையான் போரினுக் கிளையான் பொலியிளங் குமணனுப் புகல்வோன். (௪௮)

---

௪௭. குமணன் என்பதை கு+மணன் எனப்பிரித்து உலகில் (புகழாகிய) மணத்தைப் பரப்பியவன் என்றுகொள்க.

௪௮. 1. கிளை - கொம்பு. 2. கிளை - (கிள்ளை) கிளி. 3. கிளை (கிள்ளை) குதிரை. 4. கிளை - சுற்றம். 5. கிளை - மூங்கில். 6. கைக்கிளை - ஒருதலைக்காமம். இளையான் - இளையவன். இளையான் = இளைக்காதவன். இளங்குமணன் - குமணராஜன் தம்பி, இவனையே பிற்காலத்து உலகவழக்கில் அமணன் எனக் கூறுவர்

கமழ்பசுந் தேனைக் காய்ச்சிய பாகைக் கன்னலைக் கனியினைக்
கண்டை, யிமிழ்திரை யமுதை வென்றதீஞ் சுவைத்தா யிலகிய செ
ழுந்தமிழ்க் கவிஞர், தமைவியந் தீகை யளித்துநன் மணத்தைச் சார்ந்
திடாத் தன்மையா லிவனை, அமணனென் றுலகோ ரறைந்தன ரமரி
லடலரிக் குருளையே றனையான். (௪௯)

ஒருபணத் தணையிற் றுயில்பவன் பதமு முவந்திடா னுலப்பிலா
தெழுகா, மருபணக் களிவண் டினப்பயி றொடையான் மதியெனு
மதியினை மதியா,வருபணத் தாசை யென்றகாரரவு வாய்க்கொள வழ
ங்கின னதனாற், கிருபணத் துவத்திற் றலைவனா நின்றான் *கேடிதன்
மேலும்வே றுளதோ. (௫௦)

பொருளலா தவையும் பொருளெனப் புரியும் பொருளலா லெ
வையுமோர் பொருளோ, அருளினாற் பொறையா லன்பினா னலத்தா
லாற்றலால் வருசுக மனைத்தும், இருளினும் பொருளால் வருசுக
மிரவிக் கிணையுமா மிப்பொரு ளிலையேல், தெருளுலா மனமுஞ் சஞ்
சலப் பகையாற் சிறைசெயப் படுவது திண்ணம். (௫௧)

குருளையே றனைய மாற்றலர் துணுக்கங் கொள்ளவுங் கொற்ற
வர் குழாத்தின்,மருவினா யகமா யிருக்கவு மேனை வளனெலா மெளி
தினிற் பெறவும், விரிகடற் புவியிற் பொருளலால் வேறு வேண்டுவ
துளதுகொ லதனாற், பொருடனைப் போற்றி வாழெனப் பண்டே
புகன்றன ரறிந்திலா ரெவரே. (௫௨)

---

௪௯. இமிழ் - எழுகின்ற. திரை - கடல். நன்மணம் - கவிதாகன்னி விவாஹம். அமணன் - மணமில்லாதவன். அரிக்குருளையேறு - ஆண்சிங்கக் குட்டி.

௫௦. ஒரு - ஒப்பற்ற. பணத்தணை - படப்பாயல், சர்ப்பசயனம். மதியெனுமதியினை மதியா - புத்தியென்கிற சந்திரனை மதியாமல். கிருபணத்துவம் - லோபம்.

௫௧. "பொருளல்லவற்றைப் பொருளாகச் செய்யும் பொருளல்லதில்லை பொருள்" என்னுங் குறளைக் கவனிக்க.

௫௨. மாற்றலர் - பகைவர். துணுக்கம் - அச்சம். புரவலர் - அரசர். குழாம் - கூட்டம். "பொருள்தனைப் போற்றிவாழ்" என்ற முதுமொழியைக் குறிப்பித்தமை காண்க.

பொன்னின தருமை நோக்கியே யதனைப் புரிவொடு காத்திருப் போரை, யின்னவ ருலுத்த ரெனவிலம் பாட்டி னெய்ப்புறு கவிஞரே யிசைப்பார், அன்னதாற் குறைவென் னவருளங் களிப்ப தப்பொரு ளடைந்துழி யன்றோ, என்னவிவ் வாறு தன்மதிக் குறைவா லெண்ணின னறிவினு மிளைஞன். (௫௩)

இனையன பலவு மெண்ணின னுகி யேற்பவந் தடைந்தவர் தமது, நினைவினு மிகவெப் பொருளையு மளிக்கு நிருபனை நிருபனு நிற்பிர், புனையுநம் மரசு விரைவினில் வறுமை பூணுமென் றுளங்கவல் பூண்டு, முனைநெடும் படைக்கைத் தராபதி யான முன்னவன் முன்னவன் மொழிவான். (௫௪)

### குமணவள்ளலிடம் இளங்குமணன்கூறும் உலோபப்பிரசங்கம்.

கந்தரத் தேறிக் கற்பக நிழலிற் கவின்மணி முடிதரித் திருக்குஞ்
சுந்தரக் கரிய னிடத்துநற் றருக்கள் சுரபிசிந் தாமணி யுறலான்
மந்தரப் புயத்து வானவர் பலரும் வணங்குவ ரவனையிம் மாண்பா
லந்தரத் தவர்க்கும் பொருளலாற் சிறத்தற் காதர வில்லையீ தறிவாய். (௫௫)

சங்கமே பதும மேமுத லாகச் சாற்றுபன் னிதிபடைத் ததனால், எங்குமே புகழப் பட்டன னியக்கர்க் கிறையவ னின்னதா லன்றோ, வங்கமேய் வாரி வருவிட மாந்து மணிகண்ட வரதனு மகிழ்ந்து, துங்கமே வியநற் றோழமை பூண்டான் சொல்லுவா ரெவர்நிதிப் பெருமை. (௫௬)

---

௫௩. புரிவு - அன்பு. இலம்பாடு - தரித்திரம். அறிவினும் என்றஉம்மை வயசினும் இளையனுதலுடன் எனக் குறிப்பித்ததால் இறந்தது தழீஇய எச்சம்.

௫௪. முனை - கூர்மை. முன்னவன் - மூத்தோன். முன்னவன் - முன் அவன்.

௫௫. கந்தரம் - மேகம். கவின் - அழகு. கரியன் - இந்திரன்.

௫௬. இயக்கர்க்கிறையவன் - குபேரன். வங்கம் மேய் வாரி - நாவாய் பொருந்திய கடல். மாந்தும் - உண்ட.

துதிபெறு கயிலை யங்கிரி வாழ்மூச் சுடர்விழிப் படர்சடைத் தூய, நதிபொதி பெருமா னெவர்க்குமே லான நாதனு விருந்துமிக் குயர்ந்த, நிதிமலை யதனைக் கரத்திடைக் கொண்டு நின்றனை னென்னி னிந் நிலத்தின், மதியினு ளளத்தற் கரியது பொருளான் மருவிய மாட்சியே யன்றோ. (௫௭)

புணரிசூ ழுலகத் தெவ்வகை யுயிரும் பொலிவினை யிழந்தன பொன்றத், தணவிலாக் கொடிய தீவிடங் காலுந் தாழ்வினை யுறும்பணிப் படந்தான், பணமெனு நாமம் படைத்தலா லதன்மேற் படுத்துளங் களித்தனன் பாரின், மணமகளாது மலிதரு வனச மலரெனும் வாயனு மாயன். (௫௮)

அலகிலாச் செல்வ மாயினு நிலைவிட் டகலுமென் றறிகிலா தவரீற், சிலரெடுத் துரைப்பா ரன்னவர் நீதிச் செம்மையை யறிந்திடார் தம்மை, இலகுநன் மதிப்போ டேத்திடார் மனைவிட் டேகுதல் பெரியவ ரியற்கை, அலவெனு மறுப்பா ரெவர்கொலாம் பொருளுக் கனையது மாட்சியே யாகும். (௫௯)

தரித்திரத் துழன்று சோற்றினுக் கலைந்து தாட்டுணைத் தசையற நடந்து, பெருத்த வெம் பசியின் வருத்தமிக் கடைந்து பேதுறு புலவரே பீழை, உரைத்தனர் நிதியை யவர்மொழி நரியொன் றுண்ணுதற் ககப்படாக் கொம்பர், பொருந்துதேங் கனியை நோக்கியே யிதுசீ புளிக்குமென் றுரைத்தலே போலும். (௬௦)

பற்றொரு தெனினு நேயமுண் டாயிற் பாங்கெலா மெறும்பொரு கோடி, சுற்றுநற் பலங்க டுன்னிய தருவைத் துருவிவந் தடையும்பல் பறவை, அற்றுழி யாவு மகலுமாங் கரும்பொன் னடைந்தவர்ச் சார்வரியா வருமென், றுற்றமு தறிஞர் சொற்றவா றின்று முலகிடைக் காணுத லுறுவாய். (௬௧)

---

௫௭. புணரி - கடல். தணவிலா - நீங்காத. பணி - பாம்பு. வனசம் - தாமரை. மாயன் - கிருட்டிணன்.

௫௮. அலகு - அளவு.

௫௯. பீழை - குறைவு. கொம்பர் - கொம்பென்பதன் போலி.

௬௧. நேயம் - நெய். பலம் - பழம். துன்னிய - நெருங்கிய. துருவி - தேடி. அகலும் - நீங்கும். "ஆகாதெனினு மகத்துநெய் யுண்டாயிற் போகாதெறும்பு புறஞ்சுற்று" மென்னுங் கவியைக் குறிப்பித்தது காண்க.

நினைத்ததை முடிக்கு மேதக வாக்கு நேரலார் தமதுயிர் கவரும், இனத்தினை யுயர்த்தும் புகழ்ச்சிலை யளிக்கு மின்பெலா முதவுமெஞ் ஞியசீர், அனைத்தையு நல்கு மிப்பொருளல்லா லாருயிர்க் கொரு துணை யுளதோ, மனத்திடை யிதன்சீர் மறந்திடி லுடனே வந்தது வன்று யர் வறுமை. (௬௨)

குணத்தொடு குலமு மொழுக்கமும் படிப்புங் கொண்டில னாயி னு மிருந்த, பணத்தொடு மிருப்பி னுலகின ரவனைப் பண்பொடு முயர்த்தியேத் தெடுப்பார், மணத்தொடு வந்த மங்கையு மிழித்து வைகுவாண் மற்றதில் லானைப், பிணத்தொடு சரியாய் நினைப்பரே னையபிப் பெற்றியை யறிந்திலா ரெவரே. (௬௩)

வேறு.

மதியு ளார்நல் வலியுள ராயினு
நிதியி லாதவர் நீணகர் வாழ்தலிற்
கதியி னார்மிரு கங்களி லங்குகான்
வதித லேமிகு மாண்புடைத் தாகுமால். (௬௪)

### கொடையினாற்றீமையுண்டென்று இளங்குமணன் குமணனிடங் கூறுவது.

அடுத்த செல்வத் தருமை யறிந்திலார்
தடுத்து ரைப்பவர் தம்மொழி யேற்கிலா
தெடுத்தி யாவையு மேற்பவர் கைக்கொளக்
கொடுத்த ழிந்தவர் கோடானு கோடியே. (௬௫)

மூன்று லோகமு முந்தி யரசு செய்
சான்ற மாவலி தன்றலை பட்டதும்
ஆன்ற வீகையி னாலெனி லீகையைப்
போன்ற தீது புவியினுண் டாங்கொலோ. (௬௬)

வண்ட லங்கல்கொண் மார்பரிச் சந்திரன்
அண்டு மோர்முனிக் காத்தரும் வண்மையாற்
பெண்டு பிள்ளை பெருந்திருப் போய்விடக்
கொண்ட துன்பங் குறிக்கவுங் கூடுமோ. (௬௭)

---

௬௨. மேதகவு - பெருமை. நேரலார் - பகைவர்.

திவசன் மார்க்கத் தருப்பதி தன்கையில்
திவச னீந்திடு சேய்செய் யறத்தொடு
கவச குண்டலங் கண்ணி யளித்தலால்
அவச மெய்தி யழிந்ததும் பொய்கொலோ. (௬௮)

தவமி லங்கு ததீசி முனிவரன்
கவள வெண்கரிக் காவலன் வேண்டலின்
உவமை யின்றி யுயிர்க்கொடை நேர்ந்ததால்
சவமெ னும்படி தான் விழுந் தானரோ. (௬௯)

ஆத லாலிஃ தறிதிற்கொ ளாதுநீ
ஈத லேமிக வின்னலைத் தந்திடும்
ஓது செல்வ மொழிந்திடும் பின்னர்வே
றேது கொண்டர சிப்புவி யிற்செய்வாய். (௭0)

நிறைத ரும்பெரு நீணிதி யாவுநீ
பொறியி லாது புரிந்த புகழெனும்
வெறிய னாகி விழலுக் கிறைத்தபின்
வறிய னென்றசொல் வாளெனப் போழுமால். (௭௧)

நீசெ யுங்குறை நின்னொடு நிற்கிலா
மாசி லாநம் மரபினுள் ளாரெலாம்
பேசு செல்வப் பெருக்கிழந் தாரென
ஏசன் மேவ வியற்றுவ தென்னையே. (௭௨)

இந்த நல்லர சிவ்வகை நீசெயின்
முந்தை யோர்தம் முறைமுறை யாகவே
எந்த நாளு மிலாத பெருங்குறை
வந்த தாகு மனத்திடைக் கோடியால். (௭௩)

இன்று தொட்டர சென்வயிற் றந்துநீ
சென்று கானிற் றிரிதி மறுத்தியேற்
பொன்று மாறு பொருவ லிரண்டினில்
ஒன்று சொல்கென வோதின னம்மவோ. (௭௪)

---

௬௮. தருப்பதி- இந்திரன். திவசன்- சூரியன். சேய் புதல்வன், கர்ணன்.

### குமணன் சிந்தனை.

உடன்பிறந்து முயிர்வாங்கு நோயன்ன வுணர்வகன்ற
மடன்பிறந்த கொடுமனத்து வஞ்சகன்சொ லுரையனைத்துந்
திடன்பிறந்த பலகேள்வி சேர்ந்ததிருச் செவியேற்றான்
தடன்பிறந்த நெடுங்கருணை சலதிநிகர் தனிவள்ளல். (௭௫)

இவன்மதியிவ் வாறாயிற் றென்செயலா மெனலாலுந்
தவமெனுமோர் பெருஞ்செல்வந் தனக்குவருந் தகவாலுங்
கவலல்களிப் பென்னுமிரு கடல்கலந்த கருத்தினனாய்
உவகையது மேற்கிளம்பி யொழுகலென வுரைசெய்வான். (௭௬)

### குமணன் தம்பிக்குக் கூறும்நற்போதனை.

### செல்வநிலையாமையும் கொடையின்பெருமையும்.

நின்கருத்தின் படிபுரிந்தே னிசமீது நிற்கவினி
என்கருத்துக் கேற்றபடி யியம்புமொழி சிலகேட்டி
பொன்கறுக்கும் பூம்பதத்துப் புரவலனே பொருட்செல்வ
மின்கறுத்த மேகநடு மிளிர்பொழுதும் விளங்காவால். (௭௭)

மறிதிரையொத் துலகினிடை வருஞ்செல்வ மிதிற்றுயரஞ்
சிறியதல்ல செல்வமெனச் செப்புமொழிப் பொருடேறாய்
வெறிகமழு நறுந்தொடையன் மிளிர்மார்பா மெய்யுணர்ந்த
அறிவுடையோர் வெறுக்கையினுலதற்குறும்பேர் வெறுக்கையன்றோ.

இந்திரனுக் கேதுசிறப் பீகையினு லென்ஞான்றும்
ஐந்தருவுஞ் சுரபியுநல் லருண்மணியு மவனியெங்குஞ்
சந்ததமும் புகழ்மிகுத்துத் தழைத்துவள ரப்பெறுமால்
அந்தரத்து வேந்தனிலை யழிந்தாலு மழியாமே. (௭௯)

உடையானே சிறப்புடைய னுடைமைகளோ சிறப்புடைய
உடையானிற் கழிபெருமை யுடைமைகட்கெவ் வாற்றுளதேற்
கொடையாலே யென்பரந்தக் கோபதிக்கு மெல்கியசிற்
றிடையார்தம் போகமலா லெய்துபெரும் புகழுளதோ. (௮௦)

---

௭௫. அகன்ற - நீங்கிய. மடன், திடன், தடன் என்பன போலி. சலதி - கடல்.

௭௮. செல்வம் - போய்விடுவேம். வெறி - தேன். தொடையல்- மாலை, வெறுக்கை - வெறுத்தல்.

௭௯. ஞான்று - காலம். அவனி - பூமி. சந்ததம் - எப்பொழுதும்.
௮௦. கழிபெருமை - மிக்க பெருமை, கோபதி - இந்திரன்,

மந்திரிமா நிதிபடைத்த மாண்பதனா லேயாதி
அந்தமிலான் றோழமையுற் றானென்ன லறிவன்று
முந்தவவன் செய்யுந்தவத்தான் முடியாத பெருஞ்செல்வந்
தந்தனன்றன் றோழமையுந் தந்தனனம் பரம்பரனே. (௮௧)

அந்தகுமா நிதிபடைத்து மந்தகனா யுழல்கின்றான்
சித்தமர னிடைச்செலுத்தித் திறம்பாத நெறிநிற்கும்
உத்தமர்க ளருவருப்புற் றொழித்தொதுக்கப் படுகின்ற
செத்தையெனத் தகுமிந்தச் செல்வமொரு செல்வமதோ. (௮௨)

மன்னவகே ணம்பெருமான் மகிழ்நம்பி யாரூரன்
தன்னருமைத் தோழனுமாய்த் தனவாம னம்போல்வார்
உன்னவுந்த காத்தொழில்க ளுஞற்றியதெப் பொருள் குறித்தோ
இன்னமிதை நீயறியா திருத்தியென நினைத்திலனே. (௮௩)

கடுக்கையணி சடைப்பெருமான் கனகவரை தனைக்கையில்
எடுத்ததுபொன் வேட்கையென்றா யிதுகிடக்க வெரிமழுவும்
உடுக்கையும்வெண் டலையோடு முருமொலிக்கு மானுமங்கைப்
பிடித்தெலும்பு பாம்பணிந்த பெற்றியெதைப் பெறும்பொருட்டோ.

ஒருகரத்து நீராட்டி யொருமலரைச் சாத்தினருக்
இருநிதியுங் கற்பகமு மெவ்வாழ்வுங் கொடுத்தருளும்
பரமபதி பொருள்வேட்ட பண்புநன் றுநன் றுசொற்றாய்
இருநிலத்தின் முழுமனித ரெவனைப்போ லுளரையா. (௮௫)

மாதவனும் பணம்விரும்பி மற்றதன்மேற் றூங்குவனென்
றோதினையோ ராலிலைமே லுறங்குவதற் கென்புகல்வாய்
ஈதகல விந்திரனுக் கிவன்கொடுத்த செல்வமன்றோ
மாதருவுஞ் சுரபியுமம் மாமணியும் பிறபொருளும். (௮௬)

---

௮௧. மந்திரி - குபேரன். முடியாத - கெடாத.

௮௪. கடுக்கை - கொன்றை. உருமொலிக்கும் - இடிமுழங்கும்.

௮௫. முழுமனிதர் - பூரணமானிடர், மூடர்.

வேறு.

அறிவிலா தவரிற் சிலர்நிதி நிலையில் லாததென் றறைவரென்
றறைந்தாய், சிறிதுமோர் குறையின் றுண்மையே புகன்றாய் செப்பு
மத் தகையசீ ரியர்தாம், பொறியிடைப் பொதிந்த ஞானமாங் காரத்
தாற் போக்குமஞ் ஞானிய ரதனால், அறிவிலா தவரே யாவரிவ் வுண்
மை யறிதியேற் பெருநல மரசே. (அஎ)

பலபல துயரப் பாடுறும் புலவர் பழித்தனர் நிதியையென்
றுரைத்தாய், புலவரென் பதற்குப் பொருளறிந் தனையேற் புகன்றிடா
யிவர்பெயர் பூண்டே, இலகினர் தேவ ரெனிலிவர் பெருமை யிசைப்
பதென் யாண்டுசென் றாலும், நலமிகப் பெறுவார் மன்னரிற் சிறந்
தார் நாவுரை நாட்டுவார் நாளும். (அஅ)

இரப்பரென் றிவரை யிகழ்ந்திடேல் கருணை யெய்திமேற் பத
வியீந் தெம்மைப், புரப்பது கருதிப் போந்தநல் லறத்தின் புனிதரெ
ன் றெண்ணுதி புலத்தில், இரப்பதாற் குறையன் னவர்க்கிலை நமக்கே
யேற்றதா முபர்மணி விலையைத், தெரிப்பது தெரியார் மதித்திடா
ரெனினுஞ் சிறப்பதற் கன்றிமற் றுளதோ. (அகூ)

பணமுளான் யாவ ரானுமே மதிக்கப் படுவனென் றிசைத்தனை
பலகால், தணவிலா தொருமூன் றுலகுக்கு மரசு தாங்கிய தசத்தலை
யானைப், புணரியைத் தாவி வானர மிழித்துப் புகன்றதும் பின்ப
வன் றனைக், கணமெலா மடியத் தொலைந்ததுஞ் செல்வக் கணிப்பி
னைக் கணித்திடுங் காண்டி. (கூ0)

நான்மருப் பியானை மிசைவரு சுரேச நாயகன் மரவுரி தரித்துக்,
கான்மருப் பொலியும் வனத்துறை முனிவன் கையெனுங் கமலமீப்
பூத்த, தேன்மருப் பிலிற்று மலரவ மதித்துத் தேம்பிய துல்கிலா
ரறியார், கூன்மருப் பெறும்பி யடைந்ததுங் காணாப் குறித்துமா
நிதியவற் கிலையோ. (கூக)

---

அஎ. பொறி - அறிவு. காரம்-ஒளி. அறிவிலாதவர்-அறிவில் ஆதவர்.

அஅ. புலவர் - அறிவுடையவர்.

கூ0. தசத்தலையான் - இராவணன். கணம் - கூட்டம்.

கூக. நான்மருப்பு - நாலுகொம்பு. மரு - வாசனை. பிலிற்றும் - கொட்டும். தேம்பியது - வாடியது. கூன் -வளைவு. எறும்பி - யானை.

சகத்திரத் தெட்டா மண்டமாண் டிருந்த தாருகன் முன்னவன் முன்னோன், மகத்துவ மெனநீ கூறிய செல்வம் வழம்பிலா வகைய டைந் திருந்தும், அகத்தினா லழிந்தான் கனகனோர் வலியா ராருள ரெண்ணுதி யவன்வின், புகச்சிறு புதல்வன் புகழ்மிகப் படைத்தான் பொன்கொலோ சிறந்தது புகல்வாய். (௩௨)

## செல்வர் கடமை.

கோடிபொன் னடைந்தா லில்லவர்க் கீந்து குறிப்பொடு நல்ல றம் புரிந்து, நாடிய சுற்றத் தவருட னுண்டு நன்மதிப் படைந்து வாழ் பவன்மேல், வீடுமுற் றிடுவா னிவையியற் றாதோன் மேதகு வாள்கரம் பிடித்த, பேடியை நிகர்ப்பா னல்லதூஉ மணிந்த பிணத்தி னை நிகர்சொலப் பெறுவான். (௩௩)

அனுபவம் புரிந்து பிறர்க்குமீ யாதா னருநிதி யவனதன் றப் பொன், றனையெடுத் தவைசெய் பவர்க்குரித் தனையான் றானுமந் நிதி யினைக் காக்கும், வினைசெய்சே வகனும் பேழையும் போல்வான் மிகு வலிப் பூதமு மொப்பான், இனையனைத் தனிக னென்றறி விலரே யிசை ப்பரீ தெண்ணுதி யின்னும். (௩௪)

கல்விகல் லாரிற் கற்றறி வில்லார் கடையரென் றுரைப்பது கடுப் ப, செல்வமில் லாரிற் செல்வமுற் றிருந்துஞ் செய்வினை செய்வகை செய்யார், பல்விதத் தினிலுங் கடையரே யுலகிற் பார்த்தவர் பழிக்க வும் பின்னர்ப், புல்லிய நரகிற் புகுதவும் போந்த பூரிய ரிவரலா லெவரே. (௩௫)

தங்குபல் கிளைக்கும் பாத்திடா னடுத்தோர் தம்மையுங் காத்தி டான் றானும், பொங்குமின் பாகப் புசித்திடா னாளும் பொன்னையே காத்துமா நிலத்தில், எங்கணு மிழிவு கொண்டுவாழ் பவற்கு மேற்றி ஊ தொருபெரும் பொதிகொள், குங்குமஞ் சுமந்த கார்த்தபந் தனக் குங் குறிப்பிடில் வேற்றுமை யுளதோ. (௩௬)

---

௩௬. பாத்திடான் - பகுத்திடான், கார்த்தபம்- கழுதை.

அடுத்தவர்க் கீந்திடிற் பின்ன ரடுத்திடும் பிறப்
பினிற் பலவா, மடுத்துமேம் படுத்து மின்னதை யுலக மாட்டுநன்
னிதிபடைத் தவரைக், கொடுத்துவைத் திருந்த புண்ணிய ரென்னுங்
கூறுமோர் மொழிநிலை நிறுத்தும், எடுத்தளித் தறியா ரெவரவர் பிச்
சை யெடுத்தழிந் திளைபவ ரிங்ஙன். (கூஎ)

பாக்களைப் புகன்று தோத்திரம் புரிவார் பாத்திர மறிந்துமற்
றவர்தந், நோக்கமு மறிந்து கொடுக்கநோ ஞரை நொய்தினிற் புடை
த்துவேற் றோர்தம், பாக்கிய மாகக் கொள்ளுவ ரிதனைப் பணிமர மே
க்குயர் கிளையின், ஈக்களைத் துரத்திக் கொள்ளுவார் மதுவை யென்ப
தாற் றேர்குதி யிளையோய். (கூஅ)

அடைதுயர் கூறி யிரப்பவ ரெவர்க்கு மன்புட னீதலே நன்
மை, விடையல தொன்றுங் கொடுத்திடா தின்மை விளம்புதல் கொ
டுமைமே லவர்க்குக், கொடைபுரி பவரைத் தடைபுரி வதுவோ கொ
டுமையிற் கொடுமைநீர்க் கெண்டி, இடைதடை புரிந்த வெள்ளிகண்
ணிழந்த தெவரறி யாதவ ரின்னும். (கூகூ)

முன்னைய பிறப்பி லறம்பல புரிந்த முறைமையா லுயர்பெருஞ்
சிறப்பின், மன்னிய மனித்த ரிங்குமவ் வாறே மனத்தொடு நல்லறம்
புரிந்தால், பின்னரு மிவ்வா றுயர்நலம் பெறுவார் பேதைமை யான்
மறந்தனரேல், என்னபாழ்ஞ் சனன மெடுப்பரோ விதனை யெண்
ணலு நடுங்குமென் னிதயம். (க00)

மாவலி.

மாவலி மாண்பின் வகையினை மறந்து வழுப்பட வழுத்தினை
மழைக்கோள், ஆவலி னறைந்து மவனுரை யகற்றி யடுத்தவர்க் களித்
திட லாவி, போவதிற் பொலிந்த புகழெனப் புகன்று புட்கரம் புவி
தந்து புயனேர், தேவனற் றிருத்தாட் செழுமலர் சென்னி சேர்த்
தினன் செயுந்தவச் சிறப்பால். (க0க)

---

கூஎ. மடுத்து - நிறைந்து. இளைபவர் - வருந்துபவர்.

கூஅ. பாக்கள் - பாடல்கள். பாத்திரம் - பாடற்றன்மை. (தகுதி) நோ
ஞர் - தவஞ்செய்யார். நொய்தினில் - எளிதினில். எளிதில் - விரைவில்.

க0க. மழைக்கோள் - சுக்கிரன். புட்கரம் - அந்தரம். புயல் - மேகம்.

### அரிச்சந்திரன்.

மதிதயன் மருகன் மாமுனி வரற்கீ வண்மையான் மனைமகன்
மாழ்க, அதிதுய ரடைந்தா னெமென வறைந்தா யத்துய ரனைத்தையு
மகற்றி, நதிபுனை நாத னளினமா னுத னுமக னுதன்வின் னுதன்,
கதிதரு காட்சி கண்டனன் களித்தான் காத்தனன் காசினி ககனம்.

### கன்னன்.

அங்கநாட் டதிப னரவுயர்த் தவனு ளவனியிற் சிறிதுபெற்றவ
னில், பொங்கிய சிறப்பும் பொலிபெரும் புகழும் பொருந்தின னிறு
திநாட் போது,சங்கமார் கரத்து மாயவன் வலியத் தானன்டந் துனக்
குவேண் டுவகேள், இங்குநா னருள்வே னெனச்சொலப் பெற்று
னிவனிகர் புகழ்பெற்று ரெவரே. (௧0௩)

கொல்லராக் கொடியன் கொடுந்தொழிற் கூட்டங் கூடியே குல
மியுங் கொண்டயால், நல்லிசை யடைந்தா னங்கர்கோ னதனு னல்
லுயிர் பிரிந்துவிண் செல்லும், எல்லையி லடைந்த மாதவ னடியை
யிறைஞ்சியே யேழெழு பிறப்பும், இல்லையென் றிரப்போர்க் கில்லை
யென் றியம்பா விதயமே யீந்தரு ளென்றான். (௧0௪)

### ததீசி முனிவர்.

எத்தனைகால மிருப்பினுங் கடையி லிறப்பதே சரதமென் நாளு
ம், நித்தனை யல்லா னிற்பவ ரில்லா நீர்மையா லிதையுணர் ததீசி, யு
த்தமன் வீணி லுலப்புறு மென்னை யும்பர்கோ னுயிர்பெற வுவந்
து, தத்தமே செய்தா னிதுசெயா திருப்பிற் சாவிலா திருப்பனோ
சாற்றாய். (௧0௫)

### அறமும் புகழும்.

ஈதலெனு நற்குணமொன் றிசைந்தவர்பா லெவ்வகைய
தீதுபெறுங் குணமுறினுஞ் செஞ்சுடர்முற் பனிபோலாம்
ஆதலினான் மானிடர்க்கு மமரருக்கு மியாவருக்கும்
மேதினியிற் கொண்டநிகரா விளங்குதுணை வேறிலையால். (௧0௬)

---

௧0௨. மதிதயன் - சந்திரதயன், கன்னோசி நாட்டுவேந்தன், சந்திரமதி யின் தந்தை.

௧0௪. அரவக் கொடியன் - துரியோதனன். அங்கர்கோன் - கர்ணன்.

௧0௫. கடையில் - முடிவில். சரதம் - உண்மை. நித்தன் - அழியாத வன், நடேசமூர்த்தி. உம்பர்கோன் - இந்திரன்.

௧0௬. மேதினி - பூமி.

பூதவுட லாயவிது பொன்றுமொரு கணப்பொழுதின்
ஆதுலருக் கெப்பொருளு மவரதெனத் தருங்கொடையான்
மேதகுநன் னாவலர்வாய் மேவுமுடம் பொன்றதுதான்
சாதலின்றி நித்தியமாத் தழைத்துவரும் புகழுடம்பு. (௧௦௭)

இல்லறஞ்செ யில்லவளு மேனையரு மிருநிதியும்
நல்லரசும் வளநாடு நமனார்கைப் படும்பொழுது
புல்லுமொரு துணையாகப் பொருந்துவவோ வறமொன்றே
வல்லதுணை யாயிருந்து வாட்டமுறன் மாற்றிடுமால். (௧௦௮)

சிறைக்காவ றானுமெவன் செய்யுமிளஞ் சேயிழையார்
நிறைக்காவ லொன்றேநன் னிலைக்காவ லதுபோலப்
புறக்காவற் படைநான்கும் பொருந்துகினும் பயனிலைநல்
அறக்காவ லரசுரிமைக் கழியாத பெருங்காவல். (௧௦௯)

அகழ்தருமண் புழுநரிநா யனைத்துமெதிர் பார்த்திருக்கும்
இகழுடம்பை யடைந்தவர்க ளிருக்கையினு மிறந்தவரே
திகழிரவி சசிநாணத் தேயமெலா மிகவிளங்கும்
புகழுடம்பைப் பொருந்தினவர் பொன்றுகினும் பொன்றாரே. (௧௧௦)

அன்பிலரே யெப்பொருளு மழிந்துபடுந் தமக்குரியார்
அன்புடையா ரென்பினுட னாவியுமே பிறர்க்குரியார்
என்பதைமுன் சிபிவேந்த னிளம்புறவுக் கின்பமுற
என்பதையு மளித்தழியா விசையடைந்த திசையாதோ. (௧௧௧)

அகனிலத்திற் றனியாழி யதுசெலுத்தி யகங்களித்துத்
தகவுபெறு பெருவேந்தர் சங்கமள விடற்கரிதே
மிகுமவரிற் கொடைபொறுமை வீரமுத லியவற்றாற்
புகழடைந்தார் பெயரன்றிப் பொன்றினர்பேர் பொலிவனவோ. ( )

குமணன் றம்பிக்குக் கூறும் உறுதிமொழி.

ஆதலினா லரசேநீ யன்புகொடை யருளறிவு
மேதகவுற் றிவ்வரசின் விளங்குதிபன் னெடுங்காலம்
ஓதுமதி மந்திரிமா ருரைசிறிதுந் தள்ளற்க
ஈதுறுதி யெனக்கோடி யென்னினுனக் கழிவிலையால். (௧௧௩)

---

௧௦௭. பொன்றும் - அழியும். ஆதுலர் - இரவலர், வறியர்.

௧௦௮. நமனார் - இயமன்.

௧௦௯. நிறை - கற்பு.

௧௧௦. அகழ்தரு - தோண்டப்படுகின்ற. சவி - ஒளி.

௧௧௨. தனியாழி - ஏகசக்கரம். சங்கம் - கூட்டம்.

மனித்தர்பய மனுத்துணையு மனக்கொள்ளே னிணைப்பவருள்
இனித்தமுழு முதலாகி யிரணியமா மன்றகத்துக்
குனித்தபரன் சான்றாகக் கொள்ளுதியேல் வினையணைத்துந்
தனித்தனியே விடைவாங்குஞ் சத்தியஞ்சத் தியமிதுவே. (ககச)

குமணன் அரசுரிமை தம்பிக்குக் கொடுத்து மகிழ்தல்.

வேட்டவர்கள் வேட்டவெலாம் விலக்காமற் கொடுப்பலெனும்
நாட்டமுளே னயலொருவ னண்ணியிரக் கினுமகிழ்ச்சி
காட்டியளித் திடுமரசைக் காப்பதனுக் குரிமையைநீ
கேட்டபொழு தில்லையெனக் கிளத்துவனோ கெழுவலியாய். (ககரு)

அழிவுபடு மிகச்செல்வ மாயவிதை நீபொருந்தி
வழிபுமது மலர்க்கடவுள் வாழ்க்கைநிலை மாய்ந்தாலும்
அழிவுபடாப் பரச்செல்வ மாந்தவத்தை யெனக்களிக்குந் [யால்.
தொழிலுடையாய் துணைவனெனுஞ் சொற்பொருளைத் துலக்கினை

இன்றுமுத லெனக்குநீ யிளவலெனக் கருதுகிலேன்
கன்றுதல்செய் மலமாயைக் காரிருளைப் புறத்தொதுக்கத்
துன்றிபகல் லறிவென்னுஞ் சுடர்கொளுத்தும் படிபோந்து
நன்றுபுரி யருட்குரவ நாதநீ வாழியவே. (ககஎ)

குமணன் தவஞ்செயச் செல்லுதல்.

நன்றாப தொழிலினைப்பின் னாட்புரிவா மெனக்கருதா
தன்றேசெய் வதுவேண்டு மாதலினா லருந்தவத்திற்
கின்றேயா னேகுவனீ யிருத்தியெனத் தனித்தெழுந்து
சென்றானல் லறத்தினுக்குச் செவிலியெனத் திகழ்பெரியோன். ()

குமணன் காட்டுக்குச் செல்வதையறிந்த நகரவாசிகள் கூற்று.

தருமமுருத் தரித்தேகுந் தன்மையெனத் தார்வேந்தன்
தெருவிடைமெல் லடிசிவப்பச் செல்கின்ற னதுபொழுது
புரிவுபெருந் தாய்கலப் பொருதுழலுஞ் சிறாரென்ன
மருவியநற் றிருநகர மாந்தரடுத் திதுபகர்வார். (ககக)

ககச. இரணியம் - பொன். மன்று - சபை. குனித்த - நடித்த. சான்று - சாட்சி.

ககரு. கிளத்துவனோ - சொல்வனோ. கெழு - விளங்கிய.

ககஎ. கன்றுதல் - வருந்துதல். துன்றிய - நெருங்கிய.

ககக. புரிவு - அன்பு. சிறார் - மக்கள்.

சக்கரங்கொண் டபிரனைத்துந் தனிபுரந்த தராபதியே
இக்கணத்தி னெம்மையெலா மிடர்க்கடலி னிடைப்படுத்தித்
தொக்கவனம் புகுவதற்குத் துணிந்தனையே தொல்லுலகின்
மக்களழுங் குறற்கிரங்கா மாதாவு முளள்கொல்லோ. (கஉ0)

பால்கொடுத்து வளர்த்தெடுத்த பசியசிறைக் கிள்ளைகளை
வேல்கொடுத்த வடிமுறுவல் வெருகினிடை விடுப்பாரோ
நூல்கொடுத்த வியனடையாய் நோய்புரியு நம்பியிடங்
கோல்கொடுத்து நீயகலக் குறிக்கொண்ட குணநன்றே. (கஉக)

மேதகுதாயீ முலைப்பாலில் விடங்கலந்து கொடுத்தென்னக்
காதகனா நம்பிகொடுங் கரங்கொள்ளக் கவிகைதந்து
பூதலமெல் லாநடுங்கப் புரிந்தனையே புகழுடையாய்
ஈதுநினக் கழகாமோ விதுவோநின் னருட்கியல்பே. (கஉஉ)

உன்னைவிடுத் தனமாயி னுயிர்விடுத்தோ மென்பர்சிலர்
என்னையிவன் மனமிரக்க மிலதாயிற் றென்பர்சிலர்
பின்னவனைக் கோறலுக்குப் பெயர்குதுநா மென்பர்சிலர்
அன்னவனா ணைக்கடங்கி யமைகிலோ மென்பர்சிலர். (கஉங)

சிங்கமிருந் தரசாட்சி செய்யுமொரு வரைமுகட்டே
தங்கியொரு நரியிருத்தல் தகுந்தகுமென் றுரைப்பர்சிலர்
வெங்கொடுங்கோ லவனோடு மேவகிலே மென்பர்சிலர்
எங்களைநின் னொடுகொடுசென் றெய்துககா னென்பர்சிலர். (கஉச)

எல்லவரு நல்லவனென் றேத்துமிந்த மகிபதியைப்
பல்லவரு முகம்புலர்ந்து பதைபதைத்துக் கதறியழப்
புல்லறிவா னாட்டைவிட்டுப் போக்கியவ னாட்சியினும்
வல்லியங்க ளொடுவாழும் வாழ்க்கையினி தென்பர்சிலர். (கஉரு)

சீரியனைத் தன்னுரிமைத் தேசம்விட்டுத் துரத்துதலால்
பாரிலுளோ ரழுதழுது படும்பாடு பழுதாமோ
ஆருமகிழ் தரக்கெடுவா னயர்ந்தேழை யழுதகண்ணீர்
கூரியவா ளொக்குமெனக் கூறுமறை யென்பர்சிலர். (கஉசா)

---

கஉக. வடி - கூர்மை. முறுவல் - பல். நம்பி - உன் தம்பி.
கஉஉ. காதகன் - கொலைகாரன். கவிகை - குடை.
கஉரு. வல்லியங்கள் - புலிகள்.

அரசுரிமை யெவர்க்குமகிழ் வாற்றுவதென் பதுதொலைந்து
விரவுதுயர்க் கடலுலக மேற்கொள்ளப் புரிவதுவோ
புரவலனே கொடும்புல்லர் புரியுமொழுக் கினனானான்
சரதமினி யறக்கடவு டாக்குமெனப் பகர்வர்சிலர். (கஉஎ)

இலகுபதி யைப்பிரித்தா னென்னுமுறை வருமுன்னே
குலவியநங் நாட்டினையுங் கொடுங்கோலாற் பிரித்தானே
இலகுமனத் திரக்கமின்றோ விவன்கொடியன் முதுபுலவர்
திலகருளத் திடிவிழுந்த செயலிதுவே யென்பர்சிலர். (கஉஅ)

வலிபடைத்த மாரிலிகண் மனமயங்கிப் பயப்படல்போல்
புலிநிகர்த்தேம் புலம்புவதென் பொருவதற்குப் புறப்படுமின்
ஒலிகெழுநீர்த் திரையுலக சொருவழிப்பட் டாவிளங்கோன்
எலிநிகர்ப்ப னெழுமின்க ளெழுமின்க ளென்பர்சிலர். (கஉகூ)

இப்பட்ச பாதகனா லிலகுபதி நாடகலக்
குப்புற்று வாழ்வதினுங் கொலைக்களமுற் றமராற்றி
ஒப்பற்ற வயமுறுவே முயிர்தருவேம் பயம்விடுவேம்.
செப்பத்தின் செப்பமெனச் செப்பிநிறை குவர்சில்லோர். (கங0)

முறைபுரிந்து புவிபுரக்கு முடிகெழுவேந் தருக்குரிய
மறைவழிபா மயின்முறைமை மறைவழிபா வதுதகுமோ
பறவையினம் பலபயின்று பலங்கொளுங்கற் பகதருவில்
இறையளவி னிடிவிழுந்த தெனவாயிற் றென்பர்சிலர். (கஙக)

குலங்குலையக் குடிகளழக் கொடுங்கோல்கொண் டவனுலகங்
கலங்கும்வெடிக் கர்ச்சனைநங் கருத்திடிபட் டிடமேவிப்
பலங்குலைய மானமறப் பரிபவமுற் றுயிர்தரிப்ப
அலங்கலணி புயவீரர்க் கடுக்குமோ வென்பர்சிலர். (கஙஉ)

---

கஉஅ. இலகுபதி - விளங்கிய அரசன்.

கஉகூ. மாரிலிகள் - மனவலியில்லாதவர்கள், பொருவதற்கு - யுத்தத்துக்கு.

கங0. குப்புற்று - தலைகுனிந்து. வயம் - வெற்றி. செப்பம் - மேன்மை.

கஙஉ. பரிபவம் - மானபங்கம், அலங்கல் - மாலை.

இங்காருந் தம்முளத்தி னிலகுபதி யிவனென்று
மங்காத சீர்த்தியனை மட்டும்விட்டுத் தன்னுரிமைப்
பங்காளப் பிரிவுசெய்து பாராளச் சண்டாளன்
பொங்கால மெனவரினும் போதுமெனப் புகல்வர்சிலர். (௧௩௩)

தீராத கொடுந்துயரஞ் செகத்தவரெல் லாமடைய
ஓராத சிறியவனா லொருநொடியின் மக்கண்மனை
நீராரும் வளநாடு நீப்பினுநந் நிருபன்முகம்
பாராளு மன்றிருந்த படியிருந்த தென்பர்சிலர். (௧௩௪)

மன்னவன்செய் வதையிழித்து வகுப்பதுவு மமராற்ற
உன்னுவதும் பிழைபணிவா யுரைத்துமெழுதியுமிரப்பாம்
அன்னவனே யருளினல மன்றெனில்வா ளாதுறுவேம்
இன்னதுவே நமக்கடுப்ப தென்பர்சில மானிடர்கள். (௧௩௫)

மன்பதைவேந் தாவியுடல் வாழ்வதுபோல் வாழ்வின்றித்
துன்பதையே யனுபவித்துச் சொன்னவெலாந் தலையேற்றுப்
பின்பதையே செயுமடிமைப் பிழைப்பினிலும் வீரசொர்க்கம்
என்பதையே வேட்டுறுவா மெல்லவரு மென்பர்சிலர். (௧௩௬)

தண்டினாற் புவிபுரப்பார் தருமநெறி கைவிடுவார்
அண்டினாற் பிடித்தடைப்பா ராய்ந்தறிந்து முறைபுரியார்
வண்டினாற் றாண்கெடல்போல் வரிகளாற் குடிகெடவும்
கண்டினாப் பலபுரிவார் காவலரோ காதகரே. (௧௩௭)

இம்பர்மா னுடரெவர்க்கு மின்னுயிர்நே ரிலகுபதி
உம்பர்மா நிலமுறுதற் குரியவழி மருவுதுயர்
கம்பர்மா கவியிருவர் கவிக்கடங்கு மல்லாது
கும்பர்மா சுணத்தலைவர் கூறுதற்குங் கூடாதே. (௧௩௮)

மானிடர்தந் துயர்கருதான் வழக்குரைத்தா லெதிர்பகரான்
தானிடரே நிதம்புரிவான் றனக்கென்றோர் விதிவகுப்பான்
தேனெனவே மொழிபகர்வான் சிந்தைசெயல் விடமனையான்
ஈனனர சாட்சியினு மெழுநரக மினிதாமே. (௧௩௯)

---

௧௩௫. ஆற்ற - செய்ய. வாளாதுறல்- சும்மாவிருத்தல்,
௧௩௭. இனா (இன்னா)—துன்பம்.

முற்றுநிறைந் திருக்குமுயிர் முடுகிவிடுத் தேகுமெனில்
வெற்றுடம்பு தனித்துறுமோ வேல்வேந்தே யென்பர்சிலர்
அற்றதுவாழ் வென்பர்சிலர் அந்தோவென் றழுவர்சிலர்
பற்றிமுழு வதுமெவரே பகர்வரவர் படும்பாடே. (கச0)

அண்ணன்முக முழுமதிய மணிமறுகிற் காணுதலுங்
கண்ணினிடைப் புனலொழுகக் கமலநிகர் முகத்தினராய்ப்
புண்ணுடைய மனத்தினராய்ப் புடைத்திடுகை வயிற்றினராய்த்
தண்ணளியங் குழல்குலையத் தனித்தனியேங் கினர்மடவார். (கசக)

## நகரவாசிகட்குக் குமணன் தேறுதல் கூறுதல்.

அதிதுயரத் தவராகி யழுதடுத்துத் தனைச்சூழ்ந்த
மதியமைச்சர் முதலாய மாநகரத் தாரையெலாந்
துதிபெறுநற் குணக்கடலாஞ் சொல்விலடங் காப்புகழான்
கதுமெனவே கையமைத்துக் கட்டுரைசிற் சிலபகர்வான். (கசஉ)

விதிமுறையிற் பிறழாதீர் மெய்நடுங்கிக் குலைவதெவன்
இதுவுமொரு நன்மைக்கே யெனக்கருதி நுமக்குரிய
முதுகடமை நிறைவேற்ற முன்னின்று மெய்ம்மையொடு
மதியுறுதி யொடுநீதி வழுவாது வாழுதிரால். (கசங)

இன்றுவரை நுமக்குநல மியற்றினன்யா னெனவிரங்கிக்
கன்றியனை வருங்குழுமிக் கழறுமொழி சரதமெனில்
நன்றியறிந் தவராகி நானவிலும் படிநடத்தல்
என்றுமுமக் கறமாகு மெனக்குமகிழ் விதுவேயாம். (கசச)

நவம்புரியு மெழின்மடவார் நாடுநக ராசனைத்தும்
பவம்புரிதற் கேதுவலாற் பார்ப்பினொரு பயனுளதோ
அவம்புரியு மியாக்கையிஃ தழியுமுன மன்பெய்தித்
தவம்புரியப் பெற்றவரே தமதுபிறப் பற்றவரே. (கசரு)

வெம்பியெடுத் துரைத்தவெலாம் வீணுரையே விரும்பியவென்
தம்பியெனக் கியற்றுதவி தாரணியி லெவர்புரிவார்
பம்பியவென் னுயிரனையீர் பரிந்துண்மை பார்க்குமிடத்
தெம்பிமனக் கினியவரே யெனக்கினிய ரெனத்தெளிமின். (கசசு)

ஒன்றேனு மிதுவரையா னுரைத்தமொழி தவறுடைய
தென்றேனும் பார்த்தனிரோ வினித்தவறன் முறையாமோ
இன்றேயா னெம்பிகொளற் கீந்தனனிவ் வரசுவனஞ்
சென்றேநற் றவமியற்றுஞ் சிந்தையிற் றிடமடைந்தேன். (கசஎ)

ஒருதாத் திடைத்தோன்றி யொருவரமு தூட்டவுண்டும்
ஓரகத்தி னுடனுறைந்து மோரரசுக் குரியமியாம்
ஆரரசு புரியினுநீ ரடங்குவதல் லாதெமக்குள்
தாரதம்மி யம்பகுத்துச் சாற்றுவது தகவாமோ. (கசஅ)

இரவிகுடக் கெழுந்தாலு மெழுகடலுங் கிளர்ந்தாலும்
புரவிமுகத் தெழுந்துகனல் பொங்கியெதிர் போந்தாலும்
திரமருவித் தவமியற்றித் திருவடையா மற்றிரும்பி
வருவமெனு நினைப்பையின்னே மறந்திடுமின் மறந்திடுமின். (கசகூ)

எல்லீரு மிவனுரைத்த வெனதுரையை மறுத்தனுவுஞ்
சொல்லீரா யெம்பிபுகல் சொல்வழியி னடக்குதிரேல்
கல்லீரும் புயவலியீர் கடவுளர்க்கு மியாவருக்கும்
நல்லீரென் றுரைத்துவிடை நல்கிநகர்ப் புறநடந்தான். (கரு0)

### குமணன் வனத்துக்குச் சென்றபின் நகர்நிலைமை.

மொழியெலாம் வெடிகாட்ட முகமெலாஞ் சுழிகாட்ட
விழியெலாம் புனல்காட்ட வியர்வெலா முடல்காட்ட
வழியெலாந் தூள்காட்ட வாழ்வெலாந் துயர்காட்டப்
பழியெலாந் தலைகாட்டப் பரிபவமுற் றவரிருந்தார். (கருக)

அந்தோவென் றரற்றொலியு மார்த்தெழுநெட் டுயிர்ப்பொலியுங்
கொந்தாருங் குழல்குலையக் குலைகின்ற குலக்கொடியார்
சந்தாபத் தழுமொலியுந் தம்மார்பிற் புடைப்பொலியும்
எந்தாலத் துரைப்பதெவ னெழுகடலி னொலிபோலாம். (கருஉ)

நிதியிழந்தோ மென்பர்சிலர் நெடியசிர மசைத்திசைக்குந்
துதியிழந்தோ மென்பர்சிலர் சொற்கடலிற் றுளைந்தறியும்
மதியிழந்தோ மென்பர்சிலர் மனமறுகி வாணரெலாம்
பதியிழந்து வனநோக்கிப் பார்வேந்தன் படர்பொழுதே. (கருங)

---

கசகூ. கனல் - வடவாமுகாக்கினி. இது வடவை யென்னுங் குதிரை முகத்துத் தோன்றுவதாதலினிப் பெயர்த்தாயிற்றென்பர்.

கருஉ. சந்தாபம் - உருப்பம். தாலம் - நா.

மடனீந்த கொடியமனை வசித்தலைவற் கரசுபுரி
இடனீந்த பேரறிவா னிரங்குமொழி யுடன்மாந்தர்
தடனீந்த விழிவழியே தனித்தனிகொட் டியகண்ணீர்க்
கடனீந்தி யெழுபிறவிக் கடனீந்தக் கடக்கின்றான். (௧௫௪)

### குமணன் நகர்ப்புறஞ் செல்லுதல்.

வனமடுத்து நிரைபுரந்த வனமடுத்த திருமார்பன்
தனைநிகர்த்துப் புவிபுரந்த தண்ணளியான் றவமியற்று
நினைவிழுத்து முன்போக நெடியபவப் பிறவிதரு
வினைவிடுத்துப் பின்போக மிகமகிழ்ந்து தான்போனான். (௧௫௫)

முரண்டழைய யாங்குறினு முடுகிவளை தரும்பாச
அரண்டனைவிட் டாங்குயரு மரண்கடந்து சலசரம்போல்
திரண்டமகார் மனைகுழுமிச் செறிகுடும்பக் கடல்கடந்தாங்
கிருண்டகுழற் கணிகையர்நெஞ் செனுமகழி கடந்தனனால். (௧௫௬)

### வேறு.

நால்வகைப் படைகளு நணுக வூனுகர்
வேல்வகைப் படையொடு மேவும் வேந்தர்கோன்
கால்வகை நடைகொடு கதுவ லால்விதி
போல்வகைப் படுவது புகலி னியாதரோ. (௧௫௭)

அண்ணலி னுயர்குணத் தமைவு காண்டலின்
விண்ணவர் மலர்மழை வியந்து பெய்தெனக்
கண்ணகன் மாகமீக் கமழுங் காவெலாம்
உண்ணிறை மதுமல ருகுப்பச் சென்றனன். (௧௫௮)

தடத்தலை மோதன்மத் தளத்தி னோதையா
மடத்தலை மாதர்போன் மஞ்ஞை யாலுவ
படத்தலைத் துயில்பாம் பசனை யொப்புற
நடத்தலை யுடையகோ னணுகு மங்ஙனே. (௧௫௯)

---

௧௫௫. வனம் - காடு. நிரை - பசுக்கூட்டம். வனம் - துளசி.

௧௫௮. கண் அகல் - இடமகன்ற. மாகம்- ஆகாயம். உகுப்ப - சொரிய.

௧௫௯. மடத்தலை மாதர்- இளமைப்பருவ முதற்சாதிப் பெண்கள். ஆலுவ - ஆடுவன. படத்தலை - படத்தினிடை.

தனிமைபா லிராகவற் சயித்த கோமகன்
வனமுற நோக்கல வருந்திப் பண்ணையின்
நனிபுறை ஞண்டரு நந்து மாதிய
பனிதரு மளைபுகப் பார்த்துச் சென்றனன். (௧௬௦)

முற்றிய கல்வியான் முதிஞர் யாவருந்
தெற்றெனத் தலைகுனிந் திருக்குஞ் செய்கைபோல்
சுற்றிய வயற்றொறுஞ் சூனி ரம்புநெற்
கற்றைக டந்தலை கவிழ்ந்து நின்றவே. (௧௬௧)

ஆழிபாற் பகைவரை யடக்கு மண்ணன் மான்
சூழிருங் கானகஞ் சூழ்வ னென்றுகான்
கோழிகூ கூவெனக் கூவிச் செல்வன
பாழியந் தோளினன் பார்த்துப் போயினன். (௧௬௨)

ஆவியொன் றாப்புவி யனைத்து நாட்டிய
காவலன் பிரிவினாற் கலுழ்வ வாமெனப்
பூவையின் மலர்மதுப் பொழிந்து தோன்றுறத்
தேவர்பூ பதிநிகர் செம்ம லேகினன். (௧௬௩)

தேனள விடுவயல் கானம் பிற்செல
நானள விடவொணு நலத்த தென்பதேன்
தானள விடவொணுத் தகைய தாகிய
வானள விடுமுயர் வரையை நண்ணினன். (௧௬௪)

வராகமலை வருணனை.

எங்கணுஞ் செடிகொடி யெங்கும் பாசடை
எங்கணும் பன்மல ரெங்குங் காய்வகை
எங்கணும் பல்கனி யெங்கும் பில்குதேன்
எங்கணுங் கிழங்கின மெங்குந் தண்புனல். (௧௬௫)

ஆண்டுபற் பலவறந் தாலு நல்வளம்
ஈண்டுபல் வேயின மெங்குந் தொக்கதால்
தூண்டுநல் லறிவினர் சொற்ற நாமத்துள்
காண்டகு வரைவிண்டு கணிக்கப் பெற்றன. (௧௬௬)

௧௬௨. பாழி-பருத்த. ௧௬௫ பாசடை-பச்சிலை. பில்கு-துளிக்கின்ற.

மல்லுடை மாண்பொடு வந்து நோக்கினர்
அல்லென மலைத்திட வுற்ற பண்பினால்
சொல்வலர் மலையெனச் சொற்ற பேர்ப்பொருள்
புல்லுவ திதுவெனப் புகறற் கேற்றது. (கசுஎ)

அளப்பதற் கரிதுபல் பொருளு மன்னது
துளக்கிலா நிலைபது துயர நீப்பது
விளக்குமெய்த் தவத்தினர் விரும்பி நன்றெனக்
கொளத்தகுஞ் சீரது குறவ ரூரது. (கசுஅ)

திருமலர் மணிநிதி சேர்த்த ணிந்துலாம்
பொருநதிப் பெண்மகப் பெற்றுத் தண்புனல்
விரிதிரைப் புணரியை மேவச் செய்தலால்
மருகென வருணனை வழுத்தக் கொள்வது. (கசுகூ)

நீலமா மாகமீ நிரைத்த தாரகை
போலமுண் டகத்தடை பொலிய நீர்த்துளி
சாலவுற் றொளிர்சுனைத் தலம ரீஇயது
வேலென மிளிர்கணார் வேட்ட மீவது. (கஎ0)

கடகட வெனுமொலி காட்டி வெவ்விய
வடவையுங் குளிர்குளிர் மருவித் தத்திய
நடைகொடு வெள்ளணி நாற்றி யாங்குறுந்
தடமலி யருவிநீர் தயங்க மேயது. (கஎக)

திருமணப் பந்தரிற் செறித்து நாற்றிய
பெருமணி மலரணி பிறங்கி யாங்குதேன்
தருகனி விரிமலர் ததைந்து மேவிய
மருமலி தண்டலை வாழ்வு சூழ்வது. (கஎஉ)

---

கசுஎ. மல்-வளம், கசுஅ. துளக்கிலா- அசையாத. நீப்பது-நீக்குவது.

கசுகூ. மருகென-மருமகன் என.

கஎ0. மாகமீ நிரைத்த-ஆகாயத்தின் மீது வரிசைப்படுத்திய. முண்டகத்து அடை - தாமரை இலை. மரீ இயது - மருவியது. வேட்டம் - மணம்.

கஎஉ. செறித்து - நிறைத்து. நாற்றிய - தொங்கவிட்ட. ததைந்து - நெருங்கி. தண்டலை - சோலை.

கருநிறத் தண்டலை ககன மீதெலாம்
இரவியுற் றடர்ந்தன மேவ லாலிவண்
இரவியுற் றன்னகொன்மற் றின்று கொல்லெனு
மருமைய நண்பகன் மாட்டு மீவது. (க௱௩)

வேறு.

காமலி யருணத் தழைகளுந் தகமாக் காட்டிவா ரணம்புடை பெருக்கித், தேமலி கூட்டுப் பரிசனை யேந்திச் சீகரப் பனித்துளை சேர்த்து, நாமுறக் கோடைப் பகைவனை வாட்டி நாடொறு மகிழ்வொடு நளிராங், கோமகன் கொண்மூ மகுடமும் புனைந்து கொற்றமுற் றிருப்பதக் குன்றம். (க௱௪)

உறவினர் பாச பந்தமே வாழு முளத்தவ னாயினு மங்கண், குறுகுவா னாயிற் பந்தமுங் குறுகுங் குறைவிலா ஞானமுற் றெய்தும், தறைமிசை வேட்கை யகலுமா மென்னிற் றவஞ்செயக் கருதிவந் தவர்கள், பெறுவதித் தகைய நலமென வெவரே பேசுவர் பிறங்கலிற் பெரிதே. (க௱௫)

நற்றவம் புரிந்து வராகமா முனியு நளிர்மதிக் கடவுளு நளினப், பொற்றவி சிருக்கும் புங்கவே தியனும் பூசுரர் முனிவர்பற் பலருங், கற்றவர் பிடித்த கடவுண்மா மணியின் கருணையுங் காகுத்த னருளும் பெற்றதிக் கிரியி னிதனையே வராகப் பிறங்கலென் றுரைப்பர்முற் பேரியோர். (க௱௬)

இந்திர னுலகஞ் சிறந்ததென் றினியா மியம்பிடோந் தவவணப் பெருமைக், கந்தில்சற் றேனுமிணையுறா திவண்வா ழருந்தவமருவுதூர் வாசன், புந்திநொந் தியம்பப் புலவர்கோன் றுயரம் பூண்டதே போதுமாம் பொதிய, வந்துவந் துவந்து மலர்மணம் பரப்பி மகிழ்வெலாம் பரப்புமவ் வனத்தில். (க௱௭)

---

க௱௩. ககனம் - ஆகாய . நண்பகல் - நடுப்பகல்.

க௱௪. அருணம் - சிவப்பு. நாந்தகம் - வாள். தேமலிகூடு - தேன்கூடு. பரிசனை - கேடகம். நாமுற - அஞ்ச. நளிர் - குளிர். கொண்மூ - மேகம். கொற்றம் - வெற்றி. குன்றம் - மலை.

க௱௫. குறுகுவான் - வருவான். வேட்கை - ஆசை. பிறங்கல் - மலை.

க௱௬. நளினம் - தாமரை. தவிசு - ஆசனம். புங்கம் - உயர்வு. கற்றவர் - மலை வில், காகுத்தன் - விட்டுணு.

## வேறு.

தண்ணளி முரல வாசத் தழைக்கர மசையச் செய்ய
கண்ணனை யவிழ்ந்து காட்டக் கஞலிய பொதும்ப ரீட்டம்
உண்ணனி யுவகை பொங்கி யொளிர்முகக் கமலச் செவ்வி
அண்ணலை வாவா வென்றே யழைப்பது போன்ற தன்றே. (கஎஅ)

பூங்குயில் காள மாவம் போருகங் களாஞ்சி தாங்க
மாங்கிச லயம்வா ளேந்த வண்டினம் பாண ராகத்
தேங்கமு கீன்ற பாளை செவ்விய கவரி யாக
ஆங்கொரு தனியா னாங்க ராசவீற் றிருந்தா னையன். (கஎகூ)

## குமணன் தவம்.

கனிசில நாள ருந்திக் காய்சில நாள ருந்தி
நனிதழை சின்னா ளுண்டு நன்னிலக் கிழங்குட் கொண்டு
இனியதேங் கலந்து போது மீர்ம்புனல் வாயு மாந்தித்
தனியர சான பூமான் றவத்தர சாகி நின்றான். (கஅ0)

## இளங்குமணன் அரசியல்.

போதுலாந் தருவி னீழற் புலவர்கள் பூமா னன்பு
மேதக வெழுந்து பொங்க வீற்றினி திருந்தா னாக
தாதுலா மதுபத் தண்டார்த் தராபதி தன்பின் வந்த
சோதர னாகிக் கோல்கொள் காதகன் றொழிலுஞ் சொல்வாம். (கஅக)

பூதலத் துயிர்க ளெல்லாம் பொன்றிடப் புரிந்து மேன்மேற்
போதரு மகிழ்ச்சி யோடு பொலிவுறு கூற்றம் போல
மாதவத் தரசை யேவி மாந்தருண் மகிழ்வும் போக்கி
மீதெழு களிப்பி னோடு வீற்றிருந் தனனவ் வெய்யோன். (கஅஉ)

அழுமொலி சங்க மாக வணைத்துமா ரடிக்கு மோதை
முழவொலி யாகக் கண்ணீர் மொய்மணப் பன்னீ ராகப்
புழுதிவீ தியிற்சு கந்தப் பொடியெனப் புரியி னெங்கும்
இழவர சிருப்ப வேந்தா யிளவர செய்த லுற்றான். (கஅ௩)

---

கஎஅ. அளிமுரல - வண்டு பாட. கனை - அரும்பு. கஞலிய - நெருங்கிய. பொதும்பர் - சோலை.

கஎகூ. காளம் - எக்காளம். அம்போருகம் - தாமரை. கிசலயம்-தளிர்.

கஅக. மதுபம் - வண்டு. சோதரன் - உடன்பிறந்தோன்.

கணியணி நூலோர்க் கூவிக் கடிகைவைத் தடுத்த காலைப்
பணியணி சூடப் பாரப் பாரணி புயத்த னாகி
அணியணி பெறமேற் றாங்கி யங்கத முடைவா ளேந்தி
மணியணி மகுடம் பொங்க வந்தர சணையிற் சேர்ந்தான். (கஅச)

அரசணை யிருந்த வேலை யமைச்சரும் பிறரு மீண்டித்
தருவகை யுறைக ளேற்றுத் தருக்கெலா முருக்கொண் டாற்போற்
பெருமித மடைந்து மேருப் பிறங்கலிற் பிறங்கு திண்டோள்
மருவிய வலியால் வாரி மாநிலம் புரப்பா னானான். (கஅரு)

அறத்தையு நோக்கான் செவ்வி யருளையு நோக்கா னன்புத்
திறத்தையு நோக்கான் கொண்ட சிறப்பையு நோக்கா னெய்து
மறத்தையு நோக்கான் பண்டை வழக்கையு நோக்கா னாகிப்
புறத்தொடு மகத்துஞ் செல்வப் பொருளையே நோக்கி வாழ்வான். ()

## இளங்குமணன் குமணனைப் பற்றித் தீயன நினைத்தல்.

தன்னினல் லறிவுள் ளோரிற் றருமத்திற் கொடையிற் பண்பில்
முன்னவ னாகி யாண்ட முன்னவ னரசை வெளவி
இன்னணங் கோன டாத்து மின்னவ னுள்ளத் தோர்நாள்
உன்னுதற் கரிய தொன்றை யுன்னுத லுற்றா னந்தோ. (கஅஎ)

மல்லன்மா நிலமெ லாந்தன் மலரடிப் படுக்க வாழும்
நல்லர சுரிமை தன்னை நம்மிடங் கொடுத்து நீகான்
செல்லுதி யன்றே லுன்னைச் செகுப்பலென் றுருத்து நாம்போய்ச்
சொல்லலுங் கொடுத்துக் கானஞ் சூழ்ந்தனன் சூழ்ச்சி யாதோ. ()

பணமெனிற் பிணமு மாசைப் படுமெனப் பகர்வா ரந்தப்
பணமுமேம் பாடுஞ் சேரிப் பாக்கிய வரசு தன்னைக்
குணமொடு கொடுத்தா னென்று குறிக்கொளா குணத்தி னாலே
தணவிலாப் பொருளின் வேட்கை தனையெனுந் தகைய ரியாரே. ()

---

கஅச. கணி - சோதிடம். கூவி - அழைத்து. கடிகை - நாழிகை,முகூர்த்தம். பணி - பாம்பு. சூடம் - உச்சி.

கஅரு. வேலை - சமயம். ஈண்டி - நெருங்கி. பெருமிதம்- கருவம்.

கஅஅ. மல்லல் - செழிப்பு. செகுப்பல் - சங்கரிப்பேன். உருத்து-சினந்து. சூழ்ச்சி - யோசனை.

ஆதலா னம்மைக் கோறற் காம்புய வலியில் லாது
மோதுபோர் புரிதற் கஞ்சி முன்னுயிர் காத்தற் குன்னிப்
பூதலத் தரசை யீந்து போயினன் கானம் போலும்
ஈதலாற் றுணிவொன் றில்லை யின்னதே யண்ண னெண்ணம். (ககூ௦)

பல்வகை நிதியி னற்பொற் பளிங்கினன் மணியாற் செய்த
நல்வகை மாடத் தும்பர் நண்ணிவீற் றிருந்த செம்மல்
கல்லொடு புல்லு முள்ளுங் கனலிய கான மெய்தி
எல்லொடு பனியும் வாட்ட வெவ்வித மிருப்ப னம்மா. (ககூக)

நல்லியல் வாணர் செய்யு ளாரத னனையார் பாடல்
எல்லியு மெல்லுங் கொண்ட விருசெவித் துளையி னூடு
வல்லியங் கரடி பன்றி மதமலை யரிகு செய்யுஞ்
செல்லியல் குமுறல் கேட்கிற் சிந்தனை மெலிவு றாதோ. (ககூஉ)

அமுதினு மினிய வாக வடுதொழி லாளர் செய்யக்
கமகம வென்னக்கந் திக்குங் கறியமு துண்ட வாயான்
அமர்தழை சருகு கந்த மரியகாய் கனியு ணக்கள்
தமையிரு கரத்தாற் கொண்டு தான்புசித் திருப்பன் கொல்லோ. (ககூங)

நூலெலாந் தெரிந்த நெஞ்ச னுவல்வயப் பரிமாக் கைமா
மேலெலா மாடை யாற்றும் விமானமேன் மேவிச் சென்றான்
பாலெல்லாம் பருக்கை யாதி பரிவுமேற் பரிவு செய்யக்
காலினாற் றிரியி னெஞ்சங் கவலுறல் கணிப்பிற் றாமோ. (ககூச)

என்றுமில் லாதோர் நெஞ்சி னின்பமே யினைத்தென் றெண்ணார்
துன்றிய பெருஞ்செல் வத்திற் றோன்றினர் வறிஞ ராயில்
சென்றன மகிழ்ச்சி யெல்லாஞ் சிந்தையை வாள்போழ் றாக்கக்
கன்றுத லன்றி யுள்ளங் களிப்பது காணற் பாற்றோ. (ககூரு)

ஆகையாற் கானத் தண்ணி யாயுண ளளவு மங்ஙன்
சாகமா திகளை யுண்டு தண்பனி வெயிலுந் தாங்கி
ஓகையாற் றவஞ்செய் வானென் றுன்னுதன் மடமைத் தாகும்
வீகையே வேண்டு மன்றேல் வேறொரு சூழ்ச்சி வேண்டும். (ககூசா)

---

ககூஉ. எல்வி - இருள். எல் - பகல். வல்லியம் - புலி. மதமலை - யானை அரிகு - சிங்கம். செல் - மேகம்.

ககூங. அடுதொழில் - சமையல்வேலை. உணக்கள் - உணவுகள்.

ககூச. பரிமா - குதிரை. கைமா - யானை. மாடை - பொன். பருக்கை - பருமணல். பரிவு - துன்பம். கணிப்பிற்று - அளவினது.

ககூசா. சாகம் - இலை. ஓகை - மகிழ்ச்சி. வீகை - சாதல்.

இனியவ னென்செய் வானே யினியவ னெவர்க்குந் தன்பால்
கனியுள மகிழ்ச்சி பொங்க நட்டவர் பலர்பா னண்ணிக்
கனியொடு விளைந்த கூறிக் கதுவுபல் படையும் பெற்றுத்
துனிதவிர் மனத்த னாகித் தும்பைபூண் டிங்குச் சேர்வான். (௧௯௭)

மணமலி கடுக்கை மாலை வரதனு ரணியும் பாந்தள்
புணரியிற் றுயில்வோ னேறும் புள்ளினுக் கஞ்ச லுண்டோ
துணைவலி மருவிற் போரிற் றோற்கலா னன்றி நம்பால்
தணவின ராகி யாங்கே சார்வர்நம் வயவர் தாமும். (௧௯௮)

பின்னரியாந் தனிமை யாகிப் பித்துளம் பிடிக்கச் சோர்வேம்
அன்னது வருமுன் காத்த லறிவினுக் கழகே யாகும்
முன்னவற் பொருவே மென்னின் முடுகிநம் படைகளெய்தா
இன்னதோன் றியற்றே மாயி னிந்நிலை நிலைத்த தன்றால். (௧௯௯)

இளங்குமணனின் மிகக் கொடிய சிந்தனை.

மாயமா யனையான் சென்னி வெளவிவந் தவர்க்குக் கோடி
ஆயசெம் பொன்னை யள்ளி யளித்துமென் றறைந்தே மாயிற்
போயெவ ரேனும் வஞ்சப் புணர்ப்பினாற் றலையைக் கொண்டு
தாயிவண் வருவ ரியாமுஞ் சஞ்சலந் தவிர்த்து வாழ்வேம். (௨00)

நமதுநாட் டவர்க ளீது நாடிலா ரெனினும் வேறாய்
அமருநாட் டவரில் வஞ்சத் தருங்கல மாகி வாழுந்
தமைநிகர் வறிஞ ரானோர் தாழ்க்கல ரேகி யன்னான்
குமைதர வீட்டிச் சென்னி கொண்டிவண் வருவ ரன்றே. (௨0௧)

ஈதலாற் றுணிபொன் றில்லை யிவ்வகைச் சூழ்ச்சி நம்பாற்
போதுவ தன்றி மற்றோர் புந்தியிற் பொருந்துங் கொல்லோ
மேதகு மறிவே மென்று விம்மித முடைய னாகித்
தாதவிழ் புயம்பூ ரித்தான் றனைநிகர் தானும் பேதை. (௨0௨)

குமணன் றலைக்குக் கோடிபொன்னென்று பறையறைவித்தல்.

மற்றைநாட் சபையின் வந்து வள்ளுவர்க் கூவி னவ்வந்
துற்றன ரந்தோ தான்முன் னுன்னிய படியே சொன்னான்
சற்றுமுள் ளிரக்கம் பண்பு தயவறி விலாது முற்றுங்
குற்றமே புரிந்து வாழுங் கோடரிக் காம்பு போல்வான். (௨0௩)

---

௧௯௭. நட்டவர் - சிநேகர், கதுவு - பொருந்திய, துனி - பயம், தும்பைபூணல் - போர்க்கோலங்கொள்ளல்.

௧௯௮. பாந்தள் - பாம்பு, வயவர் - வீரர்.

தனக்கொரு செயலு மின்றித் தாங்குநற் றுணையு மின்றிக்
கனத்தெழும் பெரிய சூறைக் காற்றிடைச் சருகே போன்ற
மனத்தின ராகி நின்ற வள்ளுவ ருயிருக் கஞ்சிப்
புனற்கணி னொழுகத் தீயோன் புகன்றவா புரிந்து.போனார். (௨0௫)

மடியுறுக் கொடிய காலன் வாய்முழக் கென்கோ தீய
விடமெழு முழக்க மென்கோ மேதினி முதல யாவும்
முடிவுறக் கிளம்பு மூழி முளரியின் முழக்க மென்கோ
இடிமுழக் கென்கோ வன்றி யென்னென்கோ வினைய வோதை. ( )

### பறையொலி கேட்டுப் பாரினர் பதைத்தல்.

துவைத்தெழு வெடியி னார்ப்பாற் றுணுக்குறு விலங்கு மாய
நவிக்குரல் கேட்ட பெண்க ளுயக சனகி மாதுஞ்
செவிச்சுடு மோதை கேட்ட சிஞ்சுகப் புள்ளும் போன்று
தவித்தனர் நகர மாக்க டனித்தனி யிரங்கிச் சாய்ந்தார். (௨0௯)

செவிகரம் புதைப்பர் சில்லோர் செய்யவாய் புதைப்பர் சில்லோர்
புவியுறல் வெறுப்பர் சில்லோர் புரண்டுநொந் தழுவர் சில்லோர்
குவிகரத் தொடுபெம் மானைக் கூய்முறை யிடுவர் சில்லோர்
இவைசெய லென்று காணு தேங்கிநெட் டுயிர்ப்பர் சில்லோர். (௨0௭)

பழுதுசெய் வினைமேற் கொண்ட பாதகன் பறையி னார்ப்பால்
அழுதுநொந் தரற்று மாந்த ரனுருறச் செவியில் லாரைத்
தொழுதனர் புகழ்த லுற்றார் சுவர்த்தலந் தொறுங்கு லாவ
வழுதுசித் திரங்க ளெல்லா விரங்கிலா ரெவரு மின்றே. (௨0௮)

### பறையறை வித்தமை குமணற் குரைத்தல்.

இனையதை யொருவன் றொல்லை யிறைவனுக் குரைப்பான் வேண்டி
நினைவுட னெழுந்து காவி னெடிதுவல் விரைவிற் போகிப்
புனைபெரும் புரவுப் பூமான் பூங்கழல் போற்றி நின்று
பினையவன் செய்கை யாவும் பேசின னகன்று போனான். (௨0௯)

---

௨0௬. மடி - சோம்பல். முளரி - தீ. ஓதை - முழக்கம்.

௨0௭. மாயநவி - மாயமான். குரல் - தொனி. சிஞ்சுகம் - அசுணம்.

௨0௮. அருர் - துன்பம். செவியில்லார் - செவிடர்.

௨0௯. தொல்லையிறைவன் - பண்டைவேந்தன் (குமணன்.) காவு - காற்று. புரவு - காத்தல். பினையவன் - (பின்னையவன்) தம்பி.

குமணனறிந்து கொண்டபேருவகை.

அம்மொழி யறிந்த போதி னரசிளங் தன்னு டன்னின்
மும்மடங் கூங்கு பொங்கி முடுகுமேக் கழுத்த ளுகித்
தெம்முனை யடுபோர் சாய்க்குஞ் சிங்கவே றனைய செம்மல்
தம்முணர்க் தவரி னெஞ்சஞ் சலிப்பிலா துறைத லுற்றான். (உகO)

ஆயுவோ யுற்ற காலை யடுப்பவ ரருவ ருக்கச்
சீயொடு புழுவு மண்ணுஞ் சேருமிச் சென்னி தன்னை
மீயுயர் செம்பொன் கோடி விலையென விளங்கச் செய்தான்
தாயினு மினிய னெம்பி தானெனக் கருத லுற்றான். (உகக)

சுடச்சுடக் கரமீக் காலுஞ் சுவணமுஞ் சுவறத் தீயில்
அடச்சுவை பெருகுங் கன்ன லமுதமும் பாலும் போலுந்
திடத்தமு தறிஞர்க் கின்னுச் செறிதொறும் புகழே யல்லால்
கடற்புவி யிடத்துத் தீது கடுகெனுந் துணையு முண்டோ. (உகஉ)

பெருந்தலைச் சாத்தனு ரென்னும் புலவரியல்பு.

வேறு.

நலத்தகு குமணனின் னணமி ருப்புழி
இலக்கிய மெனும்புணை யேறி யாவரும்
சொலத்தகு தன்மதித் துடுப்பி னுற்றுளோர்
இலக்கணப் புணரியி னெல்லை கண்டவன். (உகங)

புத்தமு தொழுகுறு புதுமொ ழிக்குழாம்
மொய்த்தன செறிதர மொழியும் பல்கவிக்
குத்தகை யுடையவன் கூரக் கோளினர்
சித்தமுங் களிகொளச் செப்புஞ் செவ்வியான். (உகச)

பூப்பிற ழாவகைப் பொறைய னுயிர
நாப்பிழைப் புறும்படி நவிலு முந்தையோர்
கோப்பிழ வாவகை குறித்த நூலெலாங்
காப்பினின் றெளிதருங் கருத்த னுயினன். (உகரு)

உகஉ. கரம் - ஒளி. சுவணம்-பொன். சுவற - வற்ற.
உகச. தகை - பெருமை. கூரம் - பொறாமை.
உகரு. பொறை - சுமை. கோப்பு - கோலவ.

டஞ்சலக் கணத்தொடு பஞ்ச காவியம்
பஞ்சமொன் றின்றியே பயின்ற நாவினன்
விஞ்சுபல் காவியம் விளம்பு மேதகன்
செஞ்சொலிற் பிரசங்கஞ் செய்யுஞ் சீரியன். (உகசு)

சைவசித் தாந்தமெய்ச் சாத்தி ரங்களைக்
கைவரு நெல்லியங் கனியிற் கண்டனன்
பைவரு பாம்பணைப் பரம னாதியர்
தெய்விக நிலைக்கலை தெளிந்த சிந்தையான். (உகஎ)

நால்வகைக் கவியினு நாளும் வல்லவன்
நால்வகைக் கவிஞரு நன்கு மேச்சுவோன்
நால்வகை யருத்தமு நயந்து தேர்ந்தவன்
நால்வகைத் தானையர் நண்பு பெற்றுளோன். (உகஅ)

மணத்துறு நிம்பமென் மாலை மன்னருக்
கிணக்கமுற் றோங்குமே லெழுவர் துன்னியே
தணப்பிலா துறுதமிழ்ச் சங்க வாணர்கள்
கணத்திலு மதிப்புறக் கற்ற மேதையான். (உககூ)

முருந்தலைத் திருநகை முகிழ்த்துப் பாரதி
பொருந்தலைப் புதுக்கிய புலமைப் புண்ணியன்
வருந்தலைக் கண்டிடா மதுரை யூரினன்
பெருந்தலைச் சாத்தனா ரென்னும் பேரினன். (உஉ0)

மாமியு மருகியு மருவி வாழ்வது
பூமியி லரிதெனப் புகறற் கேற்புறத்
தோமிலாக் கலைமக டொக்க பான்மையாற்
காமர்பொன் மகளருள் கதுவக் கண்டிலான். (உஉக)

ஈட்டுபொன் முயற்சியெண் ணிறந்த வேனுமூழ்
கூட்டுறி னல்லது கூடு றாவெனா
காட்டிய படிகலை நலத்தி னோங்கியும்
வாட்டுறு வறுமையே மலிந்த தன்மையான். (உஉஉ)

---

உககூ. நிம்பம் - வேம்பு. துன்னி - நெருங்கி. கணம் - கூட்டம்.
உஉ0. முருந்து - மயிலிறகடிமுள். பாரதி - சரசுவதி.
உஉக. தோம் - குற்றம். காமர் - அழகு. கதுவ - அடைய.

### புலவர் பொன் விருப்பம்.

இன்னவ ளொருபக லினைய வெண்ணுவான்
மன்னிய கல்விபொன் மலரை மானுமால்
பொன்னதன் மணத்தினைப் பொருவு மாதலாற்
பன்னுபொன் பெறுவிடிற் பயனென் றின்றரோ. (௨௨௩)

மோனமேற் கொடுதவ முயன்ற போதலால்
ஈனமின் றில்லற மியற்று வாரெலாம்
ஞானமுற் றெய்தினு நவில்பொன் னில்லெனில்
கானபர் விலங்கினுங் கடைய ராவரே. (௨௨௪)

சொல்லறம் புரியவுஞ் சுற்றந் தாங்கவும்
புல்லற வோர்தமைப் புரிந்து போற்றவும்
நல்லற நிதிதுணை நண்ணு மின்றெனில்
இல்லறம் இல்லறம் என்னல் ஏற்குமால். (௨௨௫)

இல்லற மியற்றுவார்க் கியன்ற தாரமே
புல்லிய துணையெனப் புகல்வர் செம்பொனே
பல்விதத் தினுந்துணை படுமின் றேலவள்
புல்லிய துணையெனல் பொருந்தும் வேறரோ. (௨௨௬)

பல்வகைப் பண்டமும் பகுத்துச் சேர்த்திடில்
நல்வகை யட்டுண நல்கு வாண்மனை
இல்வகை செவ்விதா மிசைத்த பண்டங்கள்
புல்வகை பொன்னிலார் பொருந்த லெங்ஙனே. (௨௨௭)

வறுமையாற் கல்வியு மாயு மாநிதி
பெறுபொழு தல்லது பெயர்த ராதுயர்
மறுமையிற் பெறுநலம் வழங்கும் ஞானமீண்
டுறுசுகம் பொருளிலார்க் குரிய தாவதோ. (௨௨௮)

### பெருஞ்சித்திரனார் வருகை.

ஆதலா லதுபெறற் காற்ற லியாதென
மேதகு சிந்தனை மேவு வேலையில்
தீதுற வழுக்குறுஞ் செவ்வி யூன்றுகோல்
போதுவ தெனவொரு புலவன் போந்தனன். (௨௨௯)

இத்தக னெவனெனி லிவற்கு முன்மனம்
ஒத்துறு நட்பின னுலப்பில் கல்வியன்
புத்தமு தெனக்கவி புகலு வோன்பெருஞ்
சித்திர னெனும்பெயர் செப்புஞ் சீரியன். (உ௩0)

காண்டலு மிருவருங் கலந்த சிந்தனை
மூண்டெழு களிரவி முன்ன ரெய்திய
மாண்டகு செய்யதா மரைமு கத்தராய்த்
தீண்டுறு கரங்களிற் சேர்ந்து வைகினர். (உ௩க)

பெருஞ்சித்திரனர் குமணன் வண்மை கூறல்.

இன்னணஞ் சுகம்வின வினரி ருப்புழி
அன்னவன் முன்னையற் கடுத்த நாவலர்
இன்னலை விலக்கிய வீகை மேவிய
மன்னவன் குமணமால் வண்மை கூறுவான். (உ௩உ)

முதிரமால் வரையினன் முதிர்ந்த கல்வியன்
துதிபெறு வாணர்கள் துயர நீப்பவன்
கதிபெறு வள்ளல்கள் கலந்தொர் நல்லுருப்
புதிதுகொண் டுற்றெனப் பொருந்து மீகையான். (உ௩௩)

கொடுத்தறி யாதவன் குறித்த தவ்வவர்
எடுத்துறத் திறந்துவைத் திருக்கும் பேழையன்
அடுத்தபல் வாணர்பா லமர்மி டிப்பகை
படுத்தலிற் பாண்பசிப் பகைவ னென்பவன். (உ௩௪)

தன்னிடத் தடைந்தபொன் ருங்கொ டேகுறத்
துன்னிய பல்கரித் தொகுதி யீபவன்
மன்னவன் குமணமான் மாட்ட டைந்தவை
இன்னவை நீயுஞ்சென் றெய்து கென்றனன். (உ௩௫)

பெருந்தலைச்சாத்தனர் குமணனைக் காணச்செல்லுதல்.

தனதிடத் தகன்றனன் றகைகொள் பண்பினுல்
தனைநிகர் தமிழுணர் சாத்தன் றன்மிடி
பினைவிடுத் தனனென வெண்ணி யண்ணுகற்
பனைநிறை பாச்சொலிப் படர்தன் மேயினன். (உ௩௬)

### நற்சகுனக் காட்சி.

படர்தரு வேலையிற் பறவை வேந்தனொ
டடர்கய வாயிட மாகப் போதரக்
கொடியினம் வலத்தினைக் குறித்துச் செல்லுற
நெடிதுக மகிழ்வொடு நினைப்பி னேகினான். (உ௩௭)

### குமணநாடடைதல்.

அடைந்தனன் குமணநா டரசன் கானிடை
யிடைந்தமை யறிந்தனன் விரைவி னவ்வழித்
தொடர்ந்துபோய்க் காண்பதே துணிவென் றுன்னினான்
மடந்தவிர் பலகலை வழங்கும் வண்மையான். (உ௩௮)

நின்றில னவ்விடை நிருப ரேறனான்
சென்றுறை கானகந் தேடிச் சென்றனன்
அன்றல ரரும்பெவ ணடுத்த தாயினும்
துன்றிய மதுமணந் துய்க்கும் வண்டரோ. (உ௩௯)

### குமணனைக் காண்டல்.

ஆசையா தியபகை யடக்கி வாட்டியுந்
தேசுமெய் யுணர்வெனுஞ் செய்ய கோனுடன்
மூசுமைம் புலக்குடி முற்று மாட்டொடு
மாசிலா நற்றவ மன்ன னாகியே. (உ௪௦)

அகத்திடை யெழுமகிழ் வனைத்து மாமலர்
முகத்திடைக் காட்டிநீர் முடித்த தேவன்மேன்
மிகத்துதி பாடியோர் விருக்கப் பாங்குறை
தகப்பெறு குமணனைத் தான்கண் டானரோ. (உ௪௧)

### குமணனை வாழ்த்தல்.

ஆழிநே ரன்பினொ டவண டுத்துறீஇ
ஏழ்கட லெண்டிசை யெட்டுஞ் சீர்த்தியாய்
சூழ்புல வோர்பசி தொலைக்கு முன்னவா
வாழிய வாழிய வள்ள லேயென்றான். (உ௪௨)

---

உ௩௭. பறவைவேந்தன் - கருடன். கயவாய் - கரிக்குருவி. கொடி-காக்கை. உ௪௧. விருக்கம் - விருக்ஷம். உ௪௨. ஆழி - கடல். உறீஇ - உற்று

குமணனும் புலவரும் அளவளாவல்.

கதுமெனப் புகன்மொழி காதி னூடுற
மதுமலி தாரணி மன்னர் மன்னவன்
முதுமொழிப் புலவரீர் முன்னி யீண்டுற
எதுதவ மியற்றினே னெண்ணிக் கண்டிலேன். (உசங)

என்னது முன்னையோ ரியற்று நல்வினை
துன்னிய பான்மையாற் றோன்றி னீரிவண்
அன்னது நல்வர வாக வென்றனன்
மன்னவர் புகழ்தகை வாணன் கூறுவான். (உசச)

ஈகையிற் பண்பினி, லிசையிற் கல்வியில்
வாகையி லறத்தினன் மனத்தி லாண்மையில்
ஒகையிற் றவத்தினி லுவமை யற்றவா
பாகையுந் தேனையும் பழிக்கு மின்சொலாய். (உசரு)

எட்டியொன் றகம்பழுத் திருந்த தாயினுங்
கிட்டுவ ரெவர்சுவை கெழுமுஞ் செய்யதேன்
புட்டியங் குறுகிளைப் பொதும்பர் மேவினும்
பெட்டவ ணடைந்ததைப் பெறுவ ரியாவரும். (உசசு)

ஆதலா லிவணினை யடுத்துக் கண்டனன்
ஈதலால் வேறிலை யிறைவ வீண்டியான்
போதலா லென்னது புலமைக் கேற்புறக்
காதலாய்ப் புகறருங் கவியைக் கேளென. (உசஎ)

பாக்கியப் புதையலைப் பார்த்த வேழைபோல்
நோக்கிய விழிகளு நுணுகு மெண்ணமுந்
தேக்கிய மகிழ்ச்சியுட் டிளைப்பச் செய்யதேன்
வாக்குவ தெனக்கவி வழுத்த லுற்றனன். (உசஅ)

புலவர் குமணனைப்பாடல்.

இருங்கன லடுப்பி லாம்பி யெழும்பவூ ணின்றித் தூர்ந்து
சுருங்கிய கொங்கைத் தோலைச் சுவைத்தழு மகத்தாய் நோக்க

---

உசசு. புள்தியங்குறு - பறவைகளும் மயங்கும்படியான. பெட்டு - விரும்பி.

மருங்கினை யவளு நோக்க வருந்திநின் னேக்கிப் புக்கேன்
பெருங்கலி தவிர்த்து வாழப் பேணுதி குமணா வென்ன. (௨௪௯)

புலவர் கவிகேட்ட குமணன் கூறுதல்.

ஆட்டனு மொழிமுற் கொண்டோ ரருங்கவி யுரைத்தா னந்தப்
பீடுசால் வள்ளல் கேட்டுப் பெருந்தமிழ்க் கரசே யான்முன்
நாடுறை யமய மென்பா னணுகினை யல்லை நீத்துக்
காடுறை வேலை யெய்திக் கவியமு தருத்தா நின்றாய். (௨௫0)

நினக்குறு மிடியை நீக்க நெடுங்கர நிறைய வாரித்
தனத்தினைக் கொடுக்கு மேலாந் தவமில னானே னேனும்
மனத்துறு துயர மெல்லா மாற்றுதி நின்னை யண்ணிச்
சினத்துறு கலியை வீட்டச் செப்புவ னொன்று கேட்டி. (௨௫௧)

குமணன் தன் தலையைத்தம்பியிடங் கொடுத்துப் பொருள்பெறும்படி புலவர்க் குரைத்தல்.

இலையெனப் புகறல் சால வேழமைப் பால தாகுஞ்
சொலைமறுத் துரையே னீயுஞ் சொற்றவா றிற்றி யாலென்
தலைதனைக் கொடுபோ யென்னற் றம்பிகைக் கொடுப்பா யாயின்
விலையெனச் செம்பொன் கோடி மிகமகிழ்ந் தீவான் கோடி. (௨௫௨)

ஈதுநீ புரியி னின்னை யின்னல்செய் கலியும் வீயும்
ஓதிய வெம்பி யுள்ளத் தோங்கிய கவலு நீங்கும்
மேதகு புகழு மேலாம் வீடுமெற் கெய்துங் கண்டாய்
ஆதலா லிதனின் மேலா மறமுமொன் றில்லை யையா. (௨௫௩)

இன்னதை மறுத்தி யாயி னிவையெலாஞ் சிதைத்தா யாதி
அன்னது பயனின் றாகு மழியுமிவ் வுடம்பை நீத்துத்
தன்னைநேர் புகழு டம்பைச் சாருவே னாயி னெற்குப்
பின்னையோ ருறுதி யுண்டோ பேசுதி பெருநூல் வல்லோய். (௨௫௪)

---

௨௫0. பீடு - பெருமை. அமயம் - சமயம்.

௨௫௧. மிடி - தரித்திரம். தனம் - பொன். கலி - வறுமை. வீட்ட - ஒழிக்க.

௨௫௨. புகறல் - சொல்லுதல். கோடி - கொள்ளுதி.

எனவிவை புகன்றே கைவா ளீந்தனன் சென்னி தாழ்ந்தான்.
நினைவினு மரிய செய்கை நிகழ்த்தினன் செய்வா னானன்
புனைபெரும் புகழ்வேட் டுள்ளோர் பூதமெய் வேட்பார் கொல்லோ
அனையவர்க் கியல்பே யாகு மழுதுண்பார் கடுவுண் பாரோ. (௨௫௫)

புலவர் குமணனிடம் கூறுதல்.

அடுத்திவை யுரைப்பக் கேட்ட வருந்தமிழ்ப் புலவ னெஞ்சந்
துடித்தனன் செய்வ தொன்றுந் தோன்றிலன் றண்ணென் றஞ்சி
எடுத்தகை வாளாற் றனே யீரினென் செய்வா மென்று
வடிப்பொலி வள்ளல் கைவாள் வாங்கினன் வழுத்த லுற்றான்.(௨௫௬)

தலைக்கொடை யளித்த மேன்மைத் தரணிபா நினது சென்னி
விலைக்கொடை யடைவா னெற்கு வேண்டுஞான் றீதல் வேண்டும்
உலப்புறு தந்நாள் காறு மோம்பவும் வேண்டு மென்ன
நிலைப்புகழ் வள்ள லொப்ப நிகழ்த்துத லுற்றான் பின்னர். (௨௫௭)

குமணன் கொடையை வியந்து புலவர் கூறுதல்.

உயிர்க்கொடை யளித்த மேன்மை யொருதனி வள்ளா லுன்முன்
வெயிற்குமுன் விளக்கே போல மேவுறு வண்ண மேற்போர்
கையிற்பொரு ளளித்த மூவேழ் கணக்குறு வள்ள லானோர்
அயிர்ப்பிலா திறத்த லாலே யடுத்தது புகழன் னார்க்கே. (௨௫௮)

கற்பகஞ் சுரபி சிந்தா மணிநிதி காரென் றெல்லாம்
பொற்பவோ ருருவம் பூண்டு போந்தகா லையுநின் வண்மைக்
கற்பமு மொவ்வா வாகு மமரர்கோற் குடல மீந்த
அற்புத முனிவ னீயோ வலதுநீ யவனோ வண்ணல். (௨௫௯)

நலவெனப் புகலு மியாவு நண்ணினை யெனினு நாளும்
உலைவுறாப் புலவ ரெண்ணி யுரைத்திடற் குயர்வு மொப்பும்
இலையெனு மிதுவும் பெற்று யிசைதிசை யிசையப் பெற்றாய்
புலனுற நின்னை வாழ்த்தப் பொருந்துசொல் லறியேன் மன்னே. ()

சேடனும் பிளவு பட்ட திறமிது காறுந் தேறேன்
ஆடவர் திலக நின்னா லறிந்தன னதுவுஞ் சொல்கேன்

௨௫௭. தரணிபா - பூபாலா. உலப்புறுது - அழியாது. ஓம்ப - காக்க.

நீடுமுன் புகழை முற்று நிகழ்த்துவா னமையாப் பண்பால்
கூடிய முன்னோர் வாளாற் குறைத்தனர் போலு மன்றே. (௨௯௧)

கையிலுறை யிவ்வா ளொன்றோ களிப்புட னளித்தா யென்றுஞ்
செயிரல தறியா தேனுட் டிகழ்பெரு மகிழ்வுஞ் சீரும்
நயமிகு திருவு மன்பு நம்மவர் பலர்க்கு முற்ற
உயிருமே யளித்தா யின்ன முன்னிநீ யளிப்ப துண்டோ. (௨௯௨)

புகழ்விரும் பினைநீ யீது புரிந்தனை யெனினு மிம்மை
இகழ்வுபின் னரக மென்னு மிருவகைக் கேடு மியான்கொள்
வகைபுரிந் திடுத லன்றோ மாசிலா மணியே போலத்
திகழ்தரு மதியா யீது சிந்தனை செய்தல் வேண்டும். (௨௯௩)

ஈண்டுநீ விளியிற் பின்னு னிருப்பனே விறப்பே னாகிற்
பூண்டவென் மனைவி மக்கள் பொன்றுவ ரன்றோ விந்தச்
சேண்டரு பாவநிற்கே சேருமா றறிதி யொன்றும்
வேண்டல னியானுன் னன்பின் மிக்கதோ விளியுஞ் செல்வம். ()

தரித்திரஞ் செல்வ மோர்பாற் றங்குவ தில்லை யென்று
விரித்தநூ லுரைக்கு மீது மெய்ம்மையே யதனா னும்
பெருத்துறு செல்வத் தோடு பிறங்குதல் காண்டி யிங்கே
இருத்திபின் வருவன் வாளோ டெனவிரைந் தேக லுற்றான். (௨௯௫)

புலவர் இளங்குமணனிடஞ் செல்லக்கருதல்.

ஏகுவா னினைய வள்ள லிளையவ னுளத்தோர் சற்றும்
நோகுமா றியற்றி டாது நுவலருங் களிப்பே செய்துஞ்
சாகுமா றுன்னி னான்றன் றகையுறத் தெளிவா னங்கட்
போகுவா னிடையொன் றுள்ளிப் புகுந்தனன் மாந்தையூரில். ()

புலவர் மாந்தை நகர் சேர்தல்.

சாந்தமும் புழுகுஞ் செய்ய தன்பனி நீரு மாதர்
வேய்ந்தபூந் தாருஞ் செம்பொன் வினைசெய்வோ ராவுந் தூளும்
போந்தவர் பாத மெல்லாம் புதைபடச் சேறு செய்யும்
மாந்தையம் பதியின் வீதி வளனெலா நோக்கிப் புக்கான். (௨௯௭)

௨௯௬. நுவலரு - சொலற்கரிய. உள்ளி - நினைத்து.
௨௯௭. வேய்ந்த - சூடின. தாரும் - மாலையும். வினை - தொழில்.

### புலவர் ஒரு சிற்பியையடுத்து அளவளாவல்.

சிற்பநூல் விதிக ளெல்லாந் தேர்ந்தவோர் கம்மி யன்பால்
அற்புறை முகத்திற் புக்கா னவனிவண் வருகை யேற்றுச்
சொற்பெறு முகமன் கூறித் துதித்தரு கிருந்த லுற்றான்
கற்பனைக் கடலே யான கவிவலோன் மகிழ்விற் கூறும். (உசுஅ)

மாங்கைபம் பதியில் வாழு மகுடநற் றியாகி கேளாய்
ஏந்திரு வடிநின் பாலீண் டிசைந்தன வென்னக் கேட்டுத்
தீந்தமிழ் வல்லோய் நன்கு தெளிவியா தொழிபி னீயின்
போந்திட வொட்டே னென்னாப் பொங்கிய சினத்திற் சொன்னான்.

வினைபுரி கம்மி யர்க்குள் வேந்தநீ மகிழ்வோ டொப்ப
அனையவை காட்டி லீண்டெற் காம்பொரு ளதுவா னாலும்
இனைவுறு தாற்றி யின்னே யீதியோ வென்ன வன்னான்
நினைவினை யோமென் றேற்ப நிகழ்த்துவன் கவிஞர் கோமான். ()

போற்றுசீ ரானு மன்னர் புனைமுடி பட்டுப் பட்ட
காற்றழும் பொன்னும் வாணர் கருதிய பொருள்க ளெல்லாம்
மாற்றிலா தளித்துக் கையில் வருந்தழும் பொன்று மென்று
சாற்றினன் றுவட்டர் கோமான் றனைதுடல் பூரித் தானே. (உஎக)

### புலவர்க்கு யாதுவேண்டுமென்று சிற்பி கேட்டல்.

பெருமகிழ் வடைந்து நுங்கள் பேச்சினை மறுக்க வல்லார்
இருநிலத் தெவரே யானென் னெளிமையா லிசைத்தே னம்மா
வருபுக ழிகழ்மற் றெல்லாம் வாணர்வாய் வயத்த வென்னாத்
தருபொரு ளினைய வென்று சாற்றுக விறைவி னென்றான். (உஎஉ)

### குமணன்றலைபோ லொன்று செய்துதரும்படி புலவர் வேண்டல்.

ஆவியொன் றிபைக்கு மாட்சி யன்றிமற் றெவற்றி னாலும்
பூவியில் வாழ்க்கை யாற்கும் புந்தியுள் வியப்புப் பொங்கி
மேவுற வினைய லாஞ்செய் விறலுளா யெனது நெஞ்சின்
ஆவலீ தென்று முன்ன மடுத்தவை யனைத்துங் கூறி. (உஎங)

---

உஎ0. ஆற்றி - செய்து. இன்னே - இப்பொழுதே. ஓமென்று-சரியென்று. உஎக. துவட்டர் - கம்மாளர். உஎங. விறல் - வலிமை.

வாரணங் கோடி கோடி வாணருக் களித்து வேதன்
நாரணன் பெறுத நாடு நாடுசேர்க் குமண வள்ளல்
சீரணங் குறும வீந்த சென்னிபோ லொன்று செய்து
தாரணங் குலவு வைவேற் றம்பிகைத் தருதற் கென்றான். (உஎச)

## சிற்பி செய்த போலித் தலைத்தோற்றம்.

என்றலு மகிழ்ச்சி பொங்கி யியல்வினை முழுதும் வல்லோன்
துன்றிருள் சிலிர்த்த தென்னத் தொக்கபல் லுரோமப் பாங்கும்
ஒன்றிய மறுவை நீத்த வொண்பிறை நுதலும் வில்லுட்
கன்றிய வளைந்த காட்சி கவினிரு புருவச் சீரும். (உஎரு)

கருணையு மன்பும் பொங்கிக் கலந்தெழு கமலம் போல
மருவிய விழியும் வள்ளை வார்செவிச் செவியு மெட்பூப்
பொருவிலா நாசிப் பண்பும் புத்தமு தொழுக வன்று
விரிசெழுங் குமுதம் போல விளங்கிய நலங்கொள் வாயும். (உஎசு)

முழுமதிக் குவமை சாலு முகமதி யிடத்து முந்தி
எழுநிலாத் தோற்றந் தோற்ற மெனச்சொல்புன் னகையுஞ் சேரப்
பழுதில்செம் மணிகால் கந்திப் பான்மட லுண்டேற் கூற
வழுவிலா வுவமை யென்ன வழுத்துபாற் கழுத்தின் மாண்பும்.(உஎஎ)

## போலித்தலையை வாங்கிப் புலவர்கூறுதல்.

பொருந்தநோக் கினர்கை வாயிற் புடைத்தழு திரங்க வள்ளல்
திருந்திய சென்னி யேபோற் சென்னியொன் றியற்றி யீந்தான்
தெரிந்துநூல் பலவுந் தேர்ந்தோன் சிந்தைநோய் முழுது மாங்கே
இரிந்தழிந் தொதுங்கி யேக வேற்றனன் வியந்து சாற்றும். (உஎஅ)

பெருமைசேர் மயனோ வன்றிப் பிரமனோ பிரமன் றானும்
ஒருபொருள் போல வேறொன் றுருற்றுத லில்லா மாண்பால்
அரியவ னீயே தானெனன் றவனிவிட் டகன்றான் கொல்லோ
உரைசெயற் கரியே னென்று வுவந்துரைத் தெடுத்துச் செல்வான்.

---

உஎச. வாரணம் - யானை. வேதன் - பிரமன். நாரணன் - விட்டுணு. அணங்கு - துன்பம். வை - கூர்மை.

உஎஎ. தோற்றம் - தோல்வியுற்றோம். கந்தி - கமுகு. பான்மடல் - பாதிமடல்.

உஎகூ. மயன் - தேவதச்சன். உருற்றுதல் - செய்தல். அவனி - பூமி.

## இளங்குமணன் அவைக்களம்.

அப்பொழு தநீதி யெல்லா மமைந்தொரு வடிவு கொண்டே
இப்படி புரக்க வந்த தென்னலா மிளங்கோ வென்றும்
முப்பொழு துணர மைச்சர் முதுபுரோ கிதர்தற் சூழச்
செப்பரு மரிய ணைக்கட் சேர்ந்திரு மாந்தி ருந்தான். (உ௮௦)

இற்றைநாட் டிருந்து வானெஞ் சினிவரு கின்ற தாய
பிற்றைநாட் டிருந்து வானென் றெண்ணியே பிறியா துற்ற
முற்றுண ரமைச்ச ரேனோர் முகத்தினைக் குறித்து நோக்கிச்
செற்றமே பெற்ற வுள்ளத் தீயன்மற் றிதனைச் சொல்வான். (உ௮௧)

## இளங்குமணன் கவலையாற் புலம்பல்.

முன்னவன் றன்னைப் பண்ணுண் முன்னரே கானிற் சேர்த்தேன்
அன்னவன் றலையை வீட்டி யங்கையிற் கொடுவந் தார்க்குப்
பொன்னொரு கோடி நல்கப் புந்திகொண் டிசைத்தேன் யாரும்
இன்னமுங் கொணரக் காணே னெவ்வுழி வதிகின் றானோ. (உ௮௨)

வினைபகை யென்றி ரண்டு மெலிந்தன வென்றி கழ்ந்து
நினைவுறிற் றீயெச் சம்போ னின்றொரு பொழுது நேர்ந்தால்
இனைவுற வருத்து மென்றே யிசைத்தனர் நீதி நூலோர்
அனையனை யழித்தா லன்றி யென்மன மாறா தென்றான். (உ௮௩)

ஆங்கவ னுரைத்த மாற்ற மவையுளார்க் கழல்வே லென்னத்
தீங்குறச் செவியிற் சென்று சிந்தையைத் தீக்க நொந்து
பாங்கிலான் கொடிய னிந்தப் பாதக னவையை விட்டு
நீங்குத னெறியென் றுள்ளே நினைந்தன ரிருந்த காலை. (உ௮௪)

---

உ௮௦. இப்படி - இப்பூமி. அரியணை - சிம்மாசனம்.

உ௮௧. இற்றைநாள் - இந்நாள். பிற்றைநாள் - பின்னாள். செற்றம் - பகை.

உ௮௨. எவ்வுழி - எவ்விடம். வதிகின்றான் - தங்குகின்றான்.

உ௮௩. மாற்றம் - சொல். அவை - சபை. பாங்கு - நன்றி. காலை - சமயம்.

தேவர்க ளணியும் பூவுஞ் சித்திர நூலோர் தீட்டும்
பூவுநேர் தலைகைக் கொண்ட புலவர்கோ னகரம் புக்கு
மாவலி யமணன் கோயில் வாயிலார்க் குரைப்ப வன்னார்
காவலன் றிருமுன் சென்று கழறுவான் கடுகிச் சென்றார். (௨௮௫)

அரசபூ பதியே நும்மு னவன்சிர முறுகை யுற்றோன்
ஒருவனின் கோயில் வாயி லுற்றன னென்ன லோடும்
பெரிதக மகிழ்வுற் றின்னே பெயர்ந்தவற் றருதி ரென்று
வரவெதிர் நோக்கி நின்றான் மறலியை யனைய நீரான். (௨௮௬)

## போலித்தலை கொண்டு புலவர் இளங்குமணனிடஞ் சேர்தல்.

பாருளோ ரெவருங் கண்டு பதைபதைத் தழுது விம்மிக்
காரினீ ரென்னக் கண்ணீர் களகள வுகுத்து நையச்
சோரிநீர் சொட்டுஞ் சென்னி தூக்கிய கரத்தி னோடும்
போரினே ரில்லான் முன்னர்ப் புகுந்தனன் புலமை மிக்கான். (௨௮௭)

## போலித்தலையைக் கண்டு இளங்குமணன் புலம்புதல்.

கண்ணுறக் கண்ட பின்னோன் கல்லினுங் கடிய நெஞ்சம்
புண்ணுறப் புலர்ந்து நொந்து புழுக்கமுற் றயர்ந்து சாய்ந்து
மண்ணுறப் புரண்டு கண்ணீர் வாரியுட் குளித்து வாய்விட்
டண்ணலே யரசே யென்று வழுதுளங் குழைய லுற்றான். (௨௮௮)

ஐயகோ வினியென் செய்வே னருயிர்த் துணைவா வென்பான்
பொய்யினின் றலையிவ் வாறு போவதே யென்பான் பூவின்
மெய்யொழிந் ததுவோ நின்றன் மெய்யொழிந் ததனு லென்பான்
வையகத் தவர்காள் யானு மாய்குவன் காண்டி ரென்பான். (௨௮௯)

தலையெலாங் கைக ளாரத் தடவுவான் முகத்திற் சேர்ப்பான்
நிலமிசைத் தூணின் மீத்தன் னெடுஞ்சிரந் தாக்கி மீள்வான்
உலகில்யான் பிறந்த திப்பே றுறுவதற் கேகொ லென்பான்
பலபல புலம்பித் தேம்பிப் படிந்துய ரளப்பார் யாரே. (௨௯௦)

---

௨௮௬. மறலி - இயமன். நீரான் - தன்மையையுடையான்.
௨௮௯ மெய் . சரீரம். வையகம் - உலகம்.

### அவைக் களத்தார் புலம்பல்.

அவ்வுழி னகரு ளாரு மமைச்சரும் பிறருங் கண்டு
கவ்வையிட் டழுது கண்ணீர் கலுழ்தரு முகத்த ராகி
வெவ்வுயிர்த் தயர்த்து விம்மி மெய்ந்நடுக் கெய்தி மாழ்கி
இவ்வகை செயலென் றெண்ணா திரங்கினர் புலம்பி நின்றார். (உகூக)

ஈசனிங் கிலையோ வென்பா ரிவன்கொலோ துணைவ னென்பார்
பேசுவ தினியென் னென்பார் பெய்யுமோ மழைதா னென்பார்
ஆசையை யாசைக் கீந்தோர்க் கருள்பொறை யன்பு பண்பு
நாசமா மன்றிச் சற்று நண்ணுமோ வென்பார் நைவார். (உகூஉ)

கரிபெற விரும்பித் தேவர் காவெட்டி யெரிப்பார் போல
இரணியம் விரும்பிக் கோமா னிருந்தலை கொண்ட பேதை
விரவுமுட் பகைபோன் மென்பார் மிளிர்தவ மிதுவோ வென்பார்
அரகர வென்று கையா லானனத் தறைந்து வீழ்வார். (உகூங)

இத்தனை தீங்குஞ் செய்திட் டேங்குவன் காண்மி னென்பார்
அத்தனே யரசே யெங்க ளாருயிர்த் துணையே யென்பார்
இத்தரை விடுத்து நின்பா லெய்துவோ மென்பா ரந்தோ
எத்தனை துயருண் டெல்லா மெய்திய திவர்பா லம்மா. (உகூச)

முழுமுர சொலியுஞ் சங்க முழங்குபே ரொலியு மாதர்
குழுநட வொலியும் வீணை கூரிசை யொலியும் வேதம்
மொழிகுந ரொலியு மாக முகில்கட லொலியும் பின்னா
அழுமொலி யொன்றே யுற்ற தந்நக ரிடையவ் வேலை. (உகூரு)

முன்னவன் றலையைக் கொய்த முனைக்கடு வாளினாலே
என்னபுன் றலையை யுங்கொய் திடுவனென் றெழுந்தான் பின்னோன்
அன்னையி னுதர மொன்றி லவதரித் தவர்வே றாகித்
துன்னினுங் கடையி லன்பு தோய்வுறு தொழிவர் கொல்லோ. ()

### இளங்குமணன் றன்னுயிர் துறப்பக் கருதல்.

கொய்யவாள் புவிக்கு வேந்தன் கொண்டதும் பிறவு நோக்கி
ஓய்யெனக் கவிக்கு வேந்த னுற்றுவாள் பற்றி நீக்கி
ஐயகே ளெனது முன்னோ னணிச்சிரம் போயிற் றென்று
கையற வெய்தே னஞ்சீர் கணித்திலாய் கரைதுங் கேட்டி. (உகூஎ)

---

உகூஉ. ஆசையை - விருப்பை. ஆசைக்கு - பொன்னுக்கு.

உகூஎ. கையறவு - துன்பம். கரைதும் - சொல்கிறோம்.

### புலவர் தமது பெருமை கூறித் தேற்றல்.

நின்னர சிருக்கு நாட்டை நிகழ்த்துபேர் முதற்கொள் பாட்டை
முன்னொரு பனவற் கீந்து முதல்வனோர் புலவ னாகி
மன்னிய மதுரைச் சங்க வாணரான் மதிக்கப் பெற்றேம்
சொன்னவில் தமிழ்நூன் முற்றுந் துகளறக் கற்று வல்லேம். (௨௯௮)

செந்தமிழ்த் தெய்வத் தன்மை தெளிந்திலாய் முன்னக் கீரர்
பைந்தழைப் பொழிற்றென் கூடற் பட்டிமண் டபத்தார்க் காக
முந்தவே யொருவன் வாணாள் முடியமற் றொருவன் வாழச்
சிந்தைசெய் துரைத்த பாடற் றிறமுல கறிந்த தன்றே. (௨௯௯)

பற்பல பாடை மாட்டும் பரவுபன் னீதி நூல்சொல்
விற்பனப் பெருமை தாட்டி வியன்றமிழ்க் கவிதை கூறிப்
புற்படு துண்டஞ் செந்தேம் பொதிகனி யீயச் செய்த
அற்புத மறியா ருண்டோ வடுக்கலைக் கடுக்குந் தோளாய். (௩00)

---

௨௯௯. இக்கவியிலடங்கிய கருத்தைத் தொல்காப்பியம் பொருளதிகாரம் ௭௬௩-ம் பக்கம் ௪௯௧-ம் சூத்திரவுரையில் வரும் "ஆரிய நன்று தமிழ் தீதெனவுரைத்த காரியத்தாற் - காலக்கோட்பட்டானைச் - சீரிய அந்தண் பொதியி லகத்தியனாராணையாற்-செந்தமிழே தீர்க்கசுவாகா" எனவும், "முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி, பரணர் கபிலரும் வாழி, அரணிய ஆனந்த வேட்கையான் வேட்கோக்குயக்கோடன், ஆனந்தஞ் சேர்க சுவாகா" எனவும் வருவனவற்றாற் காண்க.

௩00. ஒளவையார், அங்கவை சங்கவை என்பாரைத் தெய்வீகன் என்னுஞ் சேரமானுக்கு மணஞ்செய்வித்த காலத்தில். சேர, சோழ, பாண்டியரென்னும் அரசர் மூவரையும் கல்யாணத்திற்கு வரவழைத்து அவர் முன் பற்பல அற்புதஞ்செய்ய நினைந்து, தம் முன் கிடந்த பனந் துண்டமொன்றை நோக்கி,

"திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனு
மங்கைக் *கறுகிட வந்துநின் றார்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே"

என்னும் பாடலைக் கூற, அத்துண்டம் பெருமரம் போலவாகி மூவரசர்க்குமாக மூன்று பழத்தை யளித்துப் பேரதிசயந் தந்தது என்பர்.

---

* அறுகிடுதல் - ஓர் மணவினை.

கடல்கரை கடப்புற் றாலுங் கதிரவன் வடக்குற் றாலும்
புடவிகீழ் மேலுற் றாலும் பொருப்பெலா நடைபெற் றாலும்
வடவைதான் பனியா னாலு மற்றது தீயா னாலும்
திடமொடு நமது வாயாற் செப்புதன் மாறா தன்றே. (௩௦௧)

பட்டமா மரந்த ழைக்கப் பாடுவே மிதுவென் முன்னே
நட்டதோர் கல்லே ரூன்றி நளிர்தளிர் கிளைமீக் கொண்டு
சொட்டுதேங் கனிக ளீயச் சொல்லுவே மரிதென் றொன்றும்
விட்டிலே மெதுவும் செய்வே மேலவர் நம்மின் யாரே. (௩௦௨)

நாமிருக் கவுநீ யஞ்சி நடுங்குவ தென்னை கையில்
தேமிருக் கவுமி னிப்புத் தேடுவா ருளரோ வாதி
யாமிருக் கறைந்த வாற்றா லரசுசெய் யண்ணன் சென்னி
காமுறப் பொருந்தும் யாமோர் கவிசொ லுங் கணத்தி னென்றான்.()

என்றவன் றாளில் வீழ்ந்த விளையவ னிருகை கூப்பி
முன்றவப் பயன்போற் போந்த முதுமொழிப் புலவ ரேறே
இன்றெனக் குரிய யாவு மீகுவ னாவி யேனும்
நன்றுமக் களிப்ப னண்ண னல்லுயி ரருண்மி னென்றான். (௩௦௪)

என்னுமவ் வேலை சொல்வேந் திளையவ னும்முன் னாவி
துன்னுமே லவற்கு மோலி சூட்டிமுன் போலன் பாக
மன்னுதி கொல்லோ வென்ன வள்ளலீ ரெதுசொற் றாலும்
அன்னதென் பணியா மென்றா னன்பினுக் கரிதொன் றுண்டோ. ()

பின்னவ னனைய கூறப் பெருந்தமிழ்ப் புலவ ரேறு
கன்னல்கல் லானை யுண்ணக் கடைக்கணித் தருளுஞ் சித்தர்
பொன்னடி மலரைப் போற்றிப் புகழ்ந்துகை தலைமேற் கூப்பி
என்னையாள் பனுவ லாட்டி யிணையடி யிறைஞ்சி யேத்தி. (௩௦௬)

மெய்த்தலை வள்ள லாக விளங்கிய குமணை நாம
உத்தமன் றிடச ரீர முறுசிரஞ் சீவி யாக
வைத்தருள் புரிக வென்ன வனைந்தபல் கவிதை பாடி
இத்தலை பொருத்தி மீள்வ லெனவிரைந் தகன்று சென்றான்.(௩௦௭)

---

௩௦௧. புடவி - பூமி. வடவை - வடவாமுகாக்கினி.
௩௦௩. இருக்கு - வேதம்.
௩௦௫. மோலி - கிரீடம், பணி - வேலை.
௩௦௬. பனுவலாட்டி - சரசுவதி. இணை - இரண்டு.

### குமணனைக்காண இளங்குமணனை யழைத்தல்.

சென்றுகா னகத்துச் செங்கைச் சென்னியை மறைத்து வைத்து
நன்றென விளவல் மாட்டு நணுகிநும் முன்னோன் றன்னை
மன்றலந் தெரியற் றோளாய் வனத்திடைப் புகுந்து காண்டி
யென்றசொற் செவியிற் பெய்தா னின்னமு துகுத்தா லென்ன. ()

### இளங்குமணன் மகிழ்ந்துசெல்லுதல்.

அடம்பயி லரச ரேறு மமணன்றன் னகத்தின் மேன்மேற்
படர்ந்தெழு களிப்பின் மூழ்கிப் பருப்பத மெவையு நாணத்
தடம்புயம் பூரிப் பெய்தித் தனிமுக மலர்ச்சி மேவிக்
குடம்பையி னடைந்த தாயைக் கூடிய பார்ப்பை யொத்தான். ()

ஆடுவன் பாடு வன்னென் னுவியைப் பெற்றே னென்பான்
கூடுவன் பிரிவன் போவன் குதிப்பன்பின் வருவன் றன்னைத்
தேடுவன் சிரிப்ப னுள்ளஞ் செருக்குவ னெவர்க்குஞ் செங்கை
சூடுவன் றுதிப்பன் நிற்பன் றோத்திரம் பலவுஞ் சொல்வன். (௩௧௦)

இன்னதான் செய்தா னென்ன விசைக்கொணு மகிழ்ச்சி யாங்கள்
தன்னது விருப்பின் மிக்குத் தான்குடித் தவனே யாகி
முன்னுறு புலவன் பாத முளரியம் போதின் வீழ்ந்து
பின்னெழுந் தன்பி னேக்கிப் பெருந்தமிழ்ப் புலவ ரேறே. (௩௧௧)

எனதுட லுயிர்பொன் சுற்ற மெய்திய வாழ்வோ டெல்லாம்
உனதெனப் புரிந்தா யானிற் குறுற்றுமோர் கைம்மா றுண்டோ
அனதுற வெண்ணி லென்போ லறிவிலா ரில்லை யீசன்
றினமருள் புரிதற் கியாரே செய்குவர் கைம்மா றையா. (௩௧௨)

யாவுநீ கொடுத்தா யேனு மென்னுட னினையி லாத
கோவுறை கானத் தெய்திக் கொற்றவற் கூட்டிவந்து
மேவியிவ் வரசு கொள்ளும் விதமின்னே புரிதி யென்றான்
ஏவரு மினைய வாறே யிறைஞ்சின ரவனு நேர்ந்தான். (௩௧௩)

---

௩௦௮. இளவல் - தம்பி. மன்றல் - மணம். தெரியல்-மாலை.

௩௦௯. அடம் - வலி. தடம் - விலாசம். குடம்பை-கூடு. பார்ப்பு - குஞ்சு.

### நகரினர் எழுகை.

எழுந்தனபல் தூரிய மெழுந்தனபல் காளம்
எழுந்தனபல் சங்கின மெழுந்தன பதாதி
எழுந்தனபல் வாசிக ளெழுந்தனப ஞகம்
எழுந்தனபல் தேரின மெழுந்தனபல் குடைகள். (௩௧௪)

கவரிக ளெழுந்தனபல் காவல ரெழுந்தார்
துவரிதழ் செறிந்தபல தோகைய ரெழுந்தார்
இவரிவ ரெழுந்தனர்க ளென்பதெவ ஞரே
அவரவர் கொளும்பயனி லாசைமரு வாரே. (௩௧௫)

முன்னுறுவர் பின்னுறுவ ராகவவர் மொய்ப்பார்
அன்னவர்கள் பின்வருவ ராய்விட நடப்பார்
என்னவிசை மானுமிவ ரேகும்விசை யென்றால்
மின்னனுறு வேகமதின் மேலும்விசை யாமால். (௩௧௬)

### குமணனிருக்கையை யாவருமடைதல்.

வந்துதிக ழுக்கிரியின் வள்ளலுறை கானம்
அந்திலணு குற்றன ரருட்கடவுள் பாதம்
சிந்தையி னிருத்திவளர் தெய்வதரு வேயாம்
எந்தைகும ணப்பெருமனென்பவன்மு னுற்றார். (௩௧௭)

தம்பிவினை யாளரொடு சார்ந்தவர்கள் யாரும்
அம்புவியின் வீழ்ந்தவர்க ளாகியவ ணின்றான்
செம்பத முடித்தலை சிறப்புற வணிந்தார்
கும்பையெதிர் கண்டுபுகழ் கொண்டதிற லோனும். (௩௧௮)

ஒவ்வொருவ ருக்குமியை வுற்றவுப சாரஞ்
செவ்விதி னுரைத்தருகு சேர்த்தியொரு மித்தே
இவ்வயி னடுத்தவகை யென்னென விசைத்தான்
அவ்விய மொழித்ததிற லண்ணல்பின் வழுத்தும். (௩௧௯)

௩௧௪. தூரியம் - வாத்தியம். பதாதி-காலாள். வாசி - குதிரை. நாகம்-யானை.

௩௧௫. துவர் - பவளம்.

௩௧௮. கும்பு - கூட்டம்.

௩௧௯. செவ்விதின் - செவ்வையாக. வயின்-இடம். ஔவியம்-பொறாமை. பின்-தம்பி.

### இளங்குமணன் தன் பிழையைப் பொறுத்து அரசு செய்ய வரும்படி குமணனைவணங்கிக் கூறல்.

தெளியாது சிறியேன்செய் தீமையெலாம் பொறுத்தருளி
ஒளியாரு மணிமுடிகொண் டுலகமெலாந் தனிபுரந்து
வெளியாம்பொள் ளறிவேனு மிக்கபல முதியோருங்
களியாக வுயிர்வாழக் கடைக்கணித்துக் காத்திடுவாய். (௩௨0)

தெரியாமற் சிறியோர்கள் செய்தபிழை யத்தனையும்
பெரியார்கள் பொறுப்பதுவே பெருந்தகையாம் பெருந்தகையாய்
அரியாளும் பேரணையி லண்மியொரு புன்றலைய
நரியாளும் பான்மையதே நானிருந்து கோனடத்தல். (௩௨௧)

நினைக்கொல்லற் கியன்றவித நினைக்குந்தோ றென்மனமே
எனைக்கொல்லு மெனிற்பின்னை யென்னெடுத்துப் புகன்றிடுவேன்
மனத்துன்னி மறுப்பினுயிர் மாய்ப்பெனென் றழுதிரங்கிப்
பொனைப்பன்னும் பூம்பாதப் போதுபற்றி வீழ்ந்தனனால். (௩௨௨)

### குமணன் அரசாட்சி விரும்பாமை.

கவிவேந்து முதியோருங் கசிந்துருகி யவைபுகன்றார்
தவவேந்த னவர்செய்கை தனைநினைந்து தம்பியையுங்
குவிவேய்ந்த காத்தரையுங் குறித்தருணோக் கஞ்செலுத்திப்
புவிவேந்த னுவிருந்த பொறைநீக்கிக் களிக்கின்றேன். (௩௨௩)

விலங்கொடித்து விடுத்துவந்தேன் மீட்டுமது வேட்பேனோ
நலங்கொடுக்கு மமுதுண்போ னஞ்சருந்தப் புகுவானோ
புலங்கொடுக்கும் பேரறிவீர் புகல்வதுதா னழகாமோ
இலங்கொடுக்குஞ் சுகந்தவத்துக் கெட்டுணையு மிணையாமோ. (௩௨௪)

எம்பிமுன மெய்ப்பிழையு மியற்றினனென் றெண்ணுகிலேன்
பம்பியிவண் புரிவதுதான் பாரித்த கொடுந்துயராங்
கம்பமத கரியனையான் காத்தலையுற் றிடயானும்
இம்பருறு காத்தலையுற் றிருக்கவரந் தருதியென்றான். (௩௨௫)

---

௩௨௩. குவிவு - குவிதல். ஏய்ந்த- பொருந்திய. பொறை-சுமை.

௩௨௪. அருந்த - உண்ண. இலம் - (இல்லம்) இல்லறம்.

௩௨௫. பம்பி - நெருங்கி. பாரித்த - பெரிய. காத்தலை - காவற்றொழிலை. இம்பர்-இவ்விடம். காத்தலை-மரத்தடியில்.

### புலவராதியோர் மீட்டும் குமணனிடங் கூறல்.

கேட்டுமன நடுநடுங்கிக் கெழுமுவகை யோடுவந்த
நாட்டவர்க ளனைவருந்த நாட்டவழி நீரொழுக
மீட்டுவரா யெனின்யாமு மீளேமிங் குடனிருந்து
வாட்டியுயிர் விடுப்பமென்றார் வானர்பிரா னிதுபுகல்வான். (௩௨௬)

விளியாது தினந்தினமு மீதோங்கப் புகழ்வளர்க்கும்
அளியாரும் பெருங்கருணை யரசேநீ யெவ்வெவர்க்கும்
ஒளியாது கேட்டவெலா முவப்பினொடு கொடுத்தியன்றோ
களியாரு மலரலங்கற் கற்பொருவுந் திணிதோளாய். (௩௨௭)

நின்றலையென் றலையாக நினக்கென்னை சுதந்திரமென்
நன்றலையின் முடிபுனைய நான்கருதிற் றடையுளதோ
பொன்றலையில் புகழ்மௌலிப் பொன்றலையாய் மறுத்துரைத்தல்
என்றலைநீ கற்றதிவ ணெவரிடத்தி லெனவிசைத்தான். (௩௨௮)

### குமணன் நகரத்துக்கு வருதல்.

காவலனு முதுபுலவன் கட்டுரையு மமார்தொழுந்
தேவனருள் விளையாடற் செய்கையுந்தன் மனத்துன்னி
ஆவதிது வேபாயின் ஆகுகவென் றருள்புரிந்தான்
ஓவியந்தா னுவிபெற்று லொத்தெழுந்தா ரனைவோரும். (௩௨௯)

ஆடுவா ரகக்களிப்பி னளவைபறி யாராகிப்
பாடுவார் நெடுந்கடந்தோட் பார்வேந்தன் பாதமுடி
சூடுவார் தொழுதெழுவார் தோத்திரங்கள் சொலியொருங்கு
கூடுவார் கொண்டமகிழ் குறித்துரைக்கக் கூடுவதோ. (௩௩௦)

ஏழிரண்டு மீரிரண்டு மென்றபல வாச்சியமுஞ்
சூழிநெடுங் கரவரையுந் துனைபரியும் வீரர்களும்
பாழிபொலி யிடுதலொடு பாவலரும் வேதியரும்
வாழியென வேத்தொலியு மாலொலிக்கு மேலொலிக்கும். (௩௩௧)

---

௩௨௬. நாட்டம்-கண்.

௩௨௭. விளியாது-கெடாது. கல்- மலை. பொருவும்-ஒத்த. திணி-வலி.

௩௨௮. பொன்றல்-கெடுதல். மௌலி - முடி.

௩௨௯. கட்டுரை - உறுதிச்சொல். ஓவியம்-சித்திரம்.

௩௩௧, வாச்சியம் - வாத்தியம். சூழி-முகபடாம்- துனை-நெருங்கிய மால்-மேகம்.

## வேறு.

இவ்வகைபல் லியங்களிப்ப வேழுயருங் குஞ்சரமீ திறைவ னேறிச், செவ்விபெறு தமிழோனை முன்னிருத்திப் பின்னவன்பின் சேர்ந்து மேவ, அவ்வவருக் கேற்றவிதத் தவரவர்க ளருகாக வணு கிப் போதக், கௌவைநெடுங் கடற்புவிமான் களிப்புறத்தன் னுமநகர்க் கண்ணுற் றானால். (௩௩௨)

மதகரியொன் றணித்தாக வருவதன்முன் மணியோசை வந்தா லோத, உததியுடைப் புடவிவள ருயிர்களுக்கோ ருடலாகி யுய்யத் தாங்குஞ், சதமகனேர் பாணர்பசித் தரியலனுங் குமணனகர் சார்வா னுற்ற, அதையறிந்த திருநகரத் தவர்கணக ரலங்கரிப்பா னமைந் தார் மன்னோ. (௩௩௩)

### குமணநகரத்தார் நகரலங்கரித்தல்.

பித்திகைத் தலங்க டோறும் பெருஞ்சுதை தீற்றி யாண்டுஞ்
சித்திர மெழுது வார்கள் செழுந்தரை யெங்குஞ் சார்ந்தால்
ஒத்துற மெழுகித் தெற்றி யுழைச்செழுங் குங்கு மத்தால்
மொய்த்தநற் கோல மப்பேர் மொழிவதற் கேற்பச் செய்வார். ( )

பாலிகை பரப்பி வைப்பார் பசுந்தழை விரிந்த வுச்சி
சாலநீர் நிறைந்த பொன்னந் தசும்புவே திகையிற் சேர்ப்பார்
மேனுலாம் பூகந் தோகை விரிதலை யரம்பை யெல்லாங்
கோலமா ரெழுக்க டோறுங் கூட்டுவார் நாட்டுவார்கள். (௩௩௫)

---

௩௩௨. இயம்-வாத்தியம். போத-வர. கௌவை - ஒலி. தன்னாமநகர்-குமணபுரி.

௩௩௩. ஓதம் - நீர், உததி-கடல். உடை-ஆடை. சதமகன் - இந்திரன்.

௩௩௪. பித்திகை - சுவர்த்தலம். சுதை-சுண்ணம். தீற்றி-பூசி. தெற்றி-முற்றம். அப்பேர்மொழிவதற்கேற்ப-கோலமாக, அழகாக.

௩௩௫. பாலிகை - முளை. தசும்பு-குடம். வேதிகை-திண்ணை. பூகம்-கமுகு. எழு-தம்பம்.

### வேறு.

வாயினெடுந் தோரணங்கண் மாட்டுவார் தொங்கல்பல வகையிற் சேர்ப்பார், பாயமணி மறுகினடைக் காவணமு மதிற்கமுகம் பாளை தென்னை, மேயபழக் குலையினமும் பெண்ணைநெடுஞ் சரமுமணி விதத்திற் கோப்பார், மீயுயர்வி தானமும்பொன் மணியினமு மமைத்தழகு விளங்கச் செய்வார். (௩௩௬)

மாமலரும் பனிநீரு மிகத்தெழித்துப் புழுதியெலா மாற்றுவார்கள், காமர்மலி பதுமைநிரை விளக்கமைப்பார் கமழ்தேத்தார் கட்டிக் கோப்பார், நாமநவக் கோள்களையுஞ் சிறைபுரிந்த விதமிதென் நவிலு மாறு,தோமில்பல மணிச்சரங்க டேக்குவார் மனமகிழ்ச்சி தேக்கு வாரால். (௩௩௭)

ஒவ்வொருவ ராத்தமது வேந்தன்வருங் களிப்பையெடுத் துசாவு வார்பின், அவ்வவர்கண் மாதரொடு புனறோய்ந்து புதியவுடையணிகள் வேய்ந்து, செவ்விபெறு சந்தவகை தீற்றியெதிர் நோக்கினராய்த் திகழுங் காட்சி, இவ்விதமென் றிசைப்பதெவன் மாடமெலா மணமாட மென்ன லாமால். (௩௩௮)

### குமணன் குமணபுரியை யடைதல்.

ஐந்தருவு மிருநிதியு மாமணியுஞ் சுரபியுந்தெள் ளமுதும் யாண்டும், நந்தலிலாப் பலதேவர் குழுவுமெலா மொருங்கெய்தி நண்ணி யாங்கே, வந்தனனெம் பெருங்கவிகை மகராச னெனச்சின்ன வகைக ளார்ப்பச், சந்தமலி கோக்குமணன் வந்தடைந்தான் றன்பேரூர் தன்னை மாதோ. (௩௩௯)

வேதியரு முதியவரும் விரும்பியடுத் தாசிமொழி விளம்ப வண்ணார், பாதமலர் தலைவணங்கிப் பணியணிந்த நீலகண்ட பரம வேத, நாதருறை சினகரத்துக் கோபுரத்தை யெதிர்வணங்கி நல்லோர் சுற்றிப், போதநடந் ததங்கரனை யறுமுகனை யெழுமகிழ்ச்சி பொலியப் போற்றி. (௩௪௦)

---

௩௩௬. வாயில்-வாசல். பாய்-பரந்த. மறுகு-தெரு. காவணம் - பந்தல். பெண்ணை - பனை. விதானம்-மேற்கட்டி.

௩௩௭. காமர் - அழகிய. நாமம்-பெருமை. தோம்-குற்றம்.

௩௩௮. உசாவுவார் - விசாரிப்பார்.

௩௩௯. சுரபி - காமதேனு. நந்தல் - கெடுதல். கவிகை - கொடை. சந்தம் - அழகு.

௩௪௦. ஆசி - வாழ்த்து. சினகரம் - கோயில்.

போதுறையும் வேதியற்கு மீதுறையு முடுபதிக்கும் புனித ரா
கிக், கோதகல்பன் முனிவருக்குங் கொடுத்தவருண் மடுத்துறுமெ
ண் குணத்தி ஞனை, ஆதிநட ராசனைமெல் லடிமலரை முடிமலரா
வணிந்து போற்றிப், பூதிதரும் பானிறத்துப் பூதிதரப் பாலமுறப்
பூசிப் போந்து. (௩௪௧)

தாதிவருங் குழலுமையாள் பதம்பணிந்து தண்டியுடன் சயிலா
திக்கோன், பாதமுறைப் படிவணங்கி யடம்புரியு மிடங்கருயிர் படுக்
கப் போந்த, தீதகன்ற கரிவரத ராசருறை திருக்கோயில் சேர்ந்து
மாயன், சீதமலி செழுங்கமலத் திருவடியைச் சேவித்துத் தெரிசித்
தேத்தி. (௩௪௨)

பெருத்தவினை யனைத்தினையுந் தீர்த்தமெனத் தீர்த்தமெனும்
பிரசா தத்தை, வருத்தமற வாங்கியுண்டு சிரந்தெளித்துப் பெருமகி
ழ்ச்சி வயத்த னாகிக், கருத்துளவ மாலகற்றுந் திருத்துளவ மாலையி
ரு காத்துங் கொண்டு, தரித்தமுடி யினும்விளங்க விரித்ததிரு வடி
சாத்துந் தகவும் பெற்று. (௩௪௩)

திருக்கோயில் வலம்புரிந்து புறம்போந்து திருமதிலைச் சேவித்
தேத்தி, உருக்கார்வ முடன்சூழுஞ் சுற்றமுட னரமனைப்பா லுற்
றுத் தெய்வ, மருக்காலு மலராதி மங்கலங்கள் பலபுனைந்து மணியும்
பொன்னும், பெருக்காகு மரியணைமேல் வலாரியென வீற்றிருந்தான்
பெரியோர் வாழ்த்த. (௩௪௪)

### குமணன் முடிபுனைதல்.

மங்கலவாத் தியமுழங்க வானவர்பூ மழைபொழிய மகதர் பா
ட, எங்குமுளார் சயசயவென் றேத்தெடுப்ப விளங்குமண னீய வா
ங்கித், துங்கமுறு தமிழ்வேந்தன் றிருக்கரத்தான் மணிமுடியைச்
சூட்டத் தாங்கி, அங்கணிருந் தரசுசெய்தா னவரவர்க்குத் தகுவரி
சை யனைத்து மீந்தான். (௩௪௫)

---

௩௪௧. உடுபதி - சந்திரன். பூதி - ஐசுவரியம். பாலம் - நெற்றி

௩௪௨. சயிலாதி - நந்திதேவர். சீதம் - குளிர்.

௩௪௩. மால் - மயக்கம்.

௩௪௪. வலாரி - இந்திரன்.

௩௪௫. மகதர் - புகழ்ந்து பாடுவோர்.

## குமணன் புலவர்க்குப் பரிசு அளித்தல்.

கற்றவர்தம் பெருமானைக் கரம்பிடித்துப் பொருளனைத்துங் காட்டி யிங்ஙன், உற்றபொரு ளனைத்தையுநீ ருடையீரா யிச்சைவழி யுய்ப்பீ ரென்ன, மற்றவனீ கொடுப்பதுவே சாலுமெனக் குமண னுங்கை மலரான் வாரித், துற்றவொளி மணிக்குவையு நிதிக்குவை யும் பொன்னுடைத் தொகையு மற்றும். (௩௪௬)

கல்விவலோன் போதுமிதே போதுமெனப் பலபலகாற் கழறத் தந்து, வல்வலிசேர் மதமாவும் பாய்மாவு மேவலரும் வரிசைக்கேற்ற, நல்விருதும் பலகொடுத்துச் செலவொழிக்க முடியானாய் நாவல் லோன்பின், சொல்வரவே முடிநடந்து விடைவாங்கித் திரும்பிவந்து சூழல் சேர்ந்தான். (௩௪௭)

## குமணனும் இளங்குமணனும் ஒன்றி வாழ்தல்.

முடிவேந்த ரடிதாழ்ந்து முறைமுறையே திறையளக்க முன்னீ ராடைப், படிதாங்கி மன்பதைக ளின்பமுறப் பல்வளமும் பல்கப் பாணர், குடிதாங்கி யருள்குமணக் கோமானும் பின்னவனுங் குறிக்குந் தன்மக், கொடிதாங்கி வாண்முகத்துக் கிருவிழிபோற் குமணபுரி குலவ வாழ்ந்தார். (௩௪௮)

உடலுயிர்போன் மணியொளிபோன் மலர்மணம்போ லிருவர் மன மொன்றே யாகக், கடலினிடை யணைவகுத்த ராகவனும் பரத னுமுன் கருத்தொன் றாகிப்,புடவிபுரந் திருப்பரிவர் போலவென வுல கமெலாம் புகன்று போற்ற, நெடியவனு மிளையானு முளமகிழ்ந்து புவிபுரந்தார் நெடுநாண் மன்னோ. (௩௪௯)

## வாழ்த்து.

மன்னவர்செங் கோல்வாழ்க மழைபொழிக வளம்பல்க
நன்னரற மீதோங்க நற்றமிழெங் கணுஞ்செழிக்க
இன்னசரித் திரமுணர்ந்தோ ரெல்லவரு மின்பமுற
பன்னுதிரு நீற்றுநெறி பார்முழுதும் பரவுகவே. (௩௫௦)

---

௩௪௬. உய்ப்பீர் - செலவிடுவீர். குவை - குவியல்.

௩.௪௮. திறை - கப்பம். முன்னீர் - கடல். படி - பூமி. மன்பதை - மனிதர் கூட்டம். பல்க - நிறைய. வாள் - ஒளி.

௩௫௦. நன்னர் - நன்மை. பன்னு - புகழ்ப்பெற்ற.

## உரிமையாளர் வாழ்த்து.

அக்குமண னேயிவனென் றவனியெலாஞ் சொலற்கேற்ப
இக்கவிநூல் தனக்குரிமை யெய்துபெரும் புகழாளன்
முக்கனியின் சாறுகமழ் முறைசைநகர் வாழ்மகிபன்
தக்கபெருந் தகையெங்கள் சண்முகமால் வாழியவே. (௩௱௧)

குமணசரித்திரம் முற்றிற்று.

## குமரக்கடவுள் திருவடிகளே சரணம்.

---

௩௱௧. அவனி - பூமி. முக்கனி - வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி. முறைசைநகர் - முறையூர்.